
கடும் மழை
பக்கம் 09


கூட்டுப்பயிற்சி
பக்கம் 11


மீண்டும் மீண்டும்
பக்கம் 14


இலங்கை
பக்கம் 27



ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 131

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 23 வியாழக்கிழமை (05/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### பதில் பணிப்பாளர் நியமனம்

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமாக கலாநிதி திஸ்ஸ பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதியியல் பேராசிரியராக இவர் கடமையாற்றினார்.

### ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

சட்டவிரோதமான முறையில் 21 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த சந்தேகநபர்கள் இருவரும் ஓட்டோ ஒன்றுடன் நேற்றுமுன்தினம் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### குழந்தையை கிணற்றில் வீசிய தாய்

ஒருமாதக் குழந்தையைக் கிணற்றில் எறிந்து கொலை செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் திருமணமாகாத 17 வயது இளம் பெண் ஒருவர் தொடங்கொட பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொலைசெய்யப்பட்ட குழந்தை அவரது குழந்தை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

### நீதிவான் போர்வையில் நடமாடியவர் கைது

நீதிவான் மற்றும் பேராசிரியர் ஆகியோரின் போர்வையில் நடமாடிய ஒருவர் கொழும்பு கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து போலி ஆவணங்கள் சிலவற்றையும், நான்கு சிம் அட்டைகளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். 32 வயதான தெஹிவலை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### எல்லையற்ற வைத்தியர் குழு பணி நிறைவு

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவள சேவைகளை வழங்கி வந்த எல்லையற்ற வைத்தியர்கள் குழு, தமது பணிகளை நிறைவு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்துடன் தமது பணிகள் நிறைவடையும் என அந்த குழு தெரிவித்துள்ளது. கடந்த 18 மாதங்களாகக் கிளிநொச்சியில் செயற்பட்டு வந்த இந்தக் குழு, இதுவரையில் கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட 454 பேருக்கு உளவள ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இதேவேளை இந்த குழு, 333 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளதுடன், இதில் 7ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் பெற்றோர் பங்குபற்றி இருப்பதாக வைத்திய குழுவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீர்வை முன்வைப்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம்

## இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர் நாங்கள் நாடாளுமன்றில் சம்பந்தன் கர்ச்சிப்பு



கொழும்பு, ஏப்ரல் 5

சொந்த மண்ணில் தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. நீதி, நியாயம், சுயநிர்ணய உரிமை மற்றும் சமத்துவம் நிறைந்த ஜனநாயகம் ஏற்படுத்தப்படவேண்டும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் அரசு தமிழர் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜெனிவாத் தீர்மானம் கொழும்பை விழிப்படையச் செய்துள்ளது என்று 'இந்து' பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை அரசு தவறவிடக்கூடாது. 04

## வடக்கு மீனவர்கள் குழு விரைவில் இந்தியாவுக்கு

### ட்ரோலர் படகுகளின் அத்துமீறல் குறித்து அங்கு ஆராயும்

யாழ்ப்பாணம், ஏப்.5

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவது பற்றி ஆராய வடபகுதி மீனவர்கள் குழுவொன்று மிக விரைவில் இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அங்கு அந்தக் குழுவினர், இந்திய மீனவர் அத்துமீறலைத் தடுப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர்.

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தலைமையிலான வடபகுதி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளே இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர். 04

## கொழும்பில் தமிழ் குடும்பஸ்தர் வெள்ளை வானில் கடத்தல்

கொழும்பு, ஏப்.5

நவகம்புர பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது பிள்ளையை பாடசாலைக்குக் கூட்டிச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த பாலகிருஷ்ணன் ஆனந்தன் (வயது - 45) என்பவரே வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் ஆனந்தன் வீடு திரும்பும் போது அவருக்காக காத்திருந்த வெள்ளை 04

# பொறுப்புக்கூறுவதில் இருந்து இலங்கை தப்பிவிட முடியாது

### அடித்துக் கூறுகிறார் மங்கள சமரவீர



கொழும்பு, ஏப்.5

பொறுப்புக்கூறும் விடயத்திலிருந்து இலங்கை தப்பிவிட முடியாது. அந்த வகையிலேயே சர்வதேச ஒப்பந்தங்கள் அமைந்துள்ளன. சர்வதேச நீதிக்கு அப்பால் சென்று எந்தவொரு நாடாலும் செயற்படமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், ஒரு நாடு என்ற அடிப்படையில் இலங்கை தோல்வி கண்டுள்ளது. எனவே, அதை மூடிமறைப்பதற்கு அரசு தேசியக் கொடியைப் பயன்படுத்துகின்றது. இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த ரஷ்யாகூட நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசு 04

### சமரசிங்க எங்கே?

கொழும்பு, ஏப்.5

நடிகர் இல்லாத நாடகம் போன்று, ஜெனிவா சம்பந்தமான அமைச்சர் மஹிந்த சமரசிங்க இல்லாமலே 04

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் ஜூன் மாதத்துடன் நிறுத்தப்படும்

### மீள்குடியமர்வு முடியமுன் அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

இடம்பெயர்ந்த மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஜூன் மாதத்துடன் நிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வடக்கில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆயினும் 97 சதவீதமான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளதால் இந்த நிவாரணத்தை எதிர்வரும் 04

## அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு வவுனியாவில் அரசு எச்சரிக்கை

### தேவையற்ற விடயங்களில் தலையீடு செய்யக்கூடாது என்கிறார் திவாரட்ண

வவுனியா, ஏப்.5

அரச சார்பற்ற அமைப்புக்கள் தேவையற்ற தலையீடுகளில் ஈடுபடக்கூடாது. அளவுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தங்களது வேலைகளை மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் திவாரட்ண நேற்றுக் கடிந்துகொண்டார்.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர், வடமாகாணத்தின் சகல அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். முதலில் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே திவாரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச சார்பற்ற நிறுவனங்கள் 04

## இந்தியாவுடனான உறவை புலி வதந்தி பாதிக்கும்

கொழும்பு, ஏப்.5

''தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம்'', ''தமிழ்நாட்டில் புலிகளின் பெரும் பயிற்சி முகாம்'' என்றெல்லாம் பொதுமக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பிவிட்டு இந்தியாவுக்கு எதிராக மறைமுகமாக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளாலும் தேசிய நல்லுற 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் சிபார்சுகளை ஒரேயடியாக நிறைவேற்ற முடியாது

## நாடாளுமன்றில் பீரிஸ்

''ஆணைக்குழுக்கள் முன்மொழிந்த சிபாரிசுகளை எந்தவொரு உலகநாடும் இதுவரை முழுமையாக அமுல்படுத்தியதாக சரித்திரம் இல்லை. இதுதான் யதார்த்தமும் கூட. ஆணைக்குழு என்பது மக்களின் ஆணையைப் பெற்றதல்ல. சிபாரிசுகளை முன்மொழியும் கடப்பாடே அதற்குண்டு. இறுதியான தொரு முடிவை அரசே மேற்கொள்ள வேண்டும். அதேபோன்றுதான் நல்லிணக்க ஆணைக்குழுவும்.

நாம் அறிக்கையை ஏற்க மாட்டோம் எனக்கூறவில்லை. நடைமுறைப்படுத்தக்கூடிய சிபாரிசுகளை முதலில் அமுல்படுத்துவோம். இவற்றை ஒரேடியாக செய்து முடிக்க முடியாது. இது ஒர் தொடர்ச்சியான செயற்பாடாகும்.''

-இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் தமதுரையில் மேலும் கூறியவை வருமாறு-

இந்திய எம்.பிக்கள் 17 ஆம் திகதி இலங்கையில்

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமை எமக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது உண்மை தான். எனினும், இதனால் இலங்கை - இந்திய உறவில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. அந்த உறவு மிகவும் நெருக்கமாகவே இருக்கின்றது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர். இந்த தூதுக்குழுவினர் வடக்கில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும், மலையகத்திற்கும் செல்லவுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள தூதரகங்களை மூடி விடுவதாக அரசு ஒரு போதும் கூறவில்லை. உலகிலுள்ள 193 நாடுகளில் 46 நாடுகளில் மட்டுமே எமக்கு தூதரகங்கள் இருக்கின்றன.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று இந்தியா எமது பகைமை நாடாகிவிட்டது என குறைகூறுகின்றனர். இதில் உண்மை இல்லை. ஜெனிவா மாநாடு நடைபெறும் தருவாயில் இந்தியாவுக்கு பல அழுத்தங்கள் இருந்தன. குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் பிரயோகித்த அழுத்தமே எமக்கு எதிராக இந்தியாவை வாக்களிக்க வைத்தது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனை நான் மே 18 ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளேன். அவருக்கும் எமக்குமிடையே எந்தவொரு பிரச்சினையும் இல்லை. அவர் எம்மை சங்கடத்துக்குள்ளாக்கும் வகையில் கடிதம் அனுப்பவில்லை. எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து பேசுவதற்கே அழைத்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணைக் கொண்டு வந்ததற்கு தாமே பிரதானக் காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிமைக் கோருகின்றது. ஹிலாரி கிளின்ரன் என்னைச் சந்திப்பதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்துப் பேசுவார் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், இந்தத் தகவலை அமெரிக்கா நிராகரித்தது.

உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசத் தலையீடுகளை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. ஆனால் கூட்டமைப்போ மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தைக் கோருகின்றது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை.

நாங்கள் அணிசேரா நாடுகளிலிருந்து வெளியேறப் போவதாக எதிர்தரப்பு உறுப்பினரொருவர் கூறியுள்ளார். இது முற்றிலும் தவறு.

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி கேள்வியெழுப்புகின்றனர். ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிந்துரைகள் எவையென்றும், ஏற்றுக்கொள்ளமுடியாத பரிந்துரைகள் எவையென்றும் அவர்கள் தொடர்ந்தும் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

உலகில் எந்தவொரு நாடும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியது கிடையாது. இதுதான் யதார்த்தமும் கூட. ஆணைக்குழு என்ற பொறிமுறை மக்களின் ஆணையைப் பெற்ற ஒன்றல்ல. பரிந்துரைகளை வழங்குவதே அதன் கடப்பாடு. எனினும் அந்தப் பரிந்துரைகள் தொடர்பான இறுதியான முடிவை அரசே மேற்கொள்ளும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சாத்தியமான விடயங்களை முதலில் நடைமுறைப்படுத்துவோம். அவற்றை நிறைவேற்ற மாட்டோம் என்று அரசு கூறவில்லை. அந்த அறிக்கையில் ஆராய வேண்டியபரிந்துரைகளும் உள்ளன. ஆணைக்குழு பரிந்துரைகளை கட்டம் கட்டமாக அமுல்படுத்துவோம். உதாரணமாக 160 பரிந்துரைகள் இருப்பின் அவையனைத்தையும் நிறைவேற்ற முடியுமா? கேள்வி எழுப்புபவர்கள் முதலில் யதார்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையில் சர்வதேசம் தலையிடுவதற்கு சர்வதேசச் சட்டத்தில் இடமில்லை. இந்தக் கருத்தை ஒரு சட்டத்துறைச் சார்ந்த பேராசிரியர் என்ற அடிப்படையில் நான்சொல்ல முடியும். ஜெனிவா சென்ற எமது குழுவினருக்கிடையில் எந்த விதமான முரண்பாடும் ஏற்படவில்லை. இரண்டு நாள்களும் விவாதத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ங)

## மேல் மாகாண சபையிலும் தீர்மானம்

கொழும்பு,ஏப் 05

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று மேல் மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்மானம், மேல் மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இந்த யோசனைத் திட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சில திருத்தங்களுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, மேல் மாகாண சபையின் அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் ஆளும் கட்சி பெரும் சீற்றத்துக்கு உள்ளாகி இருப்பதாக தெரிய வருகிறது. மேல்மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (த)

# ஆணைக்குழுப் பரிந்துரைகள் சில மாதங்களில் நடைமுறை

## உறுதியளிக்கிறார் சஜின் வாஸ் குணவர்த்தன

கொழும்பு, ஏப்.5

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பாக அமைச்சர்கள் முரண்பாடான கருத்துகளைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தும் நிலையில், இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படும் என அரசு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உறுதியளித்தது.

இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படமாட்டாது என அரசு ஒருபோதும் கூறவில்லை என வெளிவிவகார அமைச்சை கண்காணிப்பதற்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன கூறினார்.

ஜெனிவாவில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு எதிரான பிரசாரத்தில் முக்கிய பங்கு வகித்த சஜின்வாஸ் குணவர்த்தன, இந்தச் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதன் முன்னேற்றத்தைச் சில மாதங்களில் காணக்கூடியதாக இருக்கும் என்றார்.

நாம் எமது நிலைப்பாட்டில் முரண்படவில்லை. இச்செயன்முறையில் பல நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகள் நாம் நடைமுறைப்படுத்தினால் எதிர்க்கட்சியினருக்குச் சுலோகம் கிடைக்காமல் போய்விடும். அப்போது ஐ.தே.க. அரசியல் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒட்டிக்கொண்டிருக்க நேரிடும் என அவர் கூறினார்.

அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் உண்மையான அக்கறையுடன் உள்ளார் என்பதை நாம் அறிவோம். எனினும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தீவிரவாதக் கண்ணோட்டத்துடன் இச்செயன்முறைக்கு இடையூறு ஏற்படுத்துகிறார். அப்படி செய்ய வேண்டாம் என நான் கேட்கிறேன். நீங்கள் தமிழ் சமூகத்தைத் தீவிரவாதத்தை நோக்கித் தள்ளுகிறீர்கள் என சஜின் வாஸ் குணவர்த்தன கூறினார்.

ஜெனிவா தீர்மானமானது நிறைவேற்றுவதற்கான கடப்பாடு இல்லாத தீர்மானம் என்ற போதிலும் அது இலங்கை அரசைக் கவிழ்க்க விரும்பும் சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினரின் தந்திரோபாயத்தில் ஒரு முன்னோக்கிய படியாக அமையலாம். நாம் அதை அறிவோம் எனவும் அவர் கூறினார். (த)

# இந்தியா எங்களுடன்தான்

## அமைச்சர் டியு. குணசேகர கூறுகிறார்

கொழும்பு,ஏப்.5

அனைத்துலக சமூகம் இலங்கை விவகாரத்துக்குள் மூக்கை நுழைக்காமல், தங்களின் சொந்த வேலையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன நடந்தாலும் இந்தியா எங்களுடன் தான் உள்ளது என்று மூத்த அமைச்சர் டியு.குணசேகர தெரிவித்துள்ளார்.



ஜெனிவா தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு;-

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாகவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் முன்வைக்கப் பட்டது.

போரில் மக்கள் இறப்பது இயல்பு தான் என்று ஆப்கானிஸ்தான் போர் தொடர்பாக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கூறினார். ஆனால், உறுதிப்படுத்தப் படாத குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கை மீது கேள்வி எழுப்பப்படுகிறது. இதன் மூலம் அமெரிக்காவின் இரட்டைவேடம் தெரிகிறது.

போரின் இறுதி நாள்களில், சண்டையை நிறுத்தவும், ஐ.நா. படையை அனுமதிக்கவும், அனைத்துலக மட்டத்தில் இருந்து அழுத்தங்கள் வந்தன. இதனை ஏற்க மறுத்த காரணத்தினால் தான், குரோத நோக்கத்துடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இந்தியாவை, மேற்கு நாடுகளுடன் சேர்ந்து விட்டதாக கூறும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. இங்கு பிரச்சினை ஏற்படும் போது தமிழ் நாட்டில் அதன் பிரதிபலிப்பு வெளிப்படும்.

இலங்கைக்கு எதிராக வாக்களிக்க இந்தியாவுக்கு உரிமை உள்ளது. அது தொடர்பாக எமக்கு இந்தியாவுடன் எந்தக் விரோதமும் இல்லை. இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்திருந்தாலும், அது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தாது.

இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால், மன்மோகன்சிங் ஆட்சியில் இருக்க முடிந்திருக்காது.

இரு நாடுகளுக்குமிடையில் தொடர்ந்து நெருங்கிய உறவு உள்ளது-என்றார். (த)

# சர்வதேச ஊடகங்களைக் குறி வைக்கிறது அரசு

கொழும்பு,ஏப். 5

சர்வதேச அளவில் எதிர் நோக்கிக் கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களின் உரிமை மறுப்பு சார்ந்த விடயங்களின் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள இலங்கை அரசு இப்போது ஊடகங்கள் மற்றும் உதவி நிறுவனங்கள் மீதான அடக்குமுறையை ஆரம்பித்து உள்ளதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தற்போது நேரடியாக சர்வதேச ஊடக நிறுவனங்களை, ஊடகவியலாளர்களுக்கான உதவிகளை வழங்கும் தொண்டு நிறுவனங்களை குறிவைக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

குறிப்பாக இலங்கையின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான உதவிகளை வழங்கும், வழங்கிய உதவி நிறுவனங்கள் மீது அரச ஆதிக்க சக்திகளின் கவனம் திரும்பியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்குப் பேரிடரை ஏற்படுத்திய விடயங்களில் ஒன்றாக கடத்தப்பட்டு காணாமல் போன சிங்கள ஊடகவியலாளரான பிரகீர்த்தி எட்னலியகொடவின் மனைவி வழங்கிய வாக்குமூலம் காணப்படுகிறது. அவரது ஜெனிவா பிரசாரம் தொடர்பாக கடும் சீற்றத்தில் உள்ள இலங்கை அரசு தனது முதல் நகர்வை எக்னலியகொடவின் மனைவிக்கு உதவிய ஊடக நிறுவனங்களைக் குறிவைப்பதாக கூறப்படுகிறது.

அத்துடன் அவரை ஜெனிவா அழைத்துச் சென்றவர்களை அடையாளப்படுத்த கடும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ள தாகவும் தெரியவருகின்றது. [illegible] டனை மையமாகக் கொண்டியங்கும் ஊடக உதவி நிறுவனம் ஒன்றின் அதிகாரியை இலங்கைப் புலனாய்வுத் துறை இலக்கு வைத்துள்ளதாக அறிய முடிகின்றது. இவர் இலங்கையில் ஊடகங்கள் பாதிக்கப்பட்டபோது அவற்றுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி வந்ததாக அறிய முடிகின்றது. அத்துடன் இவரின் அனுசரணையால் பல தமிழ் ஊடகவியலாளர் காப்பாற்றப்பட்டு உள்ளதாகவும் இலங்கைப் புலனாய்வுத் துறை [illegible] கண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

அவர் இலங்கைக்குள் அவ்வப்போது பிரவேசித்து ஊடகங்களுக்கான உதவிகளை வழங்கியிருப்பதுடன் அவற்றுக்கான அனுமதியை இலங்கை அரசிடம் முறையாகப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் பெயர்குறிப்பிடவிரும்பாத இலங்கை புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மையமாகக் கொண்டு அவரது இலங்கைக்கான பயணம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தடுக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில ஊடகவியலாளர்களின் பயணம் தடுக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது

ஊடகங்கள் மீதான அடக்குமுறையை வெளிப்படையாக மேற்கொள்வதில் உள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டுள்ள இலங்கை, ஊடகத் துறை சார்ந்த சர்வதேச தொடர்புகளை முதலில் துண்டித்து பின்னர் நாட்டுக்குள் மனித உரிமைகள் மற்றும் அடக்கு முறைசார்ந்த விடயங்களை அறிக்கையிடுபவர்களை குறிவைக்க எத்தனிக்கின்றதா என்ற ஐயம் ஊடகவியலாளர்களிடையே உருவாகியுள்ளது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் இன்று

கூட்டம்

வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டின் தலைமையில் வேலணை பிரதேச செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக 50 மில்லியன் ரூபா ஒதுக்கி இன்னமும் வேலைகள் இடம்பெறாத நிலையில் உள்ள அராலி-வேலணை போக்குவரத்துப் பாலம் அமைத்தல் விடயம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-7)

தொடக்க நிகழ்வு

பொருளாதார அமைச்சின் வாழ்வு எழுச்சி தேசிய இயக்கம் கட்டம் III இன் சிறுபோகத்தில் விதைகள் மற்றும் நடுகைப் பொருள்கள் நடுதல் மாவட்ட ரீதியில் அங்குரார்ப்பண நிகழ்வு காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் சகல கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் காலை 9.15 மணிக்கு வீட்டுத் தோட்டங்களில் விதைகள் நடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-14)

கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### எப்போது யாழ் தேவி ஓடும்.....



யாழ்ப்பாணத்துக்கான ரயில் பாதையை புதிதாக அமைப்பதற்கான ஏற்பாடுகளை ரயில்வேத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. ஆரம்பகட்ட நடவடிக்கையாக ரயில் தண்டவாளங்களை ரயில் பாதை அமையவிருக்கும் பாதையில் உள்ள ரயில் நிலையப் பகுதிகளில் களஞ்சியப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கொழும்பில் இருந்து கனரக வாகனங்களின் மூலம் எடுத்து வரப்பட்ட தண்டவாளங்கள் ஆயிரக்கணக்கில் யாழ். ரயில் நிலைய வளாகத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று கோண்டாவில் சாவகச்சேரி, பளை, ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதிகளிலும் தண்டவாளங்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம-135-9)

# வீதியில் இறங்கிப் போராட வயாவிளான் மக்கள் முடிவு

## தமது மீள் குடியமர்வில் அதிகாரிகள் அசமந்தம் எனவும் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஏப் 05*

*வலி. வடக்கு வயாவிளான் கிராமத்தின் குடியிருப்புப் பகுதிகளை விடுவிக்குமாறு பல தரப்பட்டோரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அது சாத்தியமாகவில்லை. அதிகாரிகளுக்கு மனு அனுப்பியும் இதுவரை எதுவித தீர்வும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் வீதியில் இறங்கிப் போராடத் தீர்மானித்துள்ளோம்.*

இவ்வாறு வயாவிளான் மீளக் குடியமர்வோர் நலன் புரி சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி. வடக்கு பலாலி விமான நிலைய உயர் பாதுகாப்பு வலயமென வளலாயில் இருந்து மாதகல் வரை அறிவிக்கப்பட்டிருந்தது.

போர் முடிவடைந்து சில கிராமங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் வயாவிளான் கிராமத்தில் குடியிருப்புப் பகுதிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இதுதொடர்பாக உயர் மட்ட அதிகாரிகள் பலருக்கு வயாவிளான் மீள்குடியமர்வோர் நலன்புரி சங்கத்தின் ஊடாக கடிதங்கள் அனுப்பி வைத்தும் இந்தக் கிராம மக்களுக்கு எந்தவித தீர்மானமும் கிடைக்கவில்லை.

இதற்கு மாறாக அந்தப் பகுதியில் பாதுகாப்பு அரண்களை இன்னும் பலப்படுத்தும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வயாவிளான் கிராமத்தில் பாடசாலை, மற்றும் விவசாய நிலங்களை விடுவித்த போதும் குடியிருப்புப் பகுதிகளை விடுவிக்காததையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர், யாழ். கட்டளைத் தளபதி, பகுதித் தளபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர், யாழ். அரச அதிபர், வலி. வடக்கு பிரதேச செயலர், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோருக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டபோதும் இதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் வீதியில் இறங்கிப் போராடத் தீர்மானித்துள்ளோம். - என்றுள்ளது. (ம-14)

# வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.5

அண்மையில் வெளியான சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வீதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் வடக்கு மாகாணம் கடைசி இடத்தை - 9 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பிரிவு மேற்கொண்டுள்ள பகுப்பாய்வு அறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றியோர், சித்தியடைந்தோர் வீதத்தை நோக்கும்போது முதல் இடத்தில் மேற்கு மாகாணமும் இரண்டாம் இடத்தில் தெற்கு மாகாணமும் மூன்றாமிடத்தில் வடமேற்கு மாகாணமும் உள்ளன.

சப்பிரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம், வடக்கு மாகாணம் என்பன முறையே 4 ஆம், 5 ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9 ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் கிடைத்த புள்ளி விவரத் தரவுகளின் விவரம் வருமாறு:-

மேற்கு மாகாணத்தில் 69 ஆயிரத்து 614 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 46 ஆயிரத்து 337 பேர் சித்தியடைந்துள்ளனர். இரண்டாயிரம் பேர் ஒன்பது 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். இரண்டாயிரத்து 692 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

தெற்கு மாகாணத்தில் 34 ஆயிரத்து 908 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். 21 ஆயிரத்து 944 பேர் சித்தியடைந்துள்ளனர். 507 பேர் ஒன்பது பாடத்திலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். ஆயிரத்து 891 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

வடமேற்கு மாகாணத்தில் 30 ஆயிரத்து 689 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். 19 ஆயிரத்து 237 பேர் சித்தியடைந்துள்ளனர். 291 பேர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். ஆயிரத்து 104 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

சப்பிரகமுவ மாகாணத்தில் 25 ஆயிரத்து 253 பேர் தோற்றி அதில் 15 ஆயிரத்து 262 பேர் சித்தியடைந்துள்ளனர். 226 பேர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். ஆயிரத்து 325 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

மத்திய மாகாணத்தில் 35 ஆயிரத்து 265 பேர் தோற்றி அதில் 20 ஆயிரத்து 309 பேர் சித்தியடைந்துள்ளனர். 462 பேர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். ஆயிரத்து 930 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 20 ஆயிரத்து 848 பேர் தோற்றி அதில் 11 ஆயிரத்து 755 பேர் சித்தியடைந்துள்ளனர். 148 பேர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 798 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

வடமத்திய மாகாணத்தில் [illegible] ஆயிரத்து [illegible] பேர் தோற்றி அதில் [illegible] ஆயிரத்து 422 பேர் சித்தியடைந்துள்ளனர். 84 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். ஆயிரத்து 329 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

ஒன்பதாவது இடத்திலுள்ள வடக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 21 பேர் தோற்றியுள்ளனர். இதில் 9ஆயிரத்து 778 பேர் சித்தியடைந்துள்ளனர். 103 பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியடைந்துள்ளனர். 646 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

இந்த அடிப்படையில் நோக்கும்போது நாட்டில் 2 லட்சத்து 70 ஆயிரத்து 32 பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களில் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 191 பேர் சித்தியடைந்துள்ளனர். 3 ஆயிரத்து 908 பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 12 ஆயிரத்து 795 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் மூலமே இந்த விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவிகள் பெறுவதற்கு வலி. கிழக்கில் 4,650 குடும்பங்கள்

அச்சுவேலி, ஏப். 5

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் திவிநெகும திட்டத்தின் கீழ் வாழ்வாதார எழுச்சிக்கான உதவியைப் பெறுவதற்கு 4 ஆயிரத்து 650 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் 150 குடும்பங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

திவிநெகும திட்டம் 2012 இன் வாழ்வாதார எழுச்சிக்கான உதவித் தொகையாக வழங்கப்படும் உதவியைக் கொண்டு வீட்டுத் தோட்டம், சமூகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு தொழில் முயற்சி, கைப்பணி உற்பத்தி, சிறுகைத்தொழில் உள்ளிட்ட தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியும். அதனூடாக பொருத்தமான தொழில் முயற்சியை மேற்கொள்வதோடு குடும்பத்தில் தேவையான வருமானத்தை தேடிக் கொள்வதற்கும் வகை செய்யப்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை உள்ளடக்கிய குழு பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளது.

உதவியைக் கொண்டு வீட்டுத் தோட்டம், சமூகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு தொழில் முயற்சி, கைப்பணி உற்பத்தி, சிறு கைத்தொழில் உள்ளிட்ட தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவிகளைக் கையாண்டு மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளையும் கண்காணித்து ஆலோசனைகள் வழிகாட்டல்களையும் இந்தக் குழு வழங்கவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் திவிநெகும 2012 திட்டத்தைக் கண்காணித்து வழிப்படுத்துவதற்கு பிரதேச செயலர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளரை உள்ளடக்கிய உயர் மட்டக்குழு தொழிற்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.(ம-11)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் ஜூன் மாதத்துடன் நிறுத்தப்படும்

01↘ ஜூன் மாதத்துடன் நிறுத்திவிட அரசு தீர்மானித்துள்ளது. வடக்கில் 2 லட்சத்து 72 ஆயிரம் பேர் வரையில் இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களில் 2 லட்சத்து 65 ஆயிரத்து 960 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இன்னும் 6 ஆயிரத்து 40 பேரே மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர். எனவே எதிர்வரும் ஜூன் மாதத்துடன் நிவாரணம் வழங்குவதை முற்றாக நிறுத்தி விட அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை -

யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டு வந்த இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டது. அதனைத் தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை அந்த நிவாரணம் வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட செயலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, மீள்குடியேற்ற அமைச்சு தமக்கு இன்னும் திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவித்ததாக மாவட்ட செயலக வட்டாரங்கள் கூறின. யாழ். மாவட்டத்தில் 23 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## வடக்கு மீனவர்கள் குழு விரைவில் இந்தியாவுக்கு

01↘ இந்தக் குழுவினர் தமிழ்நாடு கரையோர மீனவர் சங்கப் பிரதிநிதிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவது குறித்து ஆராய்வர் எனக் கூறப்படுகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டும் வடபகுதி மீனவர்கள் இந்தியா சென்று பறங்கிமலையில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் தமிழ்நாடு மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். எனினும் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. அதன் பின்னரும் வட பகுதியில் இழுவைப் படகுகள் சகிதம் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து தொழில் செய்து வருகின்றனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு கொழும்பிலும் இந்திய இலங்கை மீனவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இந்த நிலையில் மீண்டும் இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளுக்காக தமிழ்நாடு மீனவர் சங்கப் பிரதிநிதியான அருளானந்தம் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பியுள்ளார். அவரது ஏற்பாட்டிலேயே வடபகுதி மீனவர்கள் இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ். தவரட்ணத்திடம் கேட்டபோது,

இந்திய மீனவர்கள் தமது அத்துமீறல்களை நிறுத்துவதாக இல்லை. எனவே தான் மீண்டும் ஒரு முறை இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரவுள்ளோம். மேலதிக விடயங்களைத் தற்போது கூறமுடியாதுள்ளது என்றார். (த-03)

## சமரசிங்க எங்கே?

01↘ இங்கு விவாதம் நடைபெறுகின்றது. அமைச்சர் எங்கே ஓடி ஒளிந்துவிட்டார் என மங்கள சமரவீர நேற்று சபையில் கேள்வி எழுப் பினார். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதேவேளை, வாய்மொழி விடைக்கான கேள்வி நேரத்தின்போது அஸ்வர் எம்.பியின் இரவுநேர நீர் விநியோகப் பிரச்சினையால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் அஸ்வர் எம்.பி. கேள்வி கேட்கையில், எதிர்த்தரப்பினரொருவர், ''அஸ்வர் எம்.பி. நீங்கள் கேட்டது அமைச்சருக்கு விளங்கவில்லை'' எனக் கூறினார். ''இல்லை, இல்லை அமைச்சருக்கு விளங்கியிருக்கும்'' என அஸ்வர் எம்.பி. எதிர்த்தரப்பினருக்குப் பதிலடி கொடுத்தார்.

இந்நிலையில், திடீரென எழுந்த அமைச்சர் தினேஷ், ''அஸ்வர் எம்.பி. கூறியது சத்தியமாக எனக்கு விளங்கவில்லை'' எனக் கூறினார். அமைச்சரின் இந்தக் கருத்தையடுத்து எதிர்த்தரப்பினர் மேசைகளில் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது. (த-சி)

## இந்தியாவுடனான உறவை புலி வதந்தி பாதிக்கும்

01↘ வில் விரிசலும், சர்வதேச தமிழ்ச் சமூகத்திடம் பேரினவாத அரசுக்கு எதிரான சிந்தனைகளுமே அதிகரிக்கும். - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புலிகளுக்குப் பயிற்சி முகாம் இருக்கிறது எனவும், பயிற்றப்பட்ட புலிகள் வடக்கு, கிழக்கிற்கு நூற்றுக்கணக்கில் வந்திருக்கின்றனர் எனவும் வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பாகவும் இந்தியத் தூதரகம் அச்செய்திகளை மறுத்திருப்பது தொடர்பாகவும் கருத்து வெளியிட்டபோதே யோகராஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசங்களின் இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கும் வகையில் ஊடகங்கள் உண்மைகளை நடுநிலை தவறாமல் வெளியிடவேண்டும் என கடந்த வாரம் ஜனாதிபதி தேசிய ஊடக மத்திய நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார். ஆரம்பம் முதலே இனவாதத் திரிபுச் செய்திகளை சமூகங்களுக்கும், சமயங்களுக்கும் எதிராக வெளியிட்டு போலி தகவல்களை வெளியிடுவதில் பிரசித்திபெற்ற சில நாளிதழ்களுக்கு இது வழமையான வாடிக்கையாகும் என்றும் யோகராஜன் கூறினார். (த)

## அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு வவுனியாவில் அரசு எச்சரிக்கை

01↘ தங்களின் பணிகள் என்னவோ அதனை மட்டும் மேற்கொள்ள வேண்டும். அதனைவிடுத்து தேவையற்ற விடயங்களில் தலையிடக் கூடாது. ஒரு அரச சார்பற்ற நிறுவனம் இங்கு பயணம் செய்த வெளிநாட்டு இராஜதந்திரியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கின்றது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை வரவேற்று அவர்களுக்கான வேலைகளை மேற்கொள்ள அரச உத்தியோகத்தர்கள் உள்ளனர். அவர்கள் அதனைப் பார்த்துக் கொள்வார்கள். அதனை விடுத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிலே தலையிடக்கூடாது.

இராணுவப் பிரசன்னம் இருப்பதால் வேலைகள் மேற்கொள்வதில் தடங்கல்கள் இருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுவரை காலமும் தெரிவித்துவந்தன. அவை தற்போது படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலர்களுடன் இணைந்து கடமையாற்ற வேண்டும் - என்றார். (த-5)

## கொழும்பில் தமிழ் குடும்பஸ்தர் வெள்ளை வானில் கடத்தல்

01↘ வானொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது. இந்நிலையில் தடுமாறி விழுந்த ஆணந்தனை பலாத்காரமாக வெள்ளைவானில் வந்த நால்வர் வானுக்குள் இழுத்துப் போட்டுள்ளனர். சம்பவத்தை நேரில் கண்ட குடியிருப்பாளர்கள் வானைத் தடுக்க முனைந்த போதிலும் சடுதியாக அவ்விடத்திலிருந்து வானோடு கடத்தல் காரர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

சம்பவம் நடைபெற்றிருப்பதை பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹணவும் உறுதிப்படுத்தியுள்ளார். (த)

## பொறுப்புக்கூறுவதில் இருந்து இலங்கை தப்பிவிட முடியாது

01↘ களை அமுல் படுத்துமாறு கூறியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் ஒரு நாடு என்ற அடிப்படையில் இலங்கை படுதோல்வியடைந்துள்ளது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் எந்தவொரு நாடும் தனித்துச் செயற்படமுடியாது. சர்வதேசத்துடன் கைகோர்த்தே செயற்படவேண்டும்.

சர்வதேச நீதிக்கு அப்பால் சென்று எந்தவொரு நாடும் செயற்படமுடியாது. எனவே, பொறுப்புக்கூறும் விடயத்திலிருந்து இலங்கை தப்பித்துவிடமுடியாது. இலங்கை 7 சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. மனித உரிமை, இறைமைத்துவம் ஆகிய விடயங்களும் இதில் அடங்கும். சர்வதேசம் தலையிடுவதற்கான உரிமை தானாகவே தாரைவார்க்கப்பட்டுள்ளது.

எனது அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு அரசும் மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டால், ஐ.நா. சபை என்ன, நரகத்துக்கும் தாம் செல்லத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்று தெரிவித்திருந்தார். அப்படியானால், ஜெனிவா பிரச்சினையைப் பூதாகரப்படுத்தி அரச தரப்பினர் ஏன் தற்போது கொக்கரிக்கின்றனர்?

2009ஆம் ஆண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் இணைந்து அரசின் வெளிவிவகார அமைச்சு கூட்டு ஒப்பந்தமொன்றை வெளியிட்டது. அந்த ஒப்பந்தத்தில் இருந்த விடயங்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலும் உள்ளன.

அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கட்டாயம் அமுல்படுத்தவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளும் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளன. ரஷ்யா கூட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்துமாறு கூறியுள்ளது.

அமைச்சர் பீரிஸ் ஆதரவு திரட்டுவதற்காக சர்வதேச நாடுகளுக்கு சவாரி செய்தார். அந்த நிழற்படங்களையும் நான் பார்த்தேன். ஆனால், பெறுபேறுதான் என்னவென்று தெரியவில்லை. - என்றார். (த-சி)

# தீர்வை முன்வைப்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம்

01↘ நிலையான - நிரந்தரமான ஒரு தீர்வு காணப்படவேண்டும். இல்லாத புலிகளைப்பற்றிப் பேசி உண்மைகளை மூடி மறைக்க முற்படாமல், இருக்கும் மனிதர்களுக்கு நியாயமான தீர்வை ஏற்படுத்த முன்வாருங்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த காலம்முதல் ஆறு தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக இழைக்கப்பட்ட அநீதிகளின் ஒட்டுமொத்த பிராயச்சித்தமாகத்தான் ஜெனிவாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு உறுதியான ஒரு தீர்வு காண்பதில் அரசு எந்தவிதமான அக்கறையும் கொள்ளவில்லை.

தமிழ் மக்களுக்குப் பாரம்பரிய வரலாறு உண்டு; தனித்துவமான அடையாளம் உண்டு.

நாம் இலங்கையர்கள் என்ற அனைத்து இன மக்களுடனும் இணைந்து வாழவே விரும்புகின்றோம். ஆனால், நாம் தொடர்ச்சியாக உதாசீனப்படுத்தப்பட்டு வந்துள்ளோம். திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டே வந்துள்ளோம்.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் 1956, 1958, 1971, 1972, 1983 எனத் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமை, சுயநிர்ணயம், அதிகாரப்பரவலாக்கம், காணி உரிமை என்பன ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே எம்மால் முன்வைக்கப்பட்டன.

இவை அனைத்தையும் அரசு உதாசீனப்படுத்திவிட்டது. இதன் காரணமாகவே ஆயுதப் போராட்டம் உருவானது.

ஆயுதப் போராட்டம் இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச நாடுகள் பலவற்றிலும் இடம்பெற்றுள்ளன. ஆனால், அங்கு மக்கள் எதிர்பார்த்த தீர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு அமெரிக்கா, இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவும் உதவின.

புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தன; ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தன.

அப்போது நீங்கள் அதனை வரவேற்றீர்கள். ஆனால், இப்பொழுது அதே நாடுகள் உங்களுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்துள்ளன. இது ஏன் ? இலங்கையில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை இன்று சர்வதேசம் அறிந்துகொண்டதால்தான் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியது.

இலங்கையில் சட்டம், ஒழுங்கு, நீதித்துறை அனைத்தும் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன. கடைசிவரை இவற்றின் மூலம் தமிழ் மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது அரசு.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு தமிழர்களை அங்கும் சிறுபான்மை இனமாக [illegible] [illegible] குடியேற்றம் இடம்பெறவில்லை என்று உங்களால் வெளிப்படையாகக் கூறமுடியுமா?

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று உலக நாடுகளுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

தத்துவார்த்த ரீதியான, நீதியான தீர்வு ஒன்றை ஏற்படுத்த எந்தவிதமான அக்கறையும் காட்டப்படவில்லை.

இன்று இங்கு பேசிய பல அமைச்சர்கள் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாகப் பேசுவதை விட புலிகளைப் பற்றிப் பேசுவதிலேயே குறியாக இருந்தனர். புலிகள் அழிந்துவிட்டனர். இல்லாதவர்களைப்பற்றிப் பேசுவதில் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. எமது மக்கள் எதிர்பார்க்கும் சமாதானத்தையும், சம அந்தஸ்தையும், சுயநிர்ணய உரிமையையும் ஏற்படுத்த முன்வாருங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்கு அதிகாரங்களைக் கேட்கவில்லை. எமது மக்களுக்கான அதிகாரத் [illegible] இதில் [illegible]

வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் தமிழர்கள் மட்டுமல்லர், முஸ்லிம்களும்தான்.

புலிகளைக் காட்டி உண்மைகளை மறைக்க முற்பட வேண்டாம். ஜெனிவாத் தீர்மானத்தைப் பார்த்து ஏன் பீதியடைகின்றீர்கள்?

புதிதாக ஒன்றையும் கூறிவிடவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளைத்தானே நிறைவேற்றும்படி கூறுகின்றன.

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜனாதிபதி உள்ளார்ந்த உணர்வுபூர்வமான தீர்வு காணப்படும் என்று உறுதியளித்தார்.

ஆனால் இன்று பல அமைச்சர்களும் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

- அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.
- சமாதானமான நல்லிணக்கம் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படவேண்டும்.
- அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.
- அரசியல் தலைவர்கள் பொறுப்புக்கூறும் நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும்.
- சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு வெளிப்படையான தீர்வு காணப்படவேண்டும்.
- துணைப்படைகளிடமிருந்து ஆயுதம் களையப்படவேண்டும்.
- உரியமுறையில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவேண்டும்.
- மொழி உரிமை, வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- இராணுவம் அகற்றப்படவேண்டும்.

இவை ஒன்றும் தவறானவை அல்லவே.

தமிழ் மக்களும் இந்நாட்டின் பிரஜைகள் தானே. ஏனையவர்களைப்போன்று சுயநிர்ணயத்துடன் சுதந்திரமாக, சமத்துவமாக, அதிகாரத்துடன் வாழக்கூடிய நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

இவற்றைத் தானே நெல்சன் மண்டேலா, ஜிம்மி காட்டர் போன்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எங்கோ தவறு ஏற்பட்டுள்ளது என்பதை இப்போதாவது அரசு உணரவேண்டும் - என்றார் சம்பந்தன். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சேற்றில் மலரும் செந்தாமரையாக மாறும் வாய்ப்பு முகிழ்க்குமா, என்ன?

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்காவிடில், தென்சூடானைப் போன்று இலங்கையும் பிளவுபட நேரிடும். சிறுபான்மை இனங்களுக்கு உள்ள உரிமைகளை அரசாங்கம் உறுதிப்படுத்தாவிடில், அது நாட்டைப் பிரிப்பதற்கு வழி வகுக்கும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில், சர்வதேச சமூகம் இலங்கை மீது கொண்டுவந்துள்ள தீர்மானம், உலகின் புதிய நாடான தென்சூடானை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்களுக்குச் சமமானது.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும், வெளிவிவகாரங்கள் தொடர்பாக பரந்த அறிவுள்ளவருமான லக்ஷ்மன் கிரியெல்ல.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கைத் தொனியில் கருத்துரைத்தார்.

நாட்டின் இறைமை என்ற கேடயத்தைப் பயன்படுத்தி, சர்வதேசத்துக்கு எதையும் மறைத்துவிட முடியாது. மனித உரிமைகள், மக்களின் பாதுகாப்பு, நியாயாதிக்கம் தொடர்பான ஐ.நா. சாசனங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஆகையால் அவை சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயமும் கடப்பாடும் இந்த நாட்டு அரசுக்கு உண்டு.

அந்தக் கடமையை நிறைவேற்றத் தவறினால், நாட்டுக்கும், மக்களுக்கும் பல விபரீதங்கள் ஏற்பட இடம் உண்டு. அவை தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாதவையாகிவிடும் - என்றும் கிரியெல்ல சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அதனை உணர்ந்து, உள்வாங்கி சமயோசிதமாகவும், சாதுரியமாகவும் செயற்பட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கே உண்டு.

இதற்கிடையில், ஜெனிவாவில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா முன்வைத்த பிரேரணையை எதிர்த்து (இலங்கை அரசை ஆதரித்து) வாக்களித்த ரஷ்யா, பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு செயற்படுத்த வேண்டும் என்று இப்போது வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம், நாட்டை நல்ல தரத்துக்கு இட்டுச் செல்ல இயலும் என்றும், தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு மிகவும் அவசியம் என்றும் இலங்கைக்கான ரஷ்யத் தூதர் விளாடிமிர் மிக்கோய் தெரிவித்திருக்கிறார். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை இலங்கை அரசு முன்வைக்க வேண்டியது மிகமிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். சகல இன சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வே முன்வைக்கப்பட வேண்டும் என்றும் ரஷ்யத் தூதுவர் சுட்டடிக்காட்டி உள்ளார்.

இவற்றுக்கிடையே, ஜெனிவா அல்ல, நியூயோர்க் அல்ல, வாஷிங்டன் அல்ல எத்தகைய பலமுள்ள நாடுகளிலிருந்து இலங்கைக்கு அழுத்தம் வந்தாலும் சரி, அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் சரி, அவற்றை எதிர்கொள்வதற்கு அரசு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரும் கடுப்புடன் விளம்பியுள்ளார்.

கொழும்பில் மூன்று நாள்களுக்கு முன்னர் மாகாணமட்ட அரசியல் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு இறுக்கமான கருத்தைத் தெரிவித்திருந்தார்.

நாடு சந்தித்துள்ள இப்போதைய சவால், எமக்கு ஒன்றும் புதியது அல்ல. அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்ததால் நாம் பல சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் அனைத்துச் சவால்களையும் வெற்றிகொண்டோம். அதற்கான பலம் எம்மிடம் இருந்தது என்றும் அவர் சிலாகித்துள்ளார்.

மொத்தத்தில் -

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதால், அதில் தெரிவிக்கப்பட்ட சகலதையும் நிறைவேற்ற வேண்டும் என்று எவரும் தம்மை நிர்ப்பந்திக்க முடியாது என்ற தோரணையிலும் தொனியிலும் அரசு சார்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா வற்புறுத்தினாலும் சரி, ரஷ்யா கூறினாலும் சரி, இந்தியா இடித்துரைத்தாலும் சரி, அரசும் அதன் தலைமைப்பீடமும், அமைச்சர் பிரதானிகளும் சரி, அவற்றைச் சீரணித்துச் செயற்படும் நிலையில் இல்லை என்பது தெட்டத் தெளிவாகி வருகிறது.

எனினும், போர் நடைபெற்ற காலத்தில், இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்துகொண்ட பாதுகாப்புசார் ஒப்பந்தங்களால், அதனை விட்டெறிந்து செயற்பட முடியாத இக்கட்டான நிலை ஒன்று உண்டு என்பதனையும் மறக்கவோ, தவிர்க்கவோ இயலாது, நாடாளுமன்றில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்கா இதனைச் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஆனால், எதிர்க்கட்சிகள் தரப்பில் முன்வைக்கப்படும் எந்தக் கருத்தையும் அரசு கவனத்தில் கொள்வதிலோ, அவற்றை அலசி ஆராய்வதிலோ அக்கறை காட்டும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

அதுமட்டுமன்றி, அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்துக் கவனம் செலுத்தி, அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் இதுவரை மனச்சுத்தியுடன் செயற்படவில்லை. அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் கடந்த வருட இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட போது இருந்த உசாரும் துடிப்பும் இவ்வேளை இல்லை!

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பொன்போன்றவை, அவை நடைமுறைப்படுத்தப்பட்டால், நாட்டின் இனப்பிரச்சினைக்கு மட்டுமன்றி, மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான வசதிகள் ஊற்றெடுக்கும் என்று முழங்கிய மூத்த மற்றும் முன்னணி அமைச்சர்கள், அரச தரப்பு அரசியல் பிரமுகர்கள் பலரும் -

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அதனைச் செயலாக்க முடியாது என்று ததிங்கிணத்தோம் போடுகிறார்கள்! இந்த இலட்சணத்தில் இலங்கையின் அரசாள்கையும் அரசியலும் சேற்றில் மலரும் செந்தாமரையாக மாறும் நிலையேனும் முகிழ்க்கும் என்று எதிர்பார்க்கத் தானும் இயலுமா, என்ன?

# பொதுமக்கள் அபிப்பிராயப் பெட்டியில் கடந்த வருடம் 1,414 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 5

உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் பொது மக்களுக்காக வைக்கப்பட்ட அபிப்பிராயப் பெட்டியில் கடந்த வருடம் ஆயிரத்து 414 முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன என யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் ஆயிரத்து 414 பதிவுகளில் 726 குற்றச்சாட்டுகளும், 688 கோரிக்கைகளும் மக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி நிலங்கள் சம்பந்தமாக 175 பதிவுகளும், பொது வசதிகள் 239, சூழலியல் 276, உட்கட்டமைப்பு வசதிகள் 395, கட்டடம் பிரச்சனைகள் 262, ஏனையவை 103 உம் ஆக பதியப்பட்டுள்ளன.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம் செப்ரம்பர் மாதம் வரையில் 60 வீதமான 926 பிரச்சினைகள் உள்ளூராட்சி திணைக்களத்தால் தீர்க்கப்பட்டுள்ளன. மீதி பிரச்சினைகள் 397 தற்போது கிடப்பில் இருக்கின்றன. ஆயிரத்து 414 பிரச்சினைகளில் 109 உள்ளூராட்சி சபைக்கு சொந்தமானவை அல்ல.

பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகளில் சிலவற்றுக்கு தீர்வு வழங்க முடியாமல் உள்ளது. இவை வேறு திணைக்களங்களுக்கு உரியவை.

பொது மக்களால் சரியான ஆவணங்கள் இதுவரையில் வழங்கப்படாததால், அனுமதி அற்ற கட்டடங்கள் கட்டுவதால் நீதிமன்றத்துக்கு செல்லுதல், ஆளணிப் பற்றாக்குறைகள், காணி எல்லைப் பிரச்சினைகள் ஆகிய பிரச்சினைகளால் மக்களின் வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவதில் தாமதங்களையும் சிரமங்களையும் எதிர் கொண்டு வருகிறோம்.

இவற்றுக்கான பிரச்சினைகளின் தீர்வுகளை விரைந்து செயற்படுவதற்கு உள்ளூராட்சிச் திணைக்களம் என்றும் பின் நிற்காது.- என தெரிவித்தார். (ம-13)

# கூட்டுறவுப் பணியாளருக்கு வாழ்க்கைச் செலவுப்படி

யாழ்ப்பாணம்,ஏப்.5

வடமாகாணத்தின் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களதும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படி என்பவற்றை வழங்குவதற்கு கூட்டுறவு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாகக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 18/2010 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் தற்போது வாழ்க்கைச் செலவுப் படியாக 5 ஆயிரத்து 250 ரூபா செலுத்தப்பட்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்தும் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட்டு வரும் படிகளை கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு வடமாகாண கூட்டுறவு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விசேட படிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சங்கங்களுக்கு நிதி வல்லமை இருப்பதுடன் இது தொடர்பாக சங்கங்களின் இயக்குநர்சபை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை கிராமிய வங்கியில் பெறப்படும் இலாபத்தைத் தவிர்த்து சங்கம் சுய முயற்சியில் இலாபம் ஈட்டுமாயின் அந்தப் படிகளை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வழங்க முடியும்.

ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக 5 ஆயிரத்து 250 ரூபாவுடன் 600 ரூபாவும் சேர்த்து கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

தற்காலிக அமைய ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு 195 ரூபா வீதம் 5 ஆயிரத்து 850 ரூபாவுக்கு மேற்படாதவாறு வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து கடமையாற்றும் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் அவர்களின் படிகள் அல்லாத சம்பளத்தின் 5 வீதத்தை விசேட படியாகவும், தற்காலிக அமைய அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் அவர்களின் நாளாந்த சம்பளத்தில் 5 வீதத்தை விசேட படியாகவும் வழங்க வேண்டும்.

இதே வேளை கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து கடமையாற்றும் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் அவர்களது படிகள் அடங்காத சம்பளத்தில் 15 வீதத்தை விஷேட படியாகவும், தற்காலிக அமைய அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் அவர்களது நாளாந்த சம்பளத்தில் 15 வீதத்தை விசேட படியாகவும் வழங்க வேண்டும். அத்துடன் ஒப்பந்த அடிப் படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இந்த விசேட படிகள் உரித்துடையதல்ல எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட படிகள் கொடுப்பனவு தொடர்பாக சங்கத்தின் இயக்குநர் சபையால் எடுக்கப்படும் தீர்மானத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக வடமாகாண ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-14-17)

# கிராம மட்ட பயனாளிகளுக்கு 'திவிநெகும' திட்டத்தில் உதவி

தென்மராட்சி,ஏப்.5

2012 ஆம் ஆண்டு நாடு முழுவதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 'திவிநெகும' வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் கிராம அலுவலர் மட்டங்களில் சமனான அளவுகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினர் பிரதேச கால்நடை வைத்தியர் பிரிவில் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு 100 வீத மானிய அடிப்படையில் ஒரு மாதமான கோழிக் குஞ்சுகளும் 50 வீத மானிய அடிப்படையில் ஆடுகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு கால்நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் யாழ். மாவட்டத்துக்கு என 200 கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-9)

# தப்பி ஓடிய கைதி அகப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஏப். 5

வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றவேளை தப்பியோடி தலை மறைவாகியிருந்த விளக்கமறியல் கைதி நேற்று முன்தினம் காலை சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த வடிவேலு இராசரத்தினம் (வயது-47) என்பவரே மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

சைக்கிள் திருடிய குற்றச் சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் சந்தேக நபர் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. கடந்த 3 வாரங்களாக யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே சுகயீனம் என்று கூறியதனால் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். விடுதியில் தங்கியிருந்த அவர் நான்கு நாள்களுக்கு முன் மலசலகூடம் சென்று வருவதாகக் கூறிச் சென்று தப்பிச் சென்றிந்தார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சந்தேக நபரைத் தேடிய நிலையில் கொக்குவில் உப்பு மடம் சந்தியை அண்மித்து கடை ஒன்றினுள் நின்றபோது இனங்காணப்பட்டார். இந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவர் தற்போது சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

(ம-4)

# அனுமதி இன்றி மண் ஏற்றிய டிராக்டர் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஏப்.5

வேலணை பிரதேச சபையின் அனுமதி இன்றி மணல் மண் அள்ளிய டிரக்டர் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த முதலாம் திகதி முதல் மணல் மண் விநியோகம் தொடர்பாக அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான அனுமதி நடைமுறை வேலணை பிரதேச சபையின் ஊடாக நடைபெற்று வருகின்றது. எனினும் பிரதேச சபையின் நடைமுறைகளை மீறி சட்டவிரோதமாக சிலர் மணல் அள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பல முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்திருந்தன.

இந்தநிலையில்,

நேற்று பட்டப்பகலில் அனுமதியின்றி டிராக்டர் மூலம் மணல் அள்ளும்போது கையும்மெய்யுமாக அகப்பட்டனர்.

இந்த விடயம் உடன் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கும் மண்டைதீவு பொலிஸுக்கும் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசாவால் அறிவிக்கப்பட்டது.

பிரதே சபையின் அனுமதி இன்றி மணல் தீவகத்துக்கு வெளியே கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டுள்ள நிலை யிலே இவ்வாறான செயற்பாடு இடம் பெற்றுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்திப் பணிகளில் மன்னார் மக்கள் அதிருப்தி

மன்னார்,ஏப்.5

மன்னாரில் இடம்பெற்று வரும் வீதி அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தற்போது மன்னாரில் பல இடங்களிலும் வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இவை குறித்து தெளிவான விளக்கங்கள் இல்லாததால் மக்களிடையே பல்வேறு சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் குறித்த வீதி அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்ற போதும் ஒப்பந்ததாரரின் பெயர், விவரங்கள் காட்சிப் படுத்தப்படாமல் வேலைகள் மன்னார் நகரில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

மேலும் பல லட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகள் மிகவும் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றன.



ஆனால் மன்னார் நகரில் உள்ள வீடுகள் மிகவும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ள போதிலும் வீடுகளின் நிலமட்ட உயரத்தை விட வீதிகள் மிகவும் உயரமான வகையில் கொங்கிறீட் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் வடிகால் அமைப்பு எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலங்களில் பெய்த மழை நீரை வெளியேற்றுவதில் வீட்டு உரிமையாளர்கள் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

தற்போது வடிகால் அமைப்புக்கள் இல்லாத நிலையில் உயரமான கொங்கிறீட் வீதிகள் மன்னாரின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் மழை பெய்யும் போது மக்கள் இடம்பெயர வேண்டிய நிலையே ஏற்படும். மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் இந்த வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்ற போதிலும் இவை தொடர்பாக மக்கள் அதிருப்தியே அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; தாம் இந்த வீதிகளை அமைக்கவில்லையெனவும் ஏற்கனவே சேதமடைந்திருந்த வீதிகளைச் சிறிய அளவில் செப்பனிடுவதே தமது தற்போதைய பணியெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் வழக்கமாக மன்னார் வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நின்று அவற்றைச் சேதமாக்குவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டே தற்போது வீதிகள் சற்று உயரமாக அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மக்களை வெள்ளப்பாதிப்பிலிருந்து காப்பாற்றும் பொருட்டு வீதியோரங்களில் வடிகால் அமைப்பு ஏற்படுத்தப்படுவது அவசியமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (க-12)

# கிராமங்களை அழிக்கும் வளச்சுரண்டல் அகோரம்

முல்லைத்தீவு,ஏப்.5

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் காடுகள் அழிக்கப்பட்டுப் பெரிய அளவில் கிரவல் மண் அகழப்படுவதால் அந்த இடங்கள் மக்களின் பாவனைக்கு உதவாத வகையில் மாற்றம் பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரங்கள் வெட்டத் தடை, மணல் ஏற்றத்தடை, கிரவல் ஏற்றத்தடை எனப் பல தடைகள் மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள போதும் ஒப்பந்தகாரர்கள் அளவு கணக்கற்று வளங்களைச் சுரண்டுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. மீளக் குடியமர்ந்த மக்கள் வீட்டை அமைக்கவோ அல்லது விவசாய வேலிகளை அடைக்கவோ காட்டில் தடிகூட வெட்ட முடியாது இருக்கையில், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு வீதிகளின் ஓரங்களில் காடுகள் அழிக்கப்பட்டு பெரிய குழிகள் ஏற்படும் வகையில் கிரவல் அகழப்படுகிறது.

ஒட்டுசுட்டான், கற்சிலைமடுப் பகுதியில் பொதுக் காணிகள் இல்லாத நிலையிலும், இவ்வாறு கிரவல் அகழப்படுகிறது. கிரவல் தோண்டப்படும் இடங்கள் பெரிய குழிகளாக உள்ளதோடு எதிர்காலத்தில் குளங்களாக மாறும் நிலை காணப்படுகின்றது.

முல்லை மாவட்டத்தில் இருந்து லொறி லொறியாக விறகுக்கான மரக்குற்றிகளும் முதிரை, பாலை மரக் குற்றிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால் வன்னி மக்கள் தமது வீடுகளிலுள்ள மரங்களைக் கூடத் தமது தேவைக்கென வெட்ட முடியாத நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக உயரதிகாரிகளுக்குப் பல தடவைகள் தாம் தெரிவித்துள்ள போதிலும், பயன்கிட்டவில்லை எனவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை நீடிக்குமானால் இந்தப் பகுதியில் வாழுகின்ற மக்களின் எதிர்காலமே கேள்விக் குறியாக மாறிவிடுமென இங்குள்ள பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-500)

# அதிகரித்த கட்டணம் அறவிடும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

## வவுனியா நகரில் அடாவடி

வவுனியா,ஏப். 5

வவுனியா பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் அதிக கட்டணம் அறவிடப்படுவதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரசபையினரால் அமைக்கப்பட்ட இந்தச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தைத் தனியார் ஒருவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகின்றார்.

குத்தகைக்கான நிபந்தனையின் பிரகாரம் சைக்கிளுக்கு இரண்டு ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு ஐந்து ரூபாவும் அறவிடப்பட வேண்டும். இதற்கான அறிவித்தலும் காட்சிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆனால் குத்தகைதாரர் இவற்றையெல்லாம் உதாசீனம் செய்துள்ளார். அவர்கள் சரியான கட்டண விகிதங்களைக் காட்சிப்படுத்தாததோடு சைக்கிளுக்கும், மோட்டார் சைக்கிளுக்கும் முறையே 10ரூபா, 20 ரூபா என்ற வகையில் அதிகரித்த கட்டணத்தை அறவிட்டு வருகின்றார். இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், பொது மக்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை வவுனியா பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடங்களிலும் காலை, மாலை வேளைகளில் மாறுபட்ட வகையில் கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக நகரசபைத் தலைவர், அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-400)

# சூரிய மின்கலம் என்னானது? விரக்தியில் குமுறும் மக்கள்

முல்லைத்தீவு,ஏப்.5

சூரிய மின்சக்தியில் இயங்கும் சோலர் மின்கலத்தைப் பெறுவதற்குப் பணத்தைச் செலுத்தியவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மின்கலத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தாரால் விவசாயிகளிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பணம் பெறப்பட்டது. சிலர் 11 ஆயிரம் ரூபா செலுத்தியுள்ளனர். ஆனால் 10 ஆயிரம் ரூபாவுக்கு மாத்திரமே பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது.

பணத்தைச் செலுத்தி வருடக்கணக்காகிய போதிலும், சூரிய மின்சக்திக்கலம் வழங்கப்படவில்லை. இதனால் பணத்தைச் செலுத்தியவர்கள் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மின்சார வசதியும் இல்லை. எரிபொருள் விலையும் எட்ட முடியாத அளவு உயரத்தில் உள்ளது. இந்த நிலையில் சூரிய மின்கலத்தை உபயோகித்துத் தமது விவசாய முயற்சிகளை மேற்கொள்ளலாம் என விவசாயிகள் நம்பியிருந்தனர். ஆனால் ஏமாற்றமே இவர்களுக்கு எஞ்சியுள்ளது.

மின்கலத்தை வழங்க முடியாது விட்டால், தமது பணத்தையாவது திருப்பித் தருமாறு இவர்கள் கேட்ட போதிலும், உரிய பதில் கிடைக்கவில்லை. பலர் வட்டிக்குப் பணத்தைப் பெற்று சூரியகலத்துக்கான பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

அரச அதிபர் இதில் நேரடியாகத் தலையிட்டுத் தமக்கு உதவ வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)



பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மன்னார்ப் பாடசாலையொன்றின் முன்னாலுள்ள வீதியில் மஞ்சள் கோடு இடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் வீதி ஒழுங்குபடுத்தலில் ஈடுபட்டிருக்கின்றார். (12)

## புதிய பரிபாலனசபை

வவுனியா, ஏப்.5

மருக்காரம்பளை வீதி-அம்பிகைபாலன் கோட்டம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயப் பரிபாலன சபைக்குப் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஏ.திரிபுவனன், உபதலைவர் கே.கணேசராசா, செயலாளர் எஸ்.சிவகுமார், உபசெயலாளர் எஸ்.யோகதாஸ், பொருளாளர் எஸ்.சந்திரசேகரம் .

நிர்வாக சபை உறுப்பினர்களாக கே.ஆனந்தலிங்கம், கே.ஜெயராசா, எஸ்.சிவகுமார், எஸ்.மகேஸ்வரலிங்கம், எஸ்.தயாநிதி, திருமதி நாகேஸ்வரி ஆகியோரும்,

போசகர்களாக கே.பரமேஸ்வரன், எஸ்.செல்வராசா, எஸ்.இலட்சுமணன் மற்றும் கணக்குப் பரிசோதகராக கே.சுபாஸ்கரனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-400)

# வன்னி மண்ணை வளமாக்குவதற்கு கல்விசார் அறிஞர் முன்வரவேண்டும்

## மாவை சேனாதிராசா அறைகூவல்

வவுனியா, ஏப்.5

வன்னி மண்ணை கலாசார, மொழி, பண்பாடு ரீதியாக வளமான பிரதேசமாக மாற்றுவதற்கு கல்விப்புலம் சார் அறிஞர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு அறிவுசார் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா.

தமிழ்த்தேசியப் பற்றாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான பொன் சந்திரகேசரி எழுதிய 'மலரும் நினைவுகள்' நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் வவுனியா றோயல் கார்டனில் கலாநிதி தமிழ்மணி அகளங்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

வன்னியிலுள்ள முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்கள் மண் வளங்கொழிக்கும் பல வளங்களைக் கொண்டுள்ளது. இந்தப் பிரதேசங்களை மேம்படுத்தவதற்கு இங்குள்ள அறிவுசார் சமூகம் முன்வரவேண்டும்.

சிங்கள அரசனானது தனது பிரதேசத்திலுள்ள ஆறு பல்கலைக்கழகங்களைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்குத் தெரிவு செய்துள்ளது. இது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றபோது நாம் அதனை [illegible] எமது மக்களின் வரிப்பணத்தைப் பெற்று அதன் மூலம் தமது பிரதேசங்களிலுள்ள பல்கலைக் கழகங்களைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்த முயற்சி எடுப்பதோடு, எமது பிரதேசத்திலுள்ள பல்கலைக் கழகங்களைப் புறக்கணிப்பது அரசின் இன ஒதுக்கலை வெளிக்காட்டுகின்றது.

எமது வடக்குக்கிழக்குத் தாயக பூமியில் சிங்கள அரசு ராணுவ மயமாக்கலை மேற்கொள்வதுடன், கலாசார சீரழிவுகளையும் ஏற்படுத்தி எம்மினத்தை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றது. இதனைச் சர்வதேச சமூகம் நன்கு புரிந்துகொண்டுள்ளது.

இனமாற்றம், மதமாற்றம் கலாசாரப் பிறழ்வு என்ற வகையில் எமது தேசத்தை சீரழிப்பதுடன் பௌத்த மத நாடாகவும் மாற்றமுயற்சிக்கின்றது. அதற்கு நாம் துணை போகக்கூடாது.

ஜெனிவாவில் இடம் பெற்ற இலங்கைக்கெதிரான பிரேரணையை உலக நாடுகள் பல ஆதரித்ததோடு, இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதுடன் நல்லிணக்க ஆணைக்குழுவால் முன் வைக்கப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும எனவும் வலியுறுத்தியுள்ளன.

இதனைக் கண்காணிப்பதற்கு ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் இலங்கை வரவுள்ளது.

ஐ.நா. தீர்மானம் தொடர்பாக இலங்கை அரசு தரப்பில் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை. இவ்வாறான நிலையில் பல்லாயிரக் கணக்கானவர்களின் தியாகத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள எமக்குச் சார்பான ஜெனீவாத் தீர்மானத்தை ஏற்று எம் இனத்தின் விடிவுக்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுப் பணியாளருக்கு பண்டிகைக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 5

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு பண்டிகைக் கால கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அனேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கூட்டுறவு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சகல பணியாளர்களுக்கும் இந்த பண்டிகைக் கால முற்பண கொடுப்பனவாக ஐயாயிரம் ரூபா வழங்கப்படும்.

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதேவேளை நட்டத்தில் இயங்கும் சங்கங்களும் இந்தக் கொடுப்பனவை வழங்க முடியும் என்று அந்த அதிகாரி கூறினார். (ம-17)

# சுப்பர்மடம் மீ[illegible]வரை மீட்டுத் தாருங்கள்

### இந்தியத் துணைத் தூதரகத்திடம் மனு

யாழ்ப்பாணம், ஏப். 5

கடலுக்குச்சென்ற வேளையில் இந்திய கடற்படையால் அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதி மீனவர்கள் இருவரையும், மீட்டுத்தரும்படி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரியிடம் நேற்று முன்தினம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களான விவாஜி பிரபு, தயாளன் தயாபரன் ஆகிய இருவருமே இந்தியக் கடற்படையினரால் அழைத்துச்செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரது குடும்ப உறுப்பினர்களும் சுப்பர் மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுமே இந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

**இந்திய மீனவர்களே இருவரையும் பிடித்துச் சென்றுள்ளதாகவும் கூறுகின்றனர்.**

கடந்த மாதம் 29 ஆம் திகதி யமகா படகில் தொழிலுக்குச் சென்ற இரண்டு கடற்றொழிலாளர்களும் 30ஆம் திகதி வீடு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவர்கள் வீடு திரும்பவில்லை. இருவரையும் இந்தியக் கடற்படையினரே பிடித்துச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி, மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் ஆகியோரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. (ம-3)

## காசநோயின் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். மாவட்டத்தில் காச நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கிறது.

5 வருடங்களின் பின் ஒவ்வொரு வருடமும் ஆயிரத்து 200 காசநோய் நோயாளர்கள் இனங்காணப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.

யாழ். மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.யமுனானந்தா இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 19 ஆவது வருடாந்தச் செயலமர்வு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த நோய்க்கு நேரடித் தாக்கங்களாக அதிக நெருக்க சூழ்நிலை, சமூக பிறழ்வுகள், யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள், மருந்து வகைகளை இடையில் விடுதல், சுகாதார வசதி இன்மை போன்றன உள்ளன. அத்துடன் மன அழுத்தமும் சரியான உணவுப் பழக்க வழக்கங்கள் இன்மையும் பொருளாதார வறுமையும் காரணமாக அமைகின்றன.

வடக்கைப் பொறுத்த வரையில் நோயாளர்களுக்குச் சளிப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வு கூடம் இல்லை. நவீன வைத்திய சாலைகளோ மருந்து வகைகளோ இல்லை.

2015 ஆம் ஆண்டளவில் காசநோயைத் தடுப்பதற்கான புதுவகை மருந்துகள் பாவனைக்கு வரும். இவ்வகைத் தடுப்பு மருந்துகள் பாவனைக்கு வருவதால் நோயாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.- எனத் தெரிவித்தார். (ம-13)




யாழ். விஞ்ஞான சங்கத்தின் 19 ஆவது வருடாந்த மாநாடு நேற்றுப் புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. முதல்நாள் அமர்வில் பேராதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.பி.திசாநாயக்கா, கணித, புவியியல் பேராசிரியர் சிறிசற்குணராஜா, விவசாயத்துறை பேராசிரியர் கு.மிகுந்தன் மருத்துவர் திருமதி பவானி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-13)

## வெள்ளத்தால் பாதசாரிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ். நகரின் சத்திர சந்திக்கு அப்பால் கே.கே.எஸ். வீதி ஓரத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பாதசாரிகள்பெறும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இரண்டு நாள்கள் பெய்த மழையை அடுத்து இந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கி காணப்படுகின்றன.

வீதியோரத்தில் இவ்வாறு தேங்கி நிற்பதால் பாதசாரிகள் மற்றும் இந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருள்களை வாங்கச் செல்வோரும் சிரமப்பட்டு வருகின்றனர். (ம-17)

## கீரிமலை, தனங்கிளப்பு பகுதிகளில் உப தபாலகம்

யாழ்ப்பாணம்,ஏப். 5

கீரிமலை மற்றும் தனங்கிளப்பு பிரதேசங்களில் கடந்த பல ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் உப தபாலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கீரிமலை தபாலகம் 22 வருடங்களின் பின்னரும், தனங்கிளப்பு தபாலகங்கள் 12 வருடங்களின் பின்னரும் அதே இடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தபாலகங்கள் ஊடாக மக்களுக்கு சிறந்த முறையில் தபால் சேவையை மேற்கொள்வதற்கும் தபால் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை குரும்பசிட்டி உபதபாலகத்தை மீண்டும் அதே இடத்தில் திறந்து வைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தபாலகத்தை திறந்து வைப்பதற்கு மத்திய தபால் திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

## நவீன சிறுவர் வைத்தியசாலை உடன் அமைக்கப்படவேண்டும்

### வலி. மேற்கு பிரதேச கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்.மாவட்டத்தில் நவீன வசதிகள் கொண்ட சிறுவர் வைத்தியசாலையை உடனடியாக ஆரம்பிக்குமாறு வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக ஏற்கனவே இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

தற்போது இந்தத் திட்டத்தை மீளவும் நடைமுறைப் படுத்துவது தொடர்பாக வலி.மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரனால் சுகாதார அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர், மற்றும் மருத்துவ வட்டாரங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாட்டை முன்வைத்து கடந்த வாரம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் மிக விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-14)

## காரைநகரில் நடக்கும் குற்றங்களை வட்டு. பொலிஸிலும் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஏப்.5

காரைநகரில் இரவில் இடம்பெறும் குற்றச் செயல்களுக்கான முறைப்பாட்டை மக்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைத்தில் முறையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று காரைநகர் பிரதேச சபை உபதலைவர் ச.துர்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பது சம்பந்தமான கூட்டம் ஒன்று கடந்த வாரத்தில் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆலய பரிபாலன உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள், ஊர்காவற்றுறைப் பொலிஸார் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போதே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

காரைநகரில் இரவில் இடம் பெற்றுவரும் தொடர்ச்சியான திருட்டுக்களை தடுப்பதற்கு பொலிஸாரின் இரவு ரோந்து அவசியமாக உள்ளது.

திருட்டுகள் இடம்பெற்றமை குறித்த முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு பல மைல் தூரத்துக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

பொலிஸாரும் உரிய நேரத்துக்கு இங்கு வந்து சேர்வதிலும் தாமதம் ஏற்படுகின்றது.

குறிப்பாக காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்குமான கடற்பாதை சேவை மாலை 6.15 மணியுடன் நிறுத்தப்படுகிறது.

இந்தக் கடற்பாதை சேவை இரவில் நடைபெறாததால் காரைநகருக்கு வரமுடியாத நிலை பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் கட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து இரவில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கான முறைப்பாட்டை பிரதேச மக்கள் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறையிடுவதற்கு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-17)

# வேலைவாய்ப்பு இன்றி 38 ஆயிரம் இளைஞர், யுவதிகள்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ். மாவட்டத்தில் 38ஆயிரம் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். இவர்களில் 2ஆயிரத்து 600 பேர்வரையில் பட்டதாரிகள். யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருடனான சந்திப்பின்போதே அவர் இந்த விவரங்களைக் கூறியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சிறுவயதிலிருந்து ஊக்கப்படுத்திக் கற்பிக்கின்றனர். அத்துடன் இயல்பாகவே யாழ். மாவட்டத்தில் கல்வி கற்றோர் தொகை அதிகம். அத்துடன் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்றனர்.

அண்மையில் பட்டதாரி பயிலுனர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது யாழ். மாவட்டத்திலிருந்து 2ஆயிரத்து 600 பேர் வரையில் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் அரைவாசிப் பேருக்கு மேற்பட்டவர்கள் இரண்டு பட்டங்களைப் பெற்றுள்ளனர். இவர்களும் வேலையில்லாமல் உள்ளனர்.

இதனைவிட ஏராளமான இளைஞர், யுவதிகள் யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். போர் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமையால் வேலைவாய்ப்பு இல்லாதோர் தொகை அதிகரித்துள்ளது. - என்றார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி ஊழியர்கள் நேற்று நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பு




யாழ்ப்பாணம், ஏப்.5

நியாயமான சம்பள அதிகரிப்பைக் கோரி நாடு முழுவதிலும் இலங்கை வங்கிக் கிளைகளின் ஊழியர்கள் நேற்று நண்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை வங்கி ஊழியர்களினால் நியாயமான சம்பளக் கோரிக்கையை முன்வைத்து, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டிலேயே பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது.

இந்தத் தொழிற் சங்க நடவடிக்கை தொடர்பில் முன்னரே வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்த போதும் வாடிக்கையாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். இலங்கை வங்கி ஊழியர்கள் தத்தமது வங்கிக் கிளைகளின் முன்பாக சுலோக அட்டைகளைத் தாங்கிப் பிடித்த வண்ணம் பகிஷ்கரிப் பில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்பில்:- வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பள மொன்றை வழங்கு, அரச வங்கிகளின் இலாபமோ உச்சாணியில் ஊழியர்களின் சம்பளமோ சொற்ப அளவு, சம்பளப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய அனைவரும் ஒன்றிணைவோம், கட்சியாளர்களே அரச வங்கிகளை படுபாதாளத்தில் தள்ளிவிடாதீர், நிதி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களைச் சரியாக நடைமுறைப்படுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வங்கிகளுக்கு முன்பாக பணியாளர்கள் நின்றனர்.

இதேபோன்று தென்மராட்சியிலும் பணியாளர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். வவுனியாவில் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் உயர் அதிகாரிகளுக்கு 25 வீத சம்பள அதிகரிப்பு, கனிஷ்ட தரத்தினருக்கு 15 வீத சம்பள அதிகரிப்பு, இலாபத்தில் ஒன்றரை வீத போனஸ் போன்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். (ம-5-9-400)

## எமது நாளாந்த வாழ்வில், வாழ்க்கை பற்றிய நோக்கம் எவ்வாறாக இருத்தல் வேண்டும்

நாம் எமது கடமைகளையும் கடப்பாடுகளையும் ஆற்றிய வண்ணம் இருக்கவேண்டும். அதுவும் முறையாக, ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஆற்றவேண்டும். அதுவே எமக்கு ஆனந்தத்தை நல்கவல்லது. நாம் எதிர் காலத்தைப் பற்றி கவலைப்படவோ, இறந்த காலத்தைப் பற்றி சதா சிந்தித்துக்கொண்டோ இருக்கக்கூடாது. இவையெல்லாம் தோன்றி மறையும் முகில்களைப் போன்றவை. என்றோ ஒரு நாள் நாம் சத்தியத்தைப் பற்றி அறியத்தான் போகிறோம். இப்பொழுதே அதனைப்பற்றி அறிய ஆரம்பித்தல் நன்று.

நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். ஏனெனில் இறைவனது கருணை அன்பு, அருள், எவ் வேளை எமக்குக் கிடைக்குமென நாம் அறியோம். எவ்விடத்து, எச்சந்தர்ப்பத்தில் என்பதையும் நாம் அறியோம். இறைவனது சித்தம் எத்தகையது என்பதனையும் நாம் அறியோம்.

இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமானதன்று என அறிந்த பின் நாம் எதற்கும் கவலை கொள்ளக்கூடாது. எத்தகைய கவலைக்கும் நாம் இடம்கொடுக் கக்கூடாது.



அப்பொழுதுதான் நாம் தெய்வீகத்தை அடையக்கூடியவராவோம்.

**சாயி சிந்தனை**

## இன்று ஓய்வூதியம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத ஓய்வூதியம் இன்று வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்துக்குரிய ஓய்வூதிய தினமாக ஏப்ரல் 9 திகதி திறைசேரியினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று முன்தினம் விசேட அறிவித்தல் மூலம் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இன்று ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-100-9)

## புங்குடுதீவில் பொலிஸ் பிரிவு அமைக்க கோரிக்கை

புங்குடுதீவு ஆலடிச் சந்தியில் பொலிஸ் பிரிவு ஒன்றை அமைத்து உதவவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புங்குடுதீவு ஆள்கள் இல்லாத வீடுகளில் இருந்து பொருள்கள், இரும்புகள் களவாடப்படுவதைக் குறைக்கும் முகமாக ஆலடிச்சந்தியில் பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேசசபை உறுப்பினர் க.கனகரத்தினம் வேலணை பிரதேச சபைத் தலைவ்வர் சி.சிவராசாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். (ம)

## இலங்கை வங்கி தலைவரை பதவி விலகுமாறு பணிப்பு

இலங்கைவங்கியின்தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு நிதி அமைச்சு அறிவித்திருப்பதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் 29ஆம் திகதியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட நிதி அமைச்சின் பணிப்புரைக்கமைய, இலங்கை வங்கியின் தலைவர் தமது பதவியை ராஜினாமாச் செய்வாரா, இல்லையா என்பது குறித்த தகவல் எதுவும் தெரியவில்லை.

இலங்கை வங்கியின் முகாமைத்துவச் செயற்பாடுகள் குறித்து கடந்த காலத்தில் நிலவி வந்த சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் இலங்கை வங்கிக்குப் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ் வாரத்தில் இலங்கை வங்கிக்குப் புதிய தலைவர் நியமிக்கப்படுவார் எனத் தெரியவருவதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-6)

உ



அருள்மிகு கண்ணகி அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
கண்ணகைபுரம் புங்குடுதீவு – 10

இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா அழைப்பு

அம்பிகை அடியார்களே!

எம் குல தெய்வமும், தென்திசை நோக்கி வீற்றிருந்து அருள் பாலிப்பவளுமாகிய கண்ணகி அம்மனுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எழில்மிகு இராஜகோபுரத்திற்கான கும்பாபிஷேகமும் வசந்த மண்டப அலங்கார தூபி அபிஷேகமும் மற்றும் **"புனித யாத்திரிகர் மடம்"** திறப்பு விழா என்பன நிகழும் சர்வமங்கள கரமான கர வருடம் பங்குனித் திங்கள் 24 ஆம் நாள் (06.04.2012) வெள்ளிக்கிழமை அதாவது நாளை காலை 8.30 மணிமுதல் 11.30 மணி வரை சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அத்தருணங்களில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு எம்பெருமாட்டியை வணங்கி சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**கண்ணகை புரம்,**
**புங்குடுதீவு – 10.**
T.P. 021 3207690

**- ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை.**
(சகலருக்கும் அன்னதானம் (மகேஸ்வர பூஜை) வழங்கப்படும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஜியில் கடும் மழை



பிஜி தீவுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, எட்டாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதுவரையில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிஜியின் விட்டி லெவா தீவில் மழையுடன் சூறாவளியும் வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சூறாவளி பிஜியின் தெற்குப் பகுதி ஊடாக இன்று தாக்கும் என அந்த நாட்டு காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பிரதமர் வொரேக் பய்னிமரமாவும், அரச அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

# ஒபாமாவைக் கொல்லச் சதி

## தீவிரவாதி அதிர்ச்சித் தகவல்

2009 ஆம் ஆண்டில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றிருந்தார். அந்த நிகழ்ச்சியின் போது அவரை கார்வெடிகுண்டு வைத்துபடுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டமை குறித்து தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில், கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் 77 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக தீவிரவாதி ஆண்டர்ஸ் பெஹ்ரிங் பிரெவிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், 2009 ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற வந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியமை தெரியவந்துள்ளது.



உடோயா தீவு பகுதியில் துப்பாக்கிச் சூட்டுடன் ஆரம்பிக்கும் தாக்குதல் ஒபாமா இருக்கும் இடத்தில் கார் குண்டு வெடிப்புடன் நிறைவடைய இருந்ததாகத் திட்டம் தீட்டப்பட்டிருந்தது. ஆனால் ஒஸ்லோ பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால், இறுதிநேரத்தில் அந்தச் சதித்திட்டம் கைவிடப்பட்டது என்று ஆண்டர்ஸ் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந)

# லிபிய கலவரத்தில் 22 பேர் பலி



திரிபோலி, ஏப்.5

லிபியக் கலவரத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். லிபியாவின் மேற்கு நகரமான ஸூவாராவில் நேற்றுமுன்தினம் அரபு மற்றும் பழங்குடியினருக்கு இடையில் நடைபெற்ற கலவரத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்று லிபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் போராட்டக்காரர்கள் 17 பேரும், பெண்கள் இருவர் உள்பட 22 பேரே உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ராணுவத்தை வெளியேற்ற சம்மதித்தது சிரிய அரசு

புரட்சியில் ஈடுபடும் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் ராணுவத்தை வெளியேற்ற சிரியா அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று கொபி அனான் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத் தலைமையிலான சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து மக்கள் புரட்சியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதை ஒடுக்க மக்கள் மீது ராணுவத் தாக்குதல் நடத்தி வருகிறார் ஆசாத். குறிப்பாக டமாஸ்கஸ், ஹாம்ஸ் உட்பட முக்கிய நகரங்களில் ராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் இதுவரை குழந்தைகள், பெண்கள் உள்பட 6,000இக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இதற்கு ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மக்களுக்கு எதிரான ராணுவத் தாக்குதலை நிறுத்த ஐ.நா. முன்னாள் பொதுச் செயலர் கொபி அனான் தலைமையில் அரபு லீக் சமாதானக் குழுவினர், சிரிய அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து, ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் ராணுவத்தை வெளியேற்றுவதாகவும் மக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்துவதாகவும் சிரியா ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தகவலை கோபி அனான் நேற்றுமுன்தினம் ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் சூசன் ரைஸ் கூறியதாவது:-

''ஏப்ரல் 10ஆம் திகதிக்குள் ராணுவத்தை வெளியேற்றுவதாக கொபி அனானுக்கு சிரிய வெளியுறவுத் துறை அமைச்சர் கடிதம் அனுப்பி உள்ளார். இதற்கு ஆதரவு அளிக்கும்படி உலக நாடுகளை கொபி அனான் கேட்டுக் கொண்டுள்ளார். அனானுடைய அமைதித் திட்டத்துக்கு சிரியா எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை''- என்றார்.

ஆனால், கடந்த காலங்களில் அளித்த வாக்குறுதிகளை சிரியா நிறைவேற்றவில்லை. அதுபோல் ஏப்ரல் 10 திகதிக்கு முன் படைகளை வெளியேற்றுவோம் என்றுகூறுவதை நம்புவதற்கில்லை என்று மேற்கத்திய நாடுகள் சந்தேகம் எழுப்பியுள்ளன.

# விமானத்தில் கோளாறு உயிர்தப்பினார் கிலானி

இஸ்லாமாபாத், ஏப்.5

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி பயணித்த விமானத்தில், கோளாறு ஏற்பட்டதால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் கிலானி தகவல் தொடர்புத் துறை அமைச்சர் பர்டோஸ் ஆஷிக் அவான் உள்ளிட்ட அமைச்சர்கள், சிந்து மாகாணத்தில் உள்ள சுக்குர் என்ற இடத்தில், பெனாஸிர் பூட்டோ நினைவு தின நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, ராவல் பண்டி ராணுவத் தளத்திலிருந்து, சிறப்பு விமானத்தில் புறப்பட்டனர். இவர்கள் சென்ற விமானத்துக்கு நடுவானில் கோளாறு ஏற்பட்டது. இதனால், விமானம் அவசரமாக சக்லாலா விமானப் படைத்தளத்தில் தரையிறக்கப்பட்டது. அதன் பின் மற்றொரு விமானத்தில் இவர்கள் சுக்குர் சென்றனர்.




# சிரியா விரைகிறது சர்வதேசக் குழு

சிரியாவில் சர்வதேச கண்காணிப்பாளர்களை நிலை நிறுத்துவது தொடர்பில் விவாதிக்க அடுத்த 40-மணி நேரத்தில் ஒரு குழு சிரியத் தலைநகர் டமாஸ்கஸுக்குச் செல்லவுள்ளது என்று சிரியா வுக்கான ஐ.நா. மற்றும் அரபு லீக்கின் சிறப்புப் பிரதிநிதி கொபி அனானின் சார்பில் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்தக் குழுவில் ஐந்து அல்லது ஆறு பேர் இருப்பார்கள் எனவும் அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஏப்ரல் மாதம் பத்தாம் திகதிக்குள் மோதலை முடிவுக்கு கொண்டுவர சிரியா ஒப்புக்கொண்டுள்ளது.

ஆனாலும் எதிர்க்கட்சியினர் பலமாக இருக்கும் இடங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

இதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபை சிரியா தொடர்பில் ஒருங்கிணைந்த ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடிக்கத் தவறியதன் மூலம் அந்த நாட்டு மக்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாவதற்கு அது மறைமுக ஆதரவு வழங்கியுள்ளது என துருக்கியப் பிரதமர் ரீசெப் தயிப் எர்டோகன் குற்றம்சாட்டியுள்ளார்.

# இடைத்தேர்தல் முடிவுகளுக்கு மியன்மார் அதிபர் வரவேற்பு





மியான்மாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இடைத் தேர்தல்களில் எதிர்கட்சி பெற்ற பெரும் வெற்றியை அந்த நாட்டின் ஜனாதிபதி தெயின் செயின் அங்கீகரித்துள்ளார்.

கம்போடியாவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இந்தக் கருத்தை மியன்மார் அதிபர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் நடைபெற்ற அந்த இடைத் தேர்தல்களில் ஆங் சான் சூகியின் தலைமையிலான ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி, போட்டியிட்ட 45 இடங்களில் குறைந்தது 40 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் தற்போது ஒரு சிறிய எதிர்க்கட்சிக் கூட்டணியை அமைக்கும் பணியில் ஜனநாயகத்துக்கான தேசிய முன்னணி ஈடுபட்டுள்ளது.

அங்கு இடைத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் மியன்மாரின் மீதான தடைகளை நீக்க தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் மீண்டும் தாக்குதல் நடத்துவோம்

## எச்சரிக்கை விடுக்கிறது அல்குவைதா

நியூயோர்க் இரட்டைக் கோபுரத்தாக்குதல் போன்ற மற்றொரு தாக்குதல், அமெரிக்காவில் விரைவில் நடைபெற இருப்பதாக அல்குவைதா இயக்கத்தின் பெயருடன் 'போஸ்டர்' இணையத்தளத்தில் வெளியாகி உள்ளது.

அன்சர் அல் முஜாஹிதீன் அராபிக் அமைப்பின் சார்பில் நடத்தப்படும் இணையத் தளத்தில் இந்த இணையத்தள போஸ்டர் வெளியாகி உள்ளது.

அமெரிக்க சட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் தீவிரவாத தடுப்புப் பிரிவினர் நடத்திய அதிரடிச் சோதனையில் இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.



அமெரிக்காவின் மான்ஹாட்டின் நகர், ஹொலிவூட் படப் பின்னணியில் அமைந்துள்ள இந்த போஸ்டரில் 'நியூயோர்க்கில் மீண்டும் அல்குவைதா தாக்குதல்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

அன்சர் அல் முஜாஹிதீன் அராபிக் அமைப்பு, ஆப்கனில் இயங்கிவரும் தலிபான் இயக்கம் மற்றும் ஜோர்தானிலிருந்து இயங்கிவரும் தீவிரவாத அமைப்பின் முன்னணித் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் நிறுவுநரும், ஜமாத் உத்தாவா அமைப்பின் தலைவருமான ஹபீஜ் சயீத் குறித்து தகவல் தருபவர்களுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித் துள்ள நிலையில், தீவிர வாதத் தாக்குதல் குறித்த அறிவிப்பு இணையத்தில் வெளியாகி உள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## உலகின் அதிக வயது மருத்துவர் 114 வயதில் உயிரிழப்பு



உலகின் மிக வயதான பெண் மருத்துவர் லையிலா 114 வயதில் மரணமடைந்துள்ளார்.

இவர் அமெரிக்காவின் ஜியார்ஜியா மாகாணத்தைச் சேர்ந்தவர். 1898ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி பிறந்த இவர் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் .


உலகின் மிகவும் வயதானவர்களில் 4ஆவது நபர் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தார்.

அட்லாண்டா மாகாணத்தில் கடந்த 1931ஆம் ஆண்டு பயிற்சி மருத்துவராகச் சேர்ந்து 70 ஆண்டுகள் மருத்துவ சேவை புரிந்து கடந்த 2001ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர் இறந்தார். இவர் இறந்த போது இவருக்கு வயது 113 வருடம் 312 நாள்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## ஏமனில் தாக்குதல்

### தீவிரவாதிகள் 43 பேர் சாவு




ஏமன் இராணுவத்திருக்கும் அல்குவைதா தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 43 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

ஏமனில் அல்குவைதா அங்கத்தவர்கள் மீது 3 நாள்களாக நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் தென் பிராந்தியத்தையும் வட பிராந்திய நகரங்களையும் இணைக்கும் முக்கிய பிராந்தியமொன்றை அரச படைகள் கைப்பற்றினர் என்று ஏமன் அரசு நேற்று அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களில் 43 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அல் குவைதா இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்ட ஏடன் மற்றும் அப்யான் மாகாணங்களிலுள்ள முக்கிய நகரங்களைக் கைப்பற்றுவதற்கு அரச படைகள் முயன்று வருகின்றன என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தீவிரவாதத் தலைவரின் தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங் கும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் நிறுவுநர் ஹஃபீஸ் முகமது சயீதை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10 மில்லியன் டொலர்கள் பரிசுத் தொகையை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

லஷ்கர்இ தொய்பா அமைப்பின் முகம் என்று பரந்துபட்ட அளவில் பார்க்கப்படும் ஜமாத் உத்தாவா அமைப்புக்குத் தற்போது முகமது சயீத் தலைவராக இருக்கிறார்.



மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 165 பேர் கொல்லப்பட்டனர். எதிர்தாக்குதலில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் தாக்கு தலை நடத்திய ஒரு பாகிஸ்தானியப் பிரஜையான அஜ் மல் கசாப் உயிருடன் பிடிக் கப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் இந்தியாவால் தேடப்படுபவர்கள் என்று பாகிஸ்தானிடம் கையளிக்கப்பட்டுள்ள பட்டியலில் சயீத்தின் பெயர் முக்கியமாக இடம்பெற்றுள்ளது.

ஆனால் தீவிரவாதத்தை முன்னெடுக்கும் ஓர் அமைப்பாக தாங்கள் செயற்படுவதாகக் கூறப்படுவதை ஜமாத் உத் தாவா மறுக்கிறது.

மும்பையில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின் பாகிஸ்தானால் ஹஃபீஸ் முகமது சயீத் கைது செய்யப்பட்டார் . எனினும் குற்றச் சாட்டுஏதும்பதிவுசெய்யப்படாமல் விடுவிக்கப்பட்டார்.

ஆனால் தற்போது அவர் கடும்போக்கு தியோபந்தி இஸ்லாமிய அமைப்பான ஜமாத் உத்தாவா அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவர் என்றும் அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறை தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது. இந்த நிலையிலேயே தற்போது அவரது தலைக்கு 10 மில்லியன் டொலர் பரிசுத் தொகையை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

## ஈரான் போர் மூண்டால்

### இஸ்ரேலுக்கு ஜேர்மன் ஆதரவு

ஜேர்மன் இஸ்ரேலின் மிகச்சிறந்த நட்பு நாடு என்றும், ஈரானுடன் போர் ஏற்படும் சூழ்நிலை உருவானால் ஜேர்மன் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தான் இருக்கும் என்றும் இஸ்ரேல் பத்திரிகையாளர் லயர் குறிப்பிட்டுள்ளார்.

இவர் 'ஜெடியோத் அக்ரோநோத்' என்ற இஸ்ரேலின் மிகப்பெரிய பத்திரிகையின் நிர்வாகத் தலைவராவார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இஸ்ரேலும், ஜேர்மனியின் ஆதரவை எதிர்ப்பார்த்துள்ளது. ஈரானுடன் போர் ஏற்படும் நிலைமை உருவானால், ஜேர்மனிக்கு இஸ்ரேலை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஜேர்மனியால் போரில் நடுநிலை வகிக்க இயலாது.

ஏற்கெனவே கடந்த 1991ஆம் ஆண்டில் முதல் வளைகுடாப் போர் ஏற்பட்ட போது ஜேர்மனி, இஸ்ரேலில் தனது ஏவுகணைகளை நிறுத்தி வைத்து, வான் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்தி சதாம் ஹுசைனின் ஏவுகணைத் தாக்குதலுக்கு சவாலாக அமைந்தது.

இது தவிர ஆயுதங்களையும், நீர் மூழ்கிக் கப்பல்களையும் இஸ்ரேல் ராணுவத்துக்கு விற்றது. இஸ்ரேல் ஆறாவது நீர்மூழ்கிக் கப்பலை வாங்குவதற்கு மூன்றில் ஒரு பங்கு பணத்தையும் வழங்கியது.

இந்தக் கப்பல் அணு ஆயுதங்களைக் கொண்டு செல்லக் கூடியது என்பதால் ஈரானுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இதுவரை அணு ஆயுதங்கள் இருப்பதாக இஸ்ரேல் தெரிவிக்கவில்லை. இருப்பினும் பல நாடுகள் இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக நம்புகின்றன- என்றார்.

## கம்போடியத் தலைநகரில் ஆசியான் அமைப்பின் மாநாடு

கம்போடியாவில் நடைபெறவுள்ள ஆசியான் அமைப்பின் மாநாட்டில் வட கொரியாவின் ஏவுகணைத் திட்டம் மற்றும் மியன்மாரின் தேர்தல் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல் பிராந்தியம் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்காசிய நாடுகள் கலந்துகொள்ளும் இரண்டு நாள் மாநாடு கம்போடியத் தலைநகர் புனோம் பென்னில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கு முன்னர் வட கொரியாவின் ஏவுகணைத் திட்டம் குறித்து ஆசியன் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

மியன்மாரில் முறையான தேர்தல் நடைபெற்றமை குறித்து ஆசியான் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் தமது ஆதரவை தெரிவித்திருந்தனர்.

2014 ஆம் ஆண்டு ஆசியன் அமைப்பின் உறுப்புரிமையை மியன்மார் பெற்றுக் கொள்வதற்கும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அதன் உறுப்பு நாடுகள் இணங்கியிருந்தன.

## நடுவானில் விமானிக்கு மாரடைப்பு விமானியானார் அவரது மனைவி




நடுவானில் விமானத்தை செலுத்திச் சென்ற கணவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து அவரது மனைவி அந்த விமானத்தைப் பத்திரமாகத் தரையிறக்கிய சம்பவம் அமெரிக்காவில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்க நாட்டின் விஸ்கன்ஸின் நகருக்கு அருகில் மனைவியுடன் சிறு விமானத்தில் சென்ற விமானி திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி சாய்ந்தார்.

இதனையடுத்து அதுவரை விமானத்தை செலுத்திப் பழக்கம் இல்லாத அவரது மனைவி, விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் வழங்கினார். அவர்கள் பயிற்சி பெற்ற விமானி ஒருவரை விமானத்தில் அனுப்பினர். அவர் இந்த விமானத்துடன் பறந்து வெளியில் இருந்தபடியே விமா னத்தை இயக்க அவருக்குக் கற்றுக் கொடுத்தார். அவர்களுடைய உதவியுடன் விமா னத்தைப் பத்திரமாக தரை இறக்கினார்.

செஸ்னா ரக விமானத்தை செலுத்திய கணவன் இருக்கையில் மயங்கிச் சாய மனைவி உடனே கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் வழங்கினார். அவர்கள் பயிற்சி பெற்ற விமானி மூலம் விமானத்தை இயக்குவது குறித்து விமானத்தில் பறந்தபடியே அந்தப் பெண்ணுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

அதன்போது விமானத்தின் வலதுபுற இயந்திரத்தில் எரிபொருள் தீர்ந்துவிட்டது. இதனையடுத்து விமான நிலையத்தை 10 முறை வட்டமடித்த பின் விமானத்தைத் தரை இறக்கினார் அந்தப் பெண்.

2 ,3 முறை குலுங்கிய விமானத்தின் முன்பகுதி மண்ணில் புதைய நின்றது. ஆனால் அதற்குள் அவருடைய கணவர் இறந்து விட்டார். அந்தப் பெண்ணின் உறுதியையும் பொறுமையையும் அனைவரும் பாராட்டினர்.

சவூதி அரேபியாவில், ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திய குற்றத்திற்காகப் பாகிஸ்தான் நபர் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் சவூதி அரேபியாவுக்குப் பெருந்தொகை போதைப்பொருளைக் கடத்தி வந்த வழக்கில் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டவர் என்றும் புனித நகரான மக்காவில் வைத்த இவர் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்றும் சவூதி அரேபிய உள்துறை அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 4 மாதங்களில் சுமார் 460 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக 681 பேர் சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டனர் என்று சவூதி உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் கொலை, பாலியல் வல்லுறவு, சமய எதிர்ப்பு, ஆயுத முனைக் கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த வருடம் இதுவரை 16 பேருக்கு சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.லேசர் குண்டுகள் வாங்குகிறது இந்தியா

### எதிரிகளின் பதுங்கு குழிகளைத் தகர்க்க



டில்லி, ஏப்.5

எதிரிகளின் பதுங்கு குழிகளைத் தாக்கி அழிப்பதற்காக லேசர் வகை குண்டுகளை அமெரிக்காவிடம் இந்தியாவாங்கவுள்ளது.

இந்திய விமானப் படைக்குத் தேவையான லேசர் வகை குண்டுகளைத் தயாரித்து வழங்க மேஜர் லாக்கீட் மார்டின் எனும் அமெரிக்க நிறுவனத்துடன் சுமார் 100 கோடி ரூபா அளவுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகளின் பதுங்குகுழிகளை வானிலிருந்தபடியே தகர்க்கும் வல்லமை கொண்ட 100 இற்கும் மேற்பட்ட லேசர் குண்டுகளை ஜாக்குவார் போர் விமானத்தில் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப் பட்டது.

ஒப்பந்தத்தில் மிகக் குறைந்த விலையைக் குறிப்பிட்டு, இந்த ஒப்பந்தத்தை பெற்றதாக லாக்கீட் மார்டின் நிறுவனத்தின் இந்தியத் தலைவரான ரோஜர் ரோஸ் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பேவ் வே-2 லேசர் வகைக் குண்டுகள் வழங்கவுள்ளதாகவும், இது குறித்து பேச்சு நடந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரில் எதிரிகளின் குடியிருப்புகளை அழிப்பதற்கு லேசர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான குண்டுகள் புவியீர்ப்பு விசைக் குண்டுகளைவிட மிகவும் துல்லியமாக இலக்கைத் தாக்கும் வல்லமை கொண்டவை. (வ)

# 5 நாடுகள் கூட்டுப்பயிற்சி

### இந்தியா வருகின்றன போர்க் கப்பல்கள் அவற்றில் ஒன்று பில்லேடனை புதைத்த கலம்

கடற்பகுதியில் நடைபெறும் அசம்பாவிதங்களைத் தடுக்கவும், கடல் எல்லைகளைக் கண்காணிக்கவும்வெளிநாடுகளுடன் இணைந்து இந்தியா கடற்கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்காகப் பின்லேடனைக் கடலில் புதைத்த கப்பலும் இணைந்து கொள்கிறது.



இதுபோன்ற கூட்டுப் பயிற்சியில் இந்தியா 14 முறை ஈடுபட்டுள்ளது. தற்போது 15ஆவது முறையாக கேரளா மாநிலம் மலபார் கடலில் கூட்டுப் பயிற்சி நடைபெற உள்ளது.

'எக்ஸெர்சைஸ் மலபார்-2012' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போர்க் கப்பல்கள் பங்கேற்கின்றன.

வங்காள விரிகுடாவில் விசாகப் பட்டினத்தில் ஆரம்பித்து அந்தமான் நிக்கோபார் தீவுகள் வரை இந்த பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தக் கூட்டுப்பயிற்சியில் பங்குபற்றும் அமெரிக்கக் கப்பல் படை கப்பலானது (சி.வி.என்-70) உலகிலேயே மிகப்பெரிய போர்க் கப்பல் ஆகும். 330 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பலின் மேல் தளத்தில் அதிகமான விமானங்களை நிறுத்தி வைக்க முடியும்.

உலகையே அச்சுறுத்தி வந்த பின்லேடன், பாகிஸ்தானில் அபோதாபாத் மாகாணத்தில் பதுங்கி இருந்தபோது அமெரிக்க படையினர் சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றனர்.

அவரது உடல் இந்தியப் பெருங் கடலுக்கு அடியில் யாரும் அடையாளம் காணாத இடத்தில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்லேடன் உடலைக் கொண்டு செல்ல இந்தக் கப்பல் பயன்படுத்தப்பட்டது என்று அமெரிக்கத் தரப்பு கூறுகிறது. கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக புறப்பட்டு வரும் அந்தக் கப்பல், நாளை மறுதினம் சனிக்கிழமை சென்னை துறைமுகத்தை வந்தடையும்.

இங்கு சில மணி நேரம் அந்த கப்பல் நிறுத்தி வைக்கப்படும் என்று, இந்திய கப்பல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்..இந்த கப்பலுடன் மேலும் இரண்டு அமெரிக்க போர்க் கப்பல்களும் வருகின்றன. அந்தக் கப்பல்களும் சென்னை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்படும்.

# ராணுவப்புரட்சிக்கு முயற்சியா?

### மன்மோகன்சிங் மறுப்பு

டில்லி, ஏப்.5

இந்தியாவில் இராணுவப் புரட்சிக்கு முயற்சிகள் நடந்ததாக வெளிவந்துள்ள செய்தியை பிரதமர் மன்மோகன் சிங் மறுத்துள்ளார். இந்திய ராணுவத்துக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிப்பது சரியானதல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வயது பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இராணுவத் தளபதி வி.கே. சிங் வழக்குத் தொடர்ந்திருந்தபோது மத்திய அரசுக்கு தெரிவிக்காமல்கடந்த ஜனவரியில் இராணுவத்தின் இரண்டு பிரிவுகள் தலைநகர் டில்லியில் குவிக்கப்பட்டன என்று இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து உடனடியாகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பிரதமருக்கு உளவுத்துறை தகவல் கொடுத்ததாகவும், அதன் பின்னர் அந்த இராணுவப் பிரிவுகள் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்செய்தியை பிரதமர் மன்மோகன் சிங்கும், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். இராணுவத் தளபதியின் பதவியை யாரும் கொச்சைப்படுத்த முயலக் கூடாது - என்றார்.

இதுகுறித்து அந்தோனி தெரிவித்ததாவது:

இராணுவத்தின் இது போன்ற நடமாட்டம் ஒன்றும் புதிதல்ல, வழக்கமானதுதான். ஜனநாயகத்தை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையிலும் இந்திய ராணுவம் இறங்காது. ராணுவத்தின் நாட்டுப்பற்று குறித்து எவரும் சந்தேகம் எழுப்ப முடியாது - என்றார். (வ)

# இந்தியக் கடற்படையில் ரஷ்ய அணு நீர்மூழ்கி



விசாகப்பட்டினம், ஏப்.5

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 'நெர்பா' என்னும் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் இந்திய கடற்படையில் நேற்று இணைந்தது. இதன் மூலம் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் வைத்திருக்கும் பலம் பொருந்திய நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கப்பல் தளப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி முறைப்படி 'நெர்பா' கப்பலை கடற்படைக்கு அர்ப்பணித்தார். இக்கப்பல் அகுலா - 2 ரகத்தைச் சேர்ந்ததாகும். இந்திய கடற்படையில் நெர்பாவுக்கு ஐ.என்.எஸ்.சக்ரா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கு முன் 1988ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த சார்லி ரக அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா குத்தகைக்கு எடுத்திருந்தது. தற்போது நெர்பாவையும் 10 ஆண்டுக் குத்தகைக்குத் தான் இந்தியா எடுத்துள்ளது. இந்தக் குத்தகைக்காக ரூ. 4,500 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 2004ஆம் ஆண்டு கைச்சாத்தானது. இதன் மூலம் இந்தியக் கடற்படையினருக்கு இத்தகைய கப்பலை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. (வ)

# கடத்தப்பட்ட எம்.எல்.ஏயை விடுவிக்க நிபந்தனை

புவனேஸ்கர், ஏப்.5

ஒரிசாவில் கடத்தப்பட்ட ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரை விடுவிக்க வேண்டும் என்றால் இன்னும் 48 மணி நேரத்துக்குள் தாம் விதித்த நிபந்தனைகளை ஒரிசா அரசு ஏற்க வேண்டும் என நக்ஸலைட் தீவிரவாத அமைப்பு நேற்று காலக்கெடு விதித்துள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:

கடந்த 24ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட எம்.எல். ஏயான ஜினா ஹிகாவை விடுவிக்க எமது கோரிக்கைக்கு ஒரிசா அரசு தலைசாய்க்க வேண்டும் இதனை மறுத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 7 நக்ஸலைட்களின் விடுதலையில் காலதாமதம் ஏற்படுமாக இருந்தால் பெரும் பின் விளைவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளை (இன்று) வியாழக்கிழமைக்குள் - அதாவது 48 மணி நேரத்துக்குள் எமது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (15)

# பாகிஸ்தானில் இந்திய மீனவர்கள் கைது

கராச்சி, ஏப்.5

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன்பிடித்ததாக இந்திய மீனவர்கள் 23 பேரை பாகிஸ்தான் கடற்படை கைது செய்துள்ளது. மேலும் அவர்களின் 4 படகுகளும் பறிமுதல் செய்யப்பட் டுள்ளன.

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் வர வேண்டாம் என்று இருமுறை மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதையும் மீறி சட்டவிரோதமாக அவர்கள் வந்ததால் கைது செய்யப்பட்டனர் என்று பாகிஸ்தான் கடலோரப் பாதுகாப்பு அமைப்பின் செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். (வ)

# காந்திக்கு தேசத்தந்தை மதிப்பு வழங்கியதற்கு ஆதாரம் இல்லை

லக்னோ,ஏப்.5

மகாத்மா காந்திக்கு தேசத்தந்தை அந்தஸ்து எப்போது வழங்கப்பட்டது என்பதை அறிய, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுத் தாக்கல் செய்த மாணவிக்கு, இதுகுறித்த தகவல் இல்லை என்ற பதிலே தகவல் ஆணையத்திடம் இருந்து கிடைத்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவைச் சேர்ந்த ஐஸ்வர்யா பரஷ்ஹார் (வயது10) அங்குள்ள பள்ளியில் 6ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் கடந்த பெப்ரவரி மாதம், மத்திய தகவல் அறியும் ஆணையாளருக்கு அனுப்பிய மனுவில், இந்தியாவின் தேசத்தந்தை என்று மகாத்மா காந்திக்கு அந்தஸ்து வழங்கப் பட்டது எப்போது, புகைப்படம் மற்றும் வேறு ஏதாவது ஆதாரங்கள் உள்ளனவா? என விவரம் தருமாறு பிரதமர் அலுவலகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையே சிறுமி அனுப்பியிருந்த மனு குறித்து உள்துறை அமைச்சகத்திடம் கேட்குமாறு, பிரதமர் அலுவலகம் மாணவியின் மனுவை திருப்பி அனுப்பியது.

பின்னர் உள்துறை அமைச்சகத்திடம் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை ஆதலால் இவரது மனு இந்திய தேசிய ஆவண காப்பகத்துக்கு (என்.ஏ.ஐ) அனுப்பி வைக்கப்பட்டது.

தேசிய ஆவணக் காப்பகத்திலும் மகாத்மாவுக்குத் தேசத் தந்தை அந்தஸ்து வழங்கப்பட்ட தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (வ)

# திருடனுடன் சேர்ந்து மோ.சைக்கிளை அபகரித்த மராட்டிய பொலிஸ்

### அம்பலப்படுத்தியது 'கமரா'

திருடன்களுடன் சேர்ந்து மோட்டார் சைக்கிளை திருடிய பொலிஸார், கண்காணிப்பு கமராவில் வசமாக சிக்கிய சம் பவம் மராத்திய மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் கோத்ருட் தகானுகர் குடியிருப்பு வளாகத்தில் தன்மய் புரி சொசைட்டி என்ற கட்டடம் உள்ளது. இங்கு வசிப்பவர்கள் தங்கள் வாகனங்களை கட்டட வளாகத்தில் உள்ள வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்துவது வழக்கம்.

இந்தநிலையில் இங்கு வசிக்கும் அவினாஷ் என்பவர் கடந்த திங்கட் கிழமை இரவு வழக்கம் போல தனது மோட்டார் சைக் கிளை, வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் நிறுத்தினார். காலையில் பார்த்த போது மோட்டார் சைக் கிளைக் காணவில்லை.



இங்கு முதல் முறையாக மோட்டார் சைக்கிள் திருட்டுப்போனது கட்டட வாசிகளுக்கு கவலை அளித் தது.

இதனால், கட்டட வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவான காட்சிகளை பார்க்க முடிவு செய்தனர். அந்த காட்சிகளில் கடந்த திங்கட் கிழமை அதிகாலை 4.58 மணியளவில் 3 பொலிஸ்காரர்கள், 2 திரு டர்களுடன் வந்து அவினாஷின் மோட்டார் சைக்கிளை திருடி செல்லும் காட்சி பதிவாகி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய கல்வி சமூகத்தைப் பாதிப்பது..

பாடசாலை அதிபர்கள் கல்வி நிர்வாகத்தினரிடையேயான உட்பூசல்களும் பழிவாங்கல்களும் இன்றைய கல்விச் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. கல்வி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் சுயநலத்துடனும் கல்வி உத்தியோத்தர்கள் ஒவ்வொருவருடனும் ஆள் வேறுபாட்டுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் கல்வி உத்தியோகத்தர்களின் மனம் பாதிக்கப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

தகுதி கூடியவரை தகுதி குறைந்தவர் பழிவாங்குவது அதுமட்டுமன்றி மனச்சாட்சியுடன் வேலை செய்பவர்களைவிட தமக்குப் பணிவிடை செய்பவர்களுக்குக் கூடுதலான சலுகைளை வழங்குவது என்று முன்மாதிரியற்ற செயல்களும் இடம்பெறுகின்றன.

இதனால் ஆசிரியர்களின் மனம் பாதிக்கப்பட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகிறது. மேலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மேலதிக வேலையை ஆசிரியர்களினால் செய்ய முடியாது போனால் அதை வைத்துக் கொண்டு அந்த ஆசிரியர் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்படும் பொழுது அவரது மனம் பாதிக்கப்படுவதனால் அவர் சரியான முறையில் கற்பித்தலை மேற்

## விமர்சனப் பகுதி

கொள்ள முடியாதுள்ளது. இதனால் கல்விச் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது.


கல்வி நிர்வாகத்தினரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது அதிகாரங்களை கல்வி உத்தியோகத்தர் மீது பிரயோகிக்கின்றனர். இதனாலும் கல்விச் செயற்பாடானது பாதிக்கப்படுகின்றது.

இலங்கையின் கல்வி நிர்வாக முறையானது ஆசிரியர்களுக்கு வழிகாட்டாமல் ஆசிரியர்களை வழுக்கிவிழச் செய்கின்றது. சிலர் அனைத்து ஆசிரியர்களையும் சமமாக நோக்காது பாரபட்சம் காட்டித் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதனாலும் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. ஒரே பாடசாலையில் எட்டு வருடங்கள் சேவையாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் உள்ளக இடமாற்றம் மேற்கொள்வதாக கூறிவிட்டு ஒரு சில அப்பாவி ஆசிரியர்களை மாற்றிவிட்டு, அனைத்து ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் கொடுத்துவிட்டதாகக் கூறுவதும் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

இதனால் கல்விச் செயற்பாடானது தொடர்ச்சியாகப் பாதிக்கப்படும். அத்துடன் இன்றைய கல்விச் சமூகத்தையும் இது பாதிக்கும் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

சு. ஆர்த்திகா

# அவலத்தைச் சுமக்கிறான்



எம் சொந்த மண்ணில் நாம்
மார்பு தட்டி நின்றபோது
அவலங்கள் நிறைந்த எம்மவர் வாழ்வு
தமிழன் கதை இன்னும் தொடர்கதை
தொட்டிலில் ஆடிய போது தொடர்ந்த கதை
இன்னும் தொடர்கதைதான்
தமிழன்தான் தலையில் சுமந்த பாறங்கற்களை
இன்னும் இறக்கவில்லை
ஒவ்வொரு இனத்துக்கும்
ஒவ்வொரு இலட்சியம் உண்டு
தமிழன் இலட்சியம் குழி தோண்டி புதைக்கப்பட்டதா
தமிழன் சிறுபான்மை என்பதால்
அவன் அன்றிலிருந்து இன்றுவரை
அடக்கப்பட்டு அவலங்களை சுமப்பதா
தமிழன் அவலங்களைப் புரிந்தவர்கள் யார்
தமிழன் வாழ்வில் வசந்த காலம் எப்போது
தமிழன் சிந்திய குருதிகள் இன்னும்
மதிக்கப்படவில்லையா?
தமிழன் எங்கு சென்றாலும் அவன்
சமாதானத்தின் கதவுகள் முடக்கி மூடப்பட்டது
இலட்சிய கனவுடன் வாழும் தமிழன்
இவ்வுலகில் அழியாத நினைவாக
அவலத்தைச் சுமக்கின்றான்

கிராந்தி ஏ. ஆவர்த்தனா



# கல்வியின் சிறப்புப் பற்றி வள்ளுவர் கருத்து



கல்வியின் சிறப்புப் பற்றி பலர் கருத்துவெளியிட்டுள்ளனர். அவர்களுள் பட்டினத்துப் பிள்ளை, ஒளவையார், கம்பர், திருமூலர் போன்றோரை சிறப்பாகக் குறிப்பிடலாம். அவர்களுள் சிறப்பாக கல்வியின் சிறப்பைக் கூறியவர்களில் வள்ளுவரே முதன்மையானவராகக் காணப்படுகிறார்.

*"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றுப்பிற"*

இக்குறளின் மூலம் திருவள்ளுவர் கூறவருவது என்னவென்றால் அதாவது ஒருவருக்கு அழிவு இல்லாத நிலையான செல்வம் கல்வியே ஆகும் என்றும் அது தவிர்ந்த ஏனைய செல்வங்கள் எல்லாம் உண்மையான செல்வம் என்று கருதப் படுவதில்லை என்றும் கூறுகிறார். இதன்மூலம் நாம் கல்வியே அழியாச் செல்வம் என்று அறிந்து கொள்கிறோம்.

*"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனையவர்"*

இக்குறளின் மூலம் வள்ளுவர் கூறவருவது எமக்கு அறிவைத் தருகின்ற நூல்களைக் கற்றவர்களுக்கும் அதைக் கற்காதவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்பது மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் போன்றதாகும். இதில் வள்ளுவர் மக்களாக அறிவை தருகின்ற நூலை கற்றவர்களை குறிப்பிடுகின்றார். விலங்காக அறிவைத்தருகின்ற நூலை கற்காதவரைக் குறிப்பிடுகின்றார்.

*"கல்லாதவன் நுட்பம் கழிய நன்றாயினும்*
*கொள்ளார் அறிவுடையார்"*

இக்குறட்பா மூலம் வள்ளுவர் கூறவருவது கல்வி கற்காதவனுடைய அறிவானது சிறந்ததாக காணப்பட்டாலும் கல்வி கற்றவர்கள் அதனை அறிவுடைமையாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதாவது கல்வி கற்காத ஒருவனிடம் கல்வி கற்ற ஒருவர் யாழ்ப்பாணம் செல்வதற்கான பாதையை கேட்டு, கல்வி கற்காதவன் அதற்கான பாதையை கூறினால் கல்வி கற்றவன் அதனை ஏற்றுக்கொள்ளாது வேறு பாதையிலே யாழ்ப்பாணம் செல்வான்.

*"கண்ணுடையார் என்போர் கற்றோர்*
*முகத்திரண்டு*
*புண்ணுடையார் கல்லாதவர்"*

இக்குறள் மூலம் திருவள்ளுவர் கூறவருவது உண்மையிலே கண்ணுடையவர் என்று கருதப் படுபவர் கல்வி அறிவு உடையவர்களே, கல்வி அறிவு அற்றவர்கள் முகத்திலே கண்களுக்குப் பதிலாக இரண்டு புண்ணுடையவர்கள் என்று கருதப்படுவார்கள். இவ்வாறு திருவள்ளுவர் குறள்கள் மூலம் கல்வியின் சிறப்பைக் கூறியுள்ளார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 4 குறட்பாக்கள் மூலம் கூறப்பட்ட சிறப்புகளின் ஒரு பகுதியாகும். மீதி ஆறு குறட்பாக்கள் மூலமும் கல்வியின் சிறப்பைப் பற்றி சிறப்பாக கூறியுள்ளார். எனவே நாமும் கல்வியின் சிறப்பை உணர்ந்து கல்வி கற்று எமது வாழ்வை மேம்படுத்துவோமாக.

வி. கீர்த்தனா, 10,
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

## இளவல்கள் வட்டம்

### விமர்சனம்

அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன? உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்



## சுய மதிப்பீடல்

(4)

கடுமையான வெயிலில் களைத்துப்போன அந்த வழிப்போக்கன் ஒரு மாமரத்து நிழலில் ஒதுங்கினான். மாம்பழங்களை உண்டு பசியாறிய அவன் அந்த மரத்தில் ஓர் அதிசயத்தைக் கண்டான்.

மாமரத்தில் ஒரு அப்பிள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தது. இது ஏதாவது மந்திரத்தால் விளைந்து இருக்குமோ என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அந்த அப்பிள் பேசியது:

பயப்படாதே வழிப்போக்கனே நானும் ஆரம்பத்தில் மாம்பழமாகத்தான் இருந்தேன். நான் கனிந்து தயாரான போது இந்த வழியாக ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் என்னைப் பார்த்து, ''இது புளிக்குமோ?!'' எனச் சந்தேகப்பட்டான். அதனால் நான் வாழைப்பழமாக மாறினேன். அதற்குள் அவன் போய்விட்டான்.

சற்றுநேரத்தில் இன்னொருவன் வந்தான். அவன் கொய்யாப்பழம் சாப்பிட ஆசைப்பட்டான். நான் கொய்யாப்பழமாக மாறினேன். நான் கனிவதற்குள் அவனும் போய்விட்டான்.

அதன்பிறகு இன்னொருவன் வந்தான். அவன் என்னைப் பார்த்ததும், ''கொய்யாப்பழம் நல்லதுதான். ஆனால் சிலநேரம் கசக்குமே?'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அவனுக்கு ஆரஞ்சுப் பழம் என்றால் பிடிக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன். நான் ஆரஞ்சாக மாறுமுன் அவன் போய்விட்டான்.

அதன் பிறகு இன்னொரு சோம்பேறி வந்தான். அவன் ''ஆரஞ்சுப் பழமென்றால் உரித்துத்தான் சாப்பிட வேண்டும். திராட்சையாக இருந்தால் நல்லது!'' என்று முணு முணுத்தான். நான் திராட்சையாக மாறினேன்.

பருவங்கள் மாறி குளிர்காலம் வந்துவிட்டது. அப்போது வந்த ஒருவன் ''திராட்சை குளிர்காலத்துக்கு ஏற்றதல்ல; அப்பிளாக இருந்தால் நல்லது!'' என்று முணுமுணுத்தான். நான் அப்பிளாக மாறுமுன் அவன் போய்விட்டான்.

இப்படி அடுத்தவர்களின் கருத்துக்களுக்காக அடிக்கடி மாறியதால் என் அடையாளமே எனக்கு மறந்துவிட்டது. என் இயல்பான மாம்பழமாகவே இருந்து, ஒரு மாம்பழ விரும்பிக்காகக் காத்துக் கிடந்திருக்கலாமே! என்று நினைத்து இப்போது வருந்துகிறேன் என்று சொன்னது அந்த அப்பிள்.

பிறரது அபிப்பிராயத்துக்காக தன்னை மாற்றிக் கொண்டே இருப்பவர்கள் தன் உண்மையான இயல்பையும் மதிப்பையும் மட்டுமல்ல; தனது தன்னம்பிக்கையையும் இழந்து விடுகிறார்கள்.

உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்! அதற்கான பொறுப்பும் உங்கள் கையில் இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

படிக்கின்ற பருவத்தில் நீங்கள் என்ன படிக்க வேண்டும்; எந்தப் படிப்புப் படித்தால் அதில் உங்களால் சிறக்க முடியும் என்று தீர்மானியுங்கள்.

இந்தப் பருவத்தில் நீங்கள் தேர்ந்தெடுக்கப்போகும் படிப்புப் பற்றி உங்கள் பெற்றோருக்கு வலியுறுத்திச் சொல்ல வேண்டிய நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள்" என்பதை மறந்துவிடக்கூடாது.

நீங்கள் மீண்டும் மீண்டும் ஒன்றைச் சொல்கிறபோது, அது உறுதிப்பட்டுவிடும். இவ்வாறு வலியுறுத்துவதை ஒரு வகை சுய ஆலோசனை (Self - suggestion) என்று மனோவியலாளர்கள் கூறுகிறார்கள்.

நீங்கள் திரும்பத் திரும்ப ஒன்றைக் கேட்கிறபோது அந்தப் பேச்சை நம்பத் தொடங்கிவிடுவீர்கள். அதே போன்று நீங்கள் ஒன்றை வலியுறுத்திச் சொல்கிறபோது மற்றவர்களுக்கும் அதில் நம்பிக்கை ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு தொடர்ந்து வலியுறுத்தலை (affirmation) மேற்கொள்வதன் மூலம் உங்களை நீங்களே நம்பச் செய்து கொள்ள முடியும்.

★ நீங்கள் உங்கள் விருப்பங்களில் கருத்துக்களில் தீர்மானமாய் இருக்கும்போது, உங்கள் விருப்பங்களும் கருத்துக்களும் முக்கியத்துவத்தைப் பெற்று விடுகின்றன.

★ தீர்மானமான முடிவுகள் பலவீனமானவற்றை பலமுள்ளதாக மாற்றுகின்றன.

★ உங்கள் மன உறுதி உங்கள் மனோபாவங்களை மாற்றுகிறது.

★ உங்கள் தீர்மானிக்கும் திறன் உங்களுக்குத் தேவையானவற்றில் உங்கள் கவனத்தைக் குவிக்கச் செய்கிறது.

நீங்கள் தீர்மானமாகச் சிந்திக்கும் முறை, உங்கள் மனதை ஆற்றல் மிகுந்ததாக மாற்றுவதுடன் ஆழ்மனதையும் (Sub - consious) தூண்டிவிடுகிறது. தன்னம்பிக்கையை உருவாக்கும் ஆயுதக் கிடங்கில் அவையும் ஆற்றல் மிக்க ஆயுதமாகும். நம்மைப் பற்றிய நமது எண்ணங்கள் மாறும் போது, நம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே நமது தன்னம்பிக்கை அதிகரிக்கும் விதமாக மாறிவிடுகிறது.

**பொறுப்பு - உரிமை**

சிறுவயதில் நம்மைப் பற்றி நமது பெற்றோர்களோ ஆசிரியர்களோ நேர்மறையான அல்லது எதிர்மறையான கருத்துக்களைக் கூறியிருப்பார்கள். அதை நாம் நம்பியும் வந்திருக்கலாம்.

ஆனால், இறுதிவரை அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேயே நாம் வாழ்ந்துவிட்டால் நம்மைப் பற்றிய உண்மையை நாம் அறிந்து கொள்ளாமலேயே போய்விடுவோம்.

''அவர்கள் என்னை நடத்துகிற முறை சரியல்ல. நான் தன்னம்பிக்கையின்றி இருப்பதற்கு அவர்கள் தாம் காரணம்'' என்று வெகு நாள்கள் கூறிக் கொண்டிருக்க முடியாது.

-ஷிவேந்த்ரா (தொடரும்)

# ஆழமான கருத்துக்களோடு நூல்கள் வெளிவர வேண்டும்

### பல்கலை சட்டத்துறைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

இன்றைய கால கலை, இலக்கிய சூழலில் தினமும் ஒரு நூல் வெளிவந்த வண்ணமே உள்ளது. அவற்றில் அதிகளவானவை இளையவர்களின் நூல்களாகத்தான் இருக்கின்றன. ஆனால் ஆழமான கருத்துக்களையும் சிந்தனைகளையும் கொண்டு விளங்கும் நூல்களை விரல்விட்டு எண்ணக்கூடியதாகவே இருக்கிறது என யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் த.கலாமணி தெரிவித்தார்.

வை.ஐ.வரதராஜனின் ''என் கடன்''என்னும் கவிதை நூல் வெளியீடும், மூதறிஞர் கவிஞர் வே.ஐயாத்துரை ஞாபகார்த்தமாக சிறந்த கவிதைகளுக்கான விருது வழங்கல் நிகழ்வும் நாவலர் கலாசார மண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கலாமணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இளைஞர்களுக்கு தமது ஆக்கங்களை நூல் வடிவிலே அச்சிட்டு வெளியிட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டு.

**இன்றைய கால இலக்கிய சூழலில் தினமும் ஒரு நூல் வெளிவந்த வண்ணமே உள்ளது. அவற்றில் அதிகளவானவை இளையவர்களின் நூல்களாகத்தான் இருக்கின்றன. ஆனாலும் நல்ல கருத்துக்களைத் தரும் நூல்கள் குறைவாகவே வெளிவருகின்றன.**

இவற்றிலே தவறு ஏதும் இல்லை. ஆனால் ஆக்கங்களைத் தர முனைகின்றபோது சில தவறுகளை விட்டுவிடுகின்றனர். விரைவாக வெளியிட்டுப் பார்க்க வேண்டும் என்ற அவாவில் ஏதோவெல்லாம் எழுதிவிடுகின்றனர்.

சிறுகதை, நாவல், கவிதை என்றால் என்ன என்று எதிர்கால சந்ததியினருக்கு வரையறுத்துக் கூற வேண்டிய கடமையுள்ளது.

இன்று அச்சுப் பதிப்பு என்பது ஒரு நொடியில் நூல்களை ஆக்கக் கூடிய விடயமாகவுள்ளது. முன்பு எல்லாம் வடிவமைப்பு, பிரசுரம் ஆகியவற்றுக்கு நீண்ட நாள்கள் எடுக்கும்.

இன்று பிரசுரம்,வடிவமைப்பு ஆகியவற்றுக்கு சிக்கல் ஏதும் இல்லை. நல்ல நூல்கள், கருத்துக்கள் ஆகியவற்றைத் தர முற்படும்போது அந்த எழுத்தாளன் சமூகத்தில் போற்றப்படுவான்.

எளிமையான சொற்பதங்கள், யதார்த்த சமூக கட்டமைப்புக்கள் ஆகிய மதிப்பீட்டின் அடிப்படையில் நூல்கள் வெளிப்படும் போது தான் அது வாசகர்களைச் சென்றடையும் என்றார்.

(எ-13-7)




வலி.தெற்கு உடுவில் பிரதேச சபையினால் சர்வதேச மகளிர் தினம் வலி.தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் நூலக பொது மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் திருமதி ஈ.வனஜா தலைமையில் இடம்பெற்ற இசைக்கச்சேரி.

(எ-86)

## பிரதிப் பணிப்பாளராக சுந்தரசிவம் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.5

தென்மராட்சி கல்வி வலயத்தின் மாணவர் அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக எஸ்.சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றிய இவர், பின்னர் வடமாகாண கல்வி அமைச்சில் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தார்.

(த-3)

## விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் நடத்தப்பட்ட பாட சாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. வெற்றிபெற்ற மாணவர்களின் விவரங்கள்:

**விஞ்ஞான வினாவிடைப் போட்டி**

முதலாமிடம்- சுமிதா சிவசுப்பிரமணியம்- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, சுசீந்திரன் பிரிந்தா - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, மிதுரிகா மிகுந்தன் - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. இரண்டாமிடம்- நிலுக்சி புவனேந்திரன் - யா/ மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலை. மூன்றாமிடம் தாரணி ஞானசேகரம் - யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

**விஞ்ஞான கட்டுரைப் போட்டி**

முதலாமிடம் - சம்பிரதா மகேந்திரன் - [illegible] ளிர் மகாவித்தியாலயம். இரண்டாமிடம் - வேதசொரூபி சிறிதரன் - யா/ இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - சோபிதா சிவேஸ்வரன் - யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**விஞ்ஞான பேச்சுப்போட்டி**

முதலாமிடம் - திருமகள் சிலுவைதாசன் - யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - சுதாயினி சச்சிதானந்தம் யா/ இந்து மகளிர் கல்லூரி. மூன்றாமிடம் - சிவசங்கரி சிவனேஸ்வரராசா- யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**வரைதல் போட்டி**

முதலாமிடம் - செல்வகுமார் திலக்சன் - யா/ மத்தி கல்லூரி, இரண்டாமிடம் றஞ்சன் கிரிஜன் - யா/ இணுவில் மத்திய கல்லூரி, கங்காதரன் இந்துசன் - யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். மூன்றாமிடம் குணராசா கபில் ராஜ் - யா/ விக்ரோரியாக் கல்லூரி, அம்பிகாவதி தனேந்திரன் - யா/மத்திய கல்லூரி.

**ஓவியப் போட்டி**

முதலாமிடம் - யா/ இந்து மகளிர் கல்லூரி - துரைசிங்கம் தேனுகா, சூரியகுமார் சர்மிளா, இரண்டாமிடம் - யா/ இந்து மகளிர் கல்லூரி - டே.வலன்சியா, மூன்றாமிடம் - யா/ இந்து மகளிர் கல்லூரி ஏ.சங்கீதா. (தொடரும்) (எ-13)

## போதை தடுப்பு: தேசிய மட்டத்தில் பரிசில் பெற்றார்



அச்சுவேலி, ஏப்.5

போதைப் பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் குலபாலசிங்கம் நேருசன் தேசிய மட்டத்தில் பரிசில் பெற்றுள்ளார்.

தேசிய மட்டத்தில் பரிசில் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா கொழும்பு கல்வி அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பரிசுக்கான காசோலையையும், சான்றிதழையும் வழங்கிக் கௌரவித்தார். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ரிக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பிளவைத் தடுக்க அல்ல ஒன்றிணைக்கவே தீர்வு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான சலசலப்புக்கள் அடங்க மறுக்கின்றன. அதன் அதிர்வுகள் கடந்த சில நாள்களாக நாடாளுமன்றத்தையும் ஆட்டிப் படைக்கின்றன.

ஐ.நா. தீர்மானத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரான லக்ஷ்மன் கிரியெல்ல, நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு உடனடியாக முன்வைக்காவிட்டால் நாடு பிளவுபட்டுவிடும் என்று தெரிவித்தார்.

ஐ.நா. விடயத்தில் முரண்டு பிடித்தால் சூடான் நாட்டில் இருந்து தென் சூடானைப் பிரித்தது போன்று அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இலங்கையையும் கூறுபோட்டுவிடும் என்பது அவரது எதிர்வு கூறல்.

மேலோட்டமாகப் பார்த்தால் லக்ஷ்மன் கிரியெல்லவின் கருத்துச் சரியானதாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் இலங்கைக்கு அரசியல் தீர்வு ஒன்று அவசியம் என்பதற்குக் காரணம் நாட்டின் பிளவைத் தடுப்பதற்கல்ல; பிளந்து கிடக்கும் நாட்டை ஒன்றுபடுத்துவதற்கே.

இலங்கை என்ற நாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு முன்னரும் பிளவுபட்டு, பிரிக்கப்பட்டே கிடந்தது. அதனை நிர்வாக ரீதியாக பிரிட்டிஷார் ஒன்றிணைத்தார்கள். அவர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னரும் இந்த நாடு நிர்வாக ரீதியாக மட்டுமே ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. இன ரீதியாக அது பிளவுபட்டே கிடந்தது.

இனங்களிடையேயான பிளவுகளை மறைத்து காயங்களை ஆற்றி இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்தும் புனிதப் பணியை எந்த ஒரு அரசியல் தலைமையும் கடந்த 60 வருடங்களில் செய்யவில்லை.

இந்தப் பிளவை நிரந்தரமாக்கி தனிநாட்டைப் பெற்றுவிட கடந்த 30 வருடங்களாகத் தமிழர்கள் ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். அந்தப் போராட்டத்தை முறியடித்து வெற்றி கொண்டு விட்டதால் மட்டும் இந்த நாடு ஒன்றுபட்டுவிடாது. அது இன்னமும் இனங்களுக்கிடையில் பிளவுபட்டே கிடக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சொல்வது போன்று, ஒற்றுமைப்பட்டுள்ள இலங்கை நாட்டை ஐ.நா. தீர்மானம்தான் பிளவுபடுத்துகிறது என்பதில்லை. ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட பிளவைச் சரிசெய்து இலங்கையை ஒன்றிணைந்த நாடாகவும் அமைதியான நாடாகவும் மாற்றவே ஐ.நாவும் அமெரிக்காவும், இந்தியாவும் முயற்சிக்கின்றன. இந்த நாடுகளின் வர்த்தக, பிராந்திய நலன் கருதி அது அவற்றுக்குத் தேவையாக இருக்கின்றது.

இந்த நாடு அமைதியற்று இருக்கின்ற வரைக்கும்தான், குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல சீனாவும் பாகிஸ்தானும் தங்கள் நலன்களை இங்கு நிறைவேற்றிக் கொள்கின்றன என்று இந்த நாடுகள் நினைக்கின்றன. எனவே இலங்கை ஒன்றுபட்ட நாடாக இருப்பதுதான் இந்த நாடுகளின் தற்போதைய தேவை.

எனவே இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்று முன்வைக்கப்படுவது என்பது பிளந்து கிடக்கும் நாட்டை ஒற்றுமைப்படுத்துவதற்கானதே தவிர, இனிமேல் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கானது அல்ல. ஆனால், தீர்வை அரசு முன்வைக்காது விட்டால் ஏற்கனவே இருக்கும் பிளவு நிரந்தரமாக்கப்பட்டு அது உலக நாடுகளால் அங்கீகரிக்கப்படும் நிலைமை வருவதைத் தடுக்க முடியாது போகும்.

# இந்தியத் துரோகம் மீண்டும் மீண்டும்

■ *ராஜராஜன்*

**1987ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ராஜீவ் காந்தியும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். செல்லாக் காசுக்குச் சமனான அந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம், பின்னாளில் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் செயலிழந்தது.**

இலங்கைத் தமிழர்களின் இன்றைய அவல வாழ்வுக்குரிய முழுப்பொறுப்பையும் இந்தியா ஏற்க வேண்டும். ராஜீவ் காந்தி காலத்திலிருந்து ஜெனிவா வரை இந்தியா எமக்குத் துரோகம் மட்டுமே செய்கிறது.

ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமை தொடர்பாக எவரும் பெருமிதம் கொள்ள முடியாது. ஏற்கனவே பலவீனமான நிலையிலிருந்த பிரேரணையின் வாசகங்களை மேலும் பலவீனமானதாக்கி இலங்கை அரசைக் காப்பாற்றுவதில் இந்தியா வெற்றி கண்டிருக்கின்றது.

இதனை இலங்கை அரசும் புரிந்து கொண்டிருக்கின்றது. ஆனால் உள்நாட்டில் உள்ள இனவாதிகளைக் குளிர்விப்பதற்காகவும், சீனாவின் பக்கம் தான் மேலும் சாய்வதை நியாயப்படுத்துவதற்காகவும் இந்தியா மீது கோபம் கொண்டிருப்பதாக இலங்கை அரசு நாடகம் ஆடுகின்றது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான இந்திரா காந்தி அம்மையார் இலங்கை அரசைத் தனது காலடியில் விழ வைப்பதற்காக 1980களில் தமிழ்ப் போராளிகளுக்கு ஊக்கமும், உதவிகளும் வழங்கினார். அவர் இலங்கைத் தமிழ் மக்கள் மீது உண்மையான பாசம் வைத்திருப்பாரேயானால் 1983இல் இடம்பெற்ற இனக் கலவரத்தின் போது தீர்க்கமான முடிவை எடுத்திருப்பார்.

1971ஆம் ஆண்டு அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானில் வாழ்ந்த வங்காள மொழி பேசும் முஸ்லிம் மக்கள் மேற்குப் பாகிஸ்தானின் ஆளும் வர்க்கத்தினால் ஏவி விடப்பட்ட இராணுவத்தால் சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இந்திய இராணுவத்தினர் அதில் தலையிட்டு புதிய வங்காள தேசம் உருவாக்கியதெல்லாம் வரலாறுகள். அப்போது இந்திராகாந்தி அம்மையாரே இந்தியப் பிரதமராக இருந்தார்.

ஆனால், 1983இல் அத்தகையதொரு நடவடிக்கையை இலங்கையில் மேற்கொள்வதற்கு அவர் துணியவில்லை. அடுத்த ஆண்டே இந்திரா தமது சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். சீக்கியர்களின் புனித பொற்கோவிலுக்குள் இந்திய இராணுவம் நுழைந்ததற்கு இந்திராவின் உயிர் விலையாயிற்று.

அவரது மறைவுக்குப் பின்னர் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. தாயின் வழியில் பிரதமர் பதவியை ஏற்ற ராஜீவ் காந்தியின் திடீர்க் கோபமும், அவசரபுத்தியும், அனுபவமின்மையும், தீர்க்கதரிசனமற்ற போக்கும் இலங்கைத் தமிழர்களைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டது.

ராஜீவ் இலங்கைத் தமிழர்களிடத்தில் ஒரு போதுமே அக்கறை செலுத்தியவர் அல்லர். மாறாகத் தமிழ்ப் போராளிகளைப் பலவீனமாக்கி அவர்களை இல்லாதொழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்.

1987ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ராஜீவ் காந்தியும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். செல்லாக் காசுக்குச் சமனான அந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம், பின்னாளில் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் செயலிழந்தது.

இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. தமிழர் தாயகமும் துண்டாடப்பட்டது. ஒரு முக்கியமான ஒப்பந்தத்தின் சட்டவலுவை ஆராய்வதற்குக்கூட இந்தியாவுக்கு அக்கறை இருக்கவில்லை.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு வன்னியில் உருவானதைப் போன்றதொரு நிலையை உருவாக்குவதற்கு 1987இல் இங்கு நுழைந்த இந்தியப் படைகளும் முயன்றன என்பதை மறந்துவிடலாகாது. அப்போது அவர்களால் அது முடியவில்லை.

அமைதிப்படை என்ற பெயரில் இங்கு வந்த இந்திய இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் ஏராளம். இந்தியாவையும், இலங்கைத் தமிழர்களையும் பகைவர்களாக்கிக் குளிர்காய்ந்த ஜே.ஆரின் நரித்தனமான சூழ்ச்சிக்குள் அனுபவமில்லாத ராஜீவ் இரையானது ஒரு துன்பியல் நிகழ்வாகப் பின்வந்த காலங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு அமைந்துவிட்டது.

1991இல் ராஜீவின் மரணத்துக்குப் பின்னர் இந்தியா இலங்கைத் தமிழர்களை முற்றாகவே கைகழுவிவிட்டது. ராஜீவின் கொலைக்குப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமே இந்தியாவிடம் தலைதூக்கி நின்றது.

இதற்கொரு சரியான சந்தர்ப்பமும் வாய்த்தது. 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரை இந்தியா தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. இந்திய மத்திய அரசில் பங்காளியாக இருந்த அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு மறைமுக ஆதரவு வழங்கினார். ஆனால் பகிரங்கமாக நாடகம் ஆடினார்.

இறுதிப்போரின் இறுதி நாள்கள் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் கொடுமையானவை. சீனா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகளின் உதவியுடன் போர் விதிமுறைகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு வெறித்தனம் ஆடியது. இந்தியாவின் ஆசீர்வாதம் அப்போது இலங்கைக்கு முழு அளவில் கிடைத்தது. புலிகளும் அகற்றப்பட்டனர்.

அந்த இறுதி நாள்களில் நிகழ்ந்த அச்சமூட்டும் சம்பவங்கள் மெல்ல மெல்லக் கசிந்தபோது இந்தியா விழித்துக் கொண்டது. இலங்கையின் போர்க் குற்றங்களில் தன்னையும் பங்காளியாக்கி விடுவார்களோ என்ற அச்ச உணர்வு அதனுள் ஏற்பட்டது. அதன் காரணமாகவே பல வழிகளிலும் இலங்கையைக் காப்பதற்கு அது முயன்றது.

இதன் உச்சக் கட்டமாக ஜெனிவாவில் இடம்பெற்ற 19ஆவது மனித உரிமைகள் சபையின் அமர்வுகளின்போது அமெரிக்காவினால் பிரேரிக்கப்பட்ட தீர்மானத்திலுள்ள முக்கிய சில சரத்துக்களை நீக்குவதற்கு முயன்றது. அதில் வெற்றியும் கண்டது.

சிலர் கூறுவது போன்று நீர் மோர் போன்றிருந்த ஜெனிவாத் தீர்மானத்தை வெறும் நீராகவே இந்தியா மாற்றியது. இதனால் இலங்கையும் காப்பாற்றப்பட்டுவிட்டது. இந்தியாவும் தப்பிப் பிழைத்துக் கொண்டது.



பாகிஸ்தானை கிழக்கு மேற்காகப் பிரித்து வங்க தேசத்தை உருவாக்கிய இந்திரா காந்தி, இலங்கையில் அதைச் செய்ய முன்வரவில்லை.

உண்மையில் சொல்லப்போனால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா ஜெனிவாவில் பெரும் துரோகத்தைத்தான் இழைத்தது.

அமெரிக்கத் தீர்மானத்தில் மாற்றமெதுவும் மேற்கொள்ளாமல், இந்தியா அதனை ஆதரித்திருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு ஒரு நீதி கிடைக்கும் வாய்ப்பாவது தோன்றியிருக்கும். ஆனால் இந்தியா அதனையும் தட்டிப் பறித்துவிட்டது.

சுருக்கமாகக் கூறினால் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்தியாவின் துரோகச் செயல்களே அவர்களைப் பெரிதும் பாதித்துள்ளன. இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

எல்லாவற்றையும் இழந்து ஏதிலிகளாக வாழும் நிலைக்கு ஈழத் தமிழர்கள் தள்ளப்பட்டமைக்கு இந்தியாவே முழுப் பொறுப்பையும் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டம்

விபெஸ்ரீ

சாதாரணமாக ஒரு நாட்டில் பொது மக்களே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவர். அரசிடமிருந்து எதையாவது பெறுவதற்காக அல்லது அரசின் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக மக்கள் போராட்டங்களில் குதிப்பர்.

ஆர்ப்பாட்டங்கள் குறித்து இலங்கை வரலாற்றில் நீண்ட நெடுங்காலத்துக்கு முந்தைய பதிவுகளுண்டு. 1893ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது முதல் பொதுமக்கள் தமது தேவைகளுக்காகப் பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

பல ஆர்ப்பாட்டங்கள் மக்களுக்கு சாதகமான பலனைப் பெற்றுக் கொடுத்துள்ளன. சில எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் மோதல்களிலும் முடிவடைந்துள்ளன. சில ஆர்ப்பாட்டங்கள் உயிரிழப்புக்களுடனும் முடிவுக்கு வந்துள்ளன.

ஆர்ப்பாட்டங்களின் வரலாறு இத்தகையது. ஆயினும் ஆர்ப்பாட்டங்கள் ஒருபோதும் அற்றுப்போவதில்லை. அதே சமயம் பொதுமக்களுக்கான உரிமைகளை வழங்க மறுத்து, நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்து, ஆட்சியாளர்கள் செயற்படும் போக்கும் நின்றுவிடவில்லை.

பொது மக்களது நியாயமான உரிமைகளை வழங்கக்கூட ஆட்சியாளர்கள் முன்வராத போக்குத் தொடர்கிறது. எந்தவொரு ஆட்சியாளரும் தமக்கான வாய்ப்புக்களை, வரப்பிரசாதங்களை மேன்மேலும் அதிகரித்துக் கொள்வதை நிறுத்திக்கொள்ள முன்வருவதாக இல்லை.



இவற்றைக் கண்டு கொதிப்படையும் மக்கள் பலாபலன் எவ்வாறு அமையும் என்பதைக் கூடச் சிந்திக்காது ஆர்ப்பாட்டங்களில் இறங்கி விடுகின்றனர். இதனால் அவர்கள் இருவித அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்கின்றனர். தமது உரிமைகள் மறுக்கப்படுவதனால் அவர்களுக்கு ஏற்படும் ஆத்திரமும் ஆர்ப்பாட்டத்தில் எதிர்கொண்ட அடக்குமுறைகளால் ஏற்படும் கோபமும் பிரச்சினைகளை வளர்த்துச் செல்கின்றன. ஆனால் மீண்டும் மீண்டும் இப்படி நடக்கையில் இவற்றால் எதுவுமே ஆகப்போவதில்லை என்ற விரக்தி உணர்வுக்குப் பொது மக்கள் உள்ளாகின்றனர். சில சமயங்களில் எகிப்து, லிபியா போன்று அந்தக் கோபம் பெரும் கிளர்ச்சிகளுக்கும் வித்திட்டு விடுகிறது.

பொதுமக்களது ஆர்ப்பாட்டங்களின் தன்மை அத்தகையதே. நடக்காது என நினைக்கையில் நடப்பதும் நடக்கும் என நினைக்கையில் நடக்காமல் விட்டுவிடுவதும் வரலாற்றில் நிறையவே உள்ளன. இது கலியுகமல்லவா? எதுவொன்றும் சாதகமாக அல்லது பாதகமாக மாறலாம். வடக்கும் தெற்கும் மாறலாம். மனங்களும் நிறங்களும்கூட மாறலாம்.

அந்த வகையில் இலங்கையில் தற்போது ஆர்ப்பாட்டங்களின் போக்கும் நோக்கும் மாறிவிட்டன. அதாவது அரசே முன்னின்று ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைத்து நடத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக முன்னரும் இப்படி நடந்துள்ளது.

இப்போது மனித உரிமைகள் சபையில் இலங்கை மாட்டிக் கொண்டதை எதிர்த்து அரசு ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி விடுகிறது. இத்தகைய முதலாவது ஆர்ப்பாட்டம் கொழும்பிலுள்ள ஐ.நா. சபை அலுவலகத்தின் முன்னால் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களால் தமக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படக் கூடுமென ஐ.நா. சபை அலுவலக ஊழியர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆர்ப்பாட்டக் காரர்கள் ஐ.நா. சபை அலுவலகத்துக்கு சேதம் விளைவிக்கவுள்ளதாக ஒரு கதை பரப்பப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களில்சிலர்அங்கு நடந்துகொண்ட விதமும் அப்படித்தான் இருந்தது. இத்தகைய ஆர்ப்பாட்டங்களை அரசே ஒழுங்கு செய்து நடத்தும்போது அவர்கள் யாருக்குப் பயப்படவேண்டும்? எதற்காகப் பயப்பட வேண்டும்?

எப்போதுமே அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் மீதுதான், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தான் இலங்கையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்பது அனைவருக்கும் தெரியும். புத்தளத்தில் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தின்போது படையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

கொழும்பிலும் வேறு இடங்களிலும் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது எல்லோர்க்கும் தெரியும். அப்படிப்பட்ட அரசு இன்று நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து நடத்துகிறது.

மற்றொருபுறம், அரச தர[illegible] பின் நம்பிக்கைக்குப் பாத்தி[illegible] ரமாக வேண்டுமானால், தா[illegible] மேற்கொள்ளும் அரச உத்தி[illegible] யோகத்தில் பதவி உயர்[illegible] களைப் பெறவேண்டுமானால் யாராயினும் அரசுக்கு ஆத[illegible] வாக விசேடமாக எதையாவது செய்தாக வேண்டும். அப்ப[illegible] வாய்ப்பை எதிர்பார்த்திருப்[illegible] பவர்களுக்கு இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அதிர்[illegible] டக் கனிகள்தான். இவற்றை நடத்துவதன் மூலம் அவர்கள் முன்னேறிவிடுவர்.

எது எப்படியிருப்பினும் ஐ.நா. சபையுடன் அரசு எ[illegible] படி நடந்துகொள்ள வேண்டுமோ, அப்படி நடந்து கொண்டிருந்தால் இப்போது மக்களை[illegible] கொண்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்க வேண்டி[illegible] தில்லை. என்னதான் இரு[illegible] தாலும் இது ஒரு நல்ல நடை முறைதான்.

இனிவரும் காலத்தில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு மக்கள் இதன் மூலம் துணி[illegible] பெறுவர். வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவ[illegible] களால் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட முடியும்.

அந்த விதத்தில் இப்போது பொருள்களின் விலையைக் குறைக்குமாறு ஆர்ப்பாட்டம் செய்யும் பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள் இனிமே[illegible] அரசுக்கு எதிராக வலுப் பெறும் என்று நம்பலாம்.

# ஆலமர வேர்களான அரச அதிகாரிகள்...

வ.ஜெயபாண்டி

ஆலமரம் போன்ற அரசாங்கத்துக்கு வேர் போல இருந்து உதவுபவர்கள் அரசு ஊழியர்களும் அதிகாரிகளும்தான்.

ஜனநாயகத்தில் தேர்தல் எனும் 'கோடை'யில் உதிர்ந்து மக்கள் வாக்கு எனும் வசந்தத்தில் புதிதாக முளைத்துவரும் இலை, தழை போன்றவர்கள் தான் அரசியல்வாதிகள்.

ஜனநாயக மரம் தழைத்தோங்க வேண்டும் எனில், அதற்கு நீர் முதல் உரம் வரை சரியாக அனைத்தையும் வழங்கும் வேர்கள் அதனதன் பணியைச் செம்மையாகச் செய்வது அவசியம். அத்தகைய நல்ல வேர்கள் உள்ள மரமே உறுதியுடன் இருக்கும். ஊருக்கும் பயன்படும்.

சமீப காலமாக நம் நாட்டின் வேராக இருக்கவேண்டிய அரசு ஊழியர்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளுக்கு இணையாக பல் வேறு பிரச்சினைகளில் சிக்கி விமர்சனத்துக்கு ஆளாகிவருகின்றனர்.

அரசியல்வாதிகள் ஐந்தாண்டு பொறுப்போடு பெரும்பாலும் அகன்று விடுவார்கள். ஆனால், அரச ஊழியர்கள், அதிகாரிகள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். தங்களது ஓய்வுநிலை வரை அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் பொது மக்கள் நலனை முன்னிறுத்தி செயல்படவேண்டாமா?

பொது வரிப் பணத்தில் தங்களது மாதாந்த ஊதியத்தை வாங்கும் அரசு ஊழியர்கள், மக்களுக்குச் சேவை செய்வதிலும், அவர்களது எதிர்காலத்துக்கான திட்டங்களைத் தீட்டுவதிலும் கைமாறு கருதாது செயல்படுவதுதானே நியாயம்? ஆனால், அப்படிப்பட்ட மனநிலையிலா இன்றைய அதிகாரிகள் செயல்படுகிறார்கள்?

அரச அதிகாரிகள் கட்சி சார்ந்து செயல்படும் போக்கு ஒருபுறம் இருக்க, மறுபுறம் அரசியல்வாதிகளைப்போல, மக்களிடம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டும் போக்கும் அதிகரித்துள்ளது.

சில சமயங்களில் அரசியல்வாதிகளைவிட அதிகமான விளம்பரத்தை அதிகாரிகள் தேடுகிறார்களோ என்று தோன்றுகிறது. அதைப் பார்க்கும் போது வருத்தமளிக்கிறது.

மாவட்டத்தில் கல்வி, மருத்துவம், விவசாயம், தொழில் என ஆதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே அதிகாரிகளது முக்கிய பணியாகக் கருதப்படுகிறது.

ஆனால், பெரும்பாலான அரச அதிகாரிகளோ அவற்றை நிறைவேற்றுகிறார்கள் இல்லை. அரசு நிதி ஒதுக்கவில்லை, அதைத் தரவில்லை இதைத் தரவில்லை போன்ற காரணங்களைக் கற்பித்துக் கொண்டு அவர்கள் தாம் செய்ய வேண்டிய காரியங்களை ஒத்தி வைத்துவிடுகிறார்கள். கேட்டால் ஒன்றில் அரசியல்வாதிகளை அல்லது மேலதிகாரிகளைக் கைகாட்டி விட்டுச் சும்மா இருக்கிறார்கள்.

ஊடகங்களிலும் இப்போதெல்லாம் அதிகாரிகளின் அளவுக்கு மீறிய பங்களிப்பு [illegible] அர [illegible] சாதா ரண மக்களுக்கு அறிவிக்கும் வகையில் செய்திகள் வெளியிடப்படுவதாகக் கூறலாம். அப்படிப் பார்த்தாலும் செய்திகளில் அரச திட்டங்களைவிட, அந்தத் திட்டங்களைப் பெற மக்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விவரங்களைவிட, செயல்படுத்தும் அதிகாரிகளின் முகத்தையும், பேச்சையும் மட்டுமே ஊடகங்களும் முன்னிறுத்துகின்றன. அவற்றுக்கு தாம் காரியம் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதே துடிப்பு.

கிராமங்களுக்கான போக்குவரத்து, ஏழை மக்களுக்கான மருத்துவ வசதிகள், அலைச்சல் இல்லாமல் பெற வேண்டிய சான்றிதழ்கள் என மக்கள் நலத் திட்டங்களில் கவனம் செலுத்தி, அதன் மூலம் மக்களின் மனதில் இடம்பெறும் அதிகாரிகளே நாடு எனும் மரத்தின் உண்மையான ஆணிவேர்கள்.

ஆனால், அத்தகைய அதிகாரிகள் தற்போது அருகிப் போய்விட்டனர். மக்களின் தேவைகளுக்காகப் பணியாற்றுவதைவிட அரசியல்வாதிகளதும் அதிகாரமுள்ள [illegible] திருப்திக்கு [illegible] செயற்படும் அதிகாரிகளையே இன்றைய காலத்தில் அதிகம் காணக்கூடியதாக இருக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக்கூடிய சில நல்ல அதிகாரிகளை அரசியல் ரீதியாகப் பழி வாங்கி வாங்கியே ஏனையவர்களை இப்படி ஆக்கி வைத்திருக்கிறார்கள் எங்கள் அரசியல்வாதிகளும்.

ஆம்! மரத்தில் வேர்களின் முக்கியத்துவம் விளம்பரத்தால் மட்டும் வருவதல்ல. அவை மண்ணில் மறைந்திருந்தாலும், மரத்துக்கான நீரை வழங்கும் செயல்களால் முக்கியத்துவம் பெறுகின்றன. அதுபோலவே அதிகாரிகளது செயலும் இருக்க வேண்டும்.

இதைத்தான் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். நடித்த திரைப்படத்தில், "தெருத் தெருவாய் கூட்டுவது பொது நலத் தொண்டு, பிறர் தெரிந்து கொள்ளப் படம் படித்தால் சுய நலம் உண்டு" என நாசூக்காகச் சுட்டிக்காட்டப்பட்டது.

விளம்பரப் போக்கைக் கைவிட்டு உண்மையான சேவை உள்ளத்துடன் மக்களுக்குச் சேவையாற்ற அதிகாரிகள் முன்வர வேண்டும். அப்போதுதான் வறுமையில்லாத, வளமான சமுதாயம் உருவாகும்.

**மாவட்டத்தில் கல்வி, மருத்துவம், விவசாயம், தொழில் என ஆதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே அதிகாரிகளது முக்கிய பணியாகக் கருதப்படுகிறது. ஆனால், பெரும்பாலான அரச அதிகாரிகளோ அவற்றை நிறைவேற்றுகிறார்கள் இல்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் பணக்காரரா? பிச்சைக்காரரா?

பிறரிடமிருந்து நமக்கு ஏதாவது கிடைக்காதா? பிறர் நமக்கு எதையாவது தரமாட்டார்களா என்று எதிர்பார்ப்பது, ஏங்குவது பிச்சைக்காரத்தனம். காசு வாங்கும் பிச்சைக்காரர்கள், சாப்பாடு எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்கள் மாதிரி, பிறர் உழைப்பை எதிர்பார்ப்பவரும் பிச்சைக்காரர்கள் என்கிறேன்! இது சரியா என்று யோசியுங்கள்.

'அம்மா, என் பனியன் எங்கே....? துண்டு எங்கே...? என்று பனியனுக்கும் துண்டுக்கும் கூட அம்மாவை எதிர்பார்க்கும் இருபது வயசுப் பாப்பாக்களாக இளைஞர்கள் இருக்கலாமா? எதற்கெடுத்தாலும் இப்படி அம்மாவைச் சார்ந்திருப்பவர்கள் திருமணத்திற்குப் பிறகு பெண்டாட்டியைச் சார்ந்து விடுவார்கள். அதுதான் பிரச்சினை. அதனால் அம்மாவை ஓரம் கட்டுவார்கள்.பிற்காலப் பிரச்சினைகளுக்கு இந்த அம்மா சார்பு ஒரு முக்கிய காரணம்.

தொலைக்காட்சி விளம்பரங்கள் வேறு இந்த மனோபாவத்தை வளர்க்கின்றன. படிப்பிலும் கம்யூட்டரிலும் மூழ்கி இருக்கும் பிள்ளைகளுக்கு வீவாவும் காம்ப்ளானும் கொண்டு வந்து கையில் நீட்டும் விளம்பரத் தாய்மார்கள் எதிர்காலத் தலைமுறையை மெல்ல மெல்ல நாசமாக்குகிறார்கள். நமக்கு எல்லாமே பிறர் தான் செய்ய வேண்டும் என்கிற சார்பு மனோபாவம் இளைய தலைமுறையினரிடம் வளரக்கூடாது. அன்பும் உபசரிப்பும் குற்றம் அல்ல. ஆனால் சாக்ஸைத் துவைத்துப் போடுவது... தேடும்போது எடுத்துக் கொடுப்பது -யூனிபார்ம் அயர்ன் செய்து ஞாபகமாகத் தருவது புத்தகங்களையும் தொலைத்த பொருள்களையும் தேடித் தேடி எடுத்துக் கொடுப்பது. இவையாவும் அம்மா, அக்கா, அண்ணா, அப்பாவின் வேலைகள் என்று பிறரைச் சார்ந்து வளரும் பண்பு மாணவருக்கு வளரக்கூடாது. நாம் நமது காலில் நிற்க முடியாமல் போனால் உடல் ஊனம் என்கிறோம். வாழ்க்கையில் பிறரைச் சார்ந்திருப்பதும் ஒருவகை ஊனமே. இந்த ஊனம் வெற்றியின் விரோதி. எனவே இதை விட்டு விலகிச் சொந்தக் காலில் நில்லுங்கள். இல்லையேல் நொந்து நூலாகி விடுவீர்கள்.

உழைப்புக்குத் தயாராக இருப்பவர்கள் ஒருபோதும் தோற்பதில்லை. இன்னொன்று... முதுமை அவர்கள் உடலில் இடம் கேட்பதில்லை. திருச்சியின் அழகிய கிழவர் கேள்விப்பட்டதுண்டா? முத்தமிழ்க் காவலர் அமரர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள். நெடிய உருவம், அழகிய வடிவம், எண்பது வயதிலும் மிடுக்கான நடை,கம்பீரமான பிசிறில்லாத குரல், தடுமாற்றம் இல்லாத பேச்சு...பல்லாண்டுகட்கு முன்பு ஒரு விழாவுக்காச் சென்னை வந்த அவரை ரயில் நிலையத்தில் வரவேற்று அழைத்துப் போகக் காத்திருந்தேன். பயணக்களைப்பே இன்றி ரயிலில் இருந்து இறங்கினார் கையில் இருந்த சின்னப் பெட்டியை, மரியாதை நிமித்தம் வாங்குவதற்குக் கை நீட்டினேன். நடந்தது என்ன?

'' விடு... பெட்டியைப் பிறரிடம் கொடுத்துத் தூக்கச் சொல்லுமளவு எனக்கு வயதாகவில்லை' என்று கூறியபடி விடுவிடு என்று நடந்தார். அப்போது அவருக்கு வயது எழுபது! எழுபது வயதிலும் பிறர் உழைப்பை, உதவியை எதிர்பாராத பெருஞ்செல்வம் அவர் மனதில் இருந்தது. அதனால்தான் அவர் திருச்சியின் அழகிய கிழவர் எனப்பட்டார். பிறர் உழைப்பை எதிர்பாராததே அவர் இளமையின் இரகசியம்.

அண்மையில் மூன்று திருமணமாகாத இளைஞர்கள் குடியிருக்கும் அறைக்குள் போக நேர்ந்தது Bachelors den ? என்பது சரிதான். களைந்த நிலையிலேயே சுருண்ட ஜட்டிகள் நாலைந்து ஆங்காங்கே. பூமியில் வட்ட வடிவில் கழற்றி விடப்பட்ட லுங்கிகள். அடைத்து வைக்கப்பட்ட ஜன்னல்கள். குடலைக் குமட்டும் விவரிக்க முடியாத வாசனைக் கலவை.....'' ஜன்னலைத் திறக்கக்கூடாதா? என்றேன். 'யாரு திறக்கிறது... யாரு அடைக்கிறது... போர் அடிக்கிறவேலை சார்..... அது! ஞாபகமா சாயங்காலம் சாத்தாட்டி கொசு வரும். மழைத்தண்ணி உள்ள வந்துடும்' என்று பெரிய பட்டியல் இட்டார்கள். ஜன்னலை நாள்தோறும் திறந்து சாத்துவது பெரிய வேலையாகத் தோன்றுகிறது அந்த இளைஞர்களுக்கு.... இவர்கள் வெற்றி பெறுவார்களா? யோசியுங்கள். உழைக்கத் தயங்கலாமா?

ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த சமயம் நிதானமாகத் தமது ஷூவுக்கு பாலிஷ் போட்டு அதன் அழகை ரசித்துக் கொண்டிருந்தார். அவருடன் வெளியில் போக வேண்டிய புகழ்பெற்ற பதவியாளர் ஒருவர் அங்கு வந்தார். அதிர்ச்சியுடன், என்ன மிஸ்டர் லிங்கன்.... உங்கள் ஷூவுக்கு நீங்கள் பாலிஷ் போடுகிறீர்கள்? என்று இழுத்தார். '' ஏன் .. நீங்கள் வேறு யார் ஷூவுக்கு பாலிஷ் போடுவீர்கள்?'' என்று கேலியாகத் திரும்பிக்கேட்டார் லிங்கன். உடல் உழைப்பு கேவலமானது அல்ல. உழைக்க மறுப்பவர்கள் சோம்பேறிகள். பிறர் உதவியை எப்போதும் எதிர்பார்ப்பவர்கள் ஒருவகையில் பிச்சைக்காரர்கள்.

உழைப்பை நேசிப்பவர்களுக்குப் பொற்காலம் காத்திருக்கிறது. வெற்றி நிச்சயம்.



சுகி.சிவம்

# பக்தரின் கனவில் தோன்றி ஆலயமாக அமைந்த துறையூர் சிவசுப்பிரமணியம்



லக்ஸ்மன்

வேலணை துறையூர் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய செயற்பாடுகளுடன் ஒன்றுபட்டு இருந்த துறையூர் மக்களின் ஐக்கியமும் ஒன்றுபட்ட வாழ்க்கையும் படிப்படியாகக் குறைந்து 1950 களில் கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக 300 வருடங்களுக்கு மேலாக ஒற்றுமையுடன் இருந்து வந்த ஐயனார் கோயில் நிர்வாகத்துக்கு எதிராக தனிமனிதப் போட்டிகளும், பதவி ஆசைகளும் அங்கத்தவர்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து கிராம மட்டத்தில் பல பிரச்சினைகளையும் பிரிவுகளையும் ஏற்படுத்தியது.

இதன் காரணமாக பிரிந்து சென்ற சுமார் இருபத்தி எட்டுப் பேரும் வைத்தியர் கந்தையாவின் வீட்டில் கூடி தமது அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசித்தனர். இதன் காரணமாக கதிரவேலு பேரம்பலத்தின் ஆலோசனை கவனத்தில் கொள்ளப்பட்டு வேலணை தெற்குவாசிகள் நலவுரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 1960 ஒக்ரோபர் மாத காலப்பகுதியில் நிகழ்ந்த இதில் சங்கத்தின் தலைவராக எஸ்தாக்கி இளைய தம்பியும் செயலாளராக வைத்தியர் கந்தையாவும் பொருளாளராக சின்னர் ஐயம்பிள்ளையும் உறுப்பினர்களாக 28 பேரும் தெரிவாகினர்.

தற்போது ஹரிகரபுத்திர ஐயனார் கோயில் நிர்வாகத்தினருடன் உள்ள முரண்பாடுகள் காரணமாக தமது பகுதியில் ஆலயம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நிலையும் இருந்தது. நாள்கள் உருண்டு கொண்டிருக்க ஐயம்பிள்ளை கந்தையா தான் கனவு ஒன்று கண்டதாகவும் அதன்படி வேலணை தெற்கு கடற்கரைத் துறைமுகப் பகுதியில் வெள்ளிப் பேழையில் சங்கு வடிவத்தில் ஒரு பொருள் இரைந்து கொண்டு வருவதையும், அதைத் தானும் வேறு சிலரும் எடுத்து வந்த பார்த்தபோது அது வேல் உருவத்தில் தெய்வீக ஒளி வீசிக் கொண்டிருக்கக் காணப்பட்டது.

அந்த வேலை மூலஸ்தானத்தில் வைத்து ஒரு கோயிலைக் கட்டுவோம் எனக் கனவில் கூறியதாகவும், தமது குழுவினரிடம் தெரிவித்தார். அவரது கனவு குறித்த கூற்றை ஏற்றுக் கொண்ட குழுவினர் ஒரு கோயிலை அமைக்கச் சம்மதம் தெரிவித்தனர். இந்தக் கோயிலைக் கட்டுவதற்கு ஏற்ற இடமாக இ.கணபதிப்பிள்ளை, சி.சண்முகம் குடும்பத்தினர் மணியகாரன் தோட்டம் என்ற தங்களது காணியில் கோயிலைக் கட்டலாம் எனவும் அதற்கு உகந்த இடம் இந்தக் காணி என்றும் கூற அனைவரும் தமது முழுச் சம்மதத்தையும் தெரிவித்தனர்.

> 1980 ஆம் ஆண்டு வரை நலவுரிமைச் சங்கம் என்ற பெயருடன் ஆலயத் தேவைகளைக் கவனித்து வந்த சபை, அப்போதைய தலைவராக இருந்த க.செல்வநாயகத்தின் முயற்சியால் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபை என மாற்றப்பட்டு இயங்கிவந்தது.

இதற்கமைய வில்லூன்றி தேவஸ்தான தர்மகர்த்தாவும், அப்போது யாழ்.மாநகர உதவி முதல்வராகவும் இருந்த சைவ சித்தாந்த வித்தகர் சோமசுந்தரம் இராசரத்தினத்தைக் கொண்டு, சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கான அடிக்கல்லை 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் நட்டனர். அராலியைச் சேர்ந்த ஸ்தபதி விஸ்வலிங்கம் குழுவினர் ஆலய கட்டட வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றினர்.

இந்த ஆலயத்தின் முதலாவது மகா கும்பாபிஷேகம் பிரதிஷ்டா குரு நயினை ஐ.கைலாசநாதக் குருக்கள் தலைமையில் 30.04.1969 இல் நடைபெற்றது. இதன் இரண்டாவது கும்பாபிஷேகம் க.மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் 28.06.1989 இலும், மூன்றாவது கும்பாபிஷேகம் செய்வதற்கென 21.10.2002 இல் பாலஸ்தாபனமும் செய்து வைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு வரை நலவுரிமைச் சங்கம் என்ற பெயருடன் ஆலயத் தேவைகளைக் கவனித்து வந்த சபை, அப்போதைய தலைவராக இருந்த க.செல்வநாயகத்தின் முயற்சியால் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபை என மாற்றப்பட்டு இயங்கிவந்தது.

ஆலய புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டதன் பயனாக வைரவர் கோயில் மணிக்கூண்டு என்பன முருகன் ஆலய பஜனைக் குழுவினரால் 1989 இலும், 2000 ஆம் ஆண்டில் ஐயம்பிள்ளை தனஞ்செயனினாலும் அன்பளிப்புச் செய்த நிதியுதவிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டது. அமரரான வைத்தியர் கந்தையாவின் ஞாபகமாக அவரது ஆலயம் அமைந்துள்ளது. உற்சவ காலங்களில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் என அனைத்துச் சுற்றாடல் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் மத வேறுபாடின்றி துறையூர் முருகனைத் தரிசித்து அவனது திருவருள் வேண்டிக் கூடுகின்றார்கள்.

மக்களை நல்வழிப்படுத்தி, சிறந்த சைவ ஆசார சீலர்களாக வாழவைக்கும் தெய்வமாக விளங்கும் இந்த ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக இடம்பெறுகின்றன. அத்துடன் வேல் வார்ப்பு தினம், கும்பாபிஷேகதினம், கதிர்காமக் கந்தன் தீர்த்தோற்சவ தினம், திருவெம்பாவை, கந்த ஷஷ்டி விழா, சரஸ்வதி பூசை, மானம்பூ போன்ற வைபவங்களும் சமய அனுட்டான நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. தீவுப் பகுதியில் கந்த புராண விரிவுரை, திருவாதவூரடிகள் புராணம் என்பன மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறுவது இங்குதான் எனச் சொல்லப்படுகின்றது. வருடாந்த மகோற்சவம் இந்தப் பகுதி மகனான வைத்தியர் க.நவரத்தினம் வழங்கிய நிதியுடன் ஆரம்பிக்கப்பட்ட மணிமண்டபம் ஆலய நிதியுடன் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. மண்டபத்தின் தளத்தை நவாலியைச் சேர்ந்த மகாலிங்கம் பவளத்தின் உதவியுடன் நிறைவு செய்யப்படவுள்ளதாகத் தெரிகின்றது. கோயிலுக்கு ஒரு கலாசார மண்டபத்தை அமைக்க ஈ.பி.டி.பி. கட்சியினர் கணிசமான தொகையை நிதியுதவியாக வழங்கியுள்ளனர். ஆலய தேவைகளுடன் இந்தக் கிராமத்தின் தேவைக்கும் கிராமத்துக்கு அழகூட்டும் வகையிலும் அமையவுள்ள இம்மண்டபம் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ஆலய பரிபாலன சபையினராக விளங்கிய முன்னோர்களது வழியில் தொடர்ந்தும் அதன் வளர்ச்சிக்கான பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய நிர்வாகம் நல்ல முறையில் தனது பணியை முன்னெடுப்பதாகக் கூறப்படுகிறது. கடற்கரையை அண்டிய பகுதியில் மக்கள் கடல் காற்றைச் சுவாசித்த வண்ணம் முருகப் பெருமானது திருவருளை வேண்டித் தொழக் கூடிய சுற்றாடலில் சிறந்த முறையில் இடம்பெற்று வருகின்றது. ஆலய நிர்வாகத்தில் பஞ்சபுராணம் ஓதும் தகுதி பெற்றவர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதன் முதலில் ஐயனார் ஆலயத்தில் இருந்து விலகிய 28 பேர்கள் கொண்டதும் முருகன் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் போது உறுப்பினர்களான இருந்தவர்கள் பட்டியலும் ஆலயத் திருப்பணிக்கு உதவிய பக்தர்களின் விவரங்கள் கொண்ட பட்டியலும் வெளியிடப்பட்டு மக்களின் ஒத்துழைப்புக்கு நன்றிகளை அறிவிப்பதிலும் நிர்வாகம் அக்கறை கொண்டுள்ளது. கடலலை தாலாட்ட, தென்றல் சீராட்ட இயற்கை எழில் நிறைந்த வேலணை கிராமத்தின் தென்பகுதியில் இருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகள் இந்தக் கிராமத்தின் துயரங்களைக் களைந்து நிம்மதியான வாழ்வைத் தமக்கு வழங்குவர் என்ற அசையாத நம்பிக்கையுடன் அவரது திருப்பாதம் பணிந்து வணங்கித் தொழுவதையும், ஏனைய கடமைகளுடன் தமது முக்கிய கடமையாகக் கொண்டு வருகிறார்கள் கிராம மக்கள். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பாதுகாப்புக்கு 6,000 பொலிஸார் கடமை

## கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளில்

**பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டே விசேட பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

கொழும்பு,ஏப்.5

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் தற்பொழுது பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேலதிகமாக 6000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

புத்தாண்டுக் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு வருகைதரும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே இந்த விசேட பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பைப் போன்று அதனை அண்மித்த நகரப்புறங்களிலும் இந்த விஷேட பாதுகாப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மதுபோதை பாவனை போன்ற செயற்பாடுகள் தொடர்பாக அடுத்த வாரம் தொடக்கம் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருடர்களிடமிருந்து தமது பணங்களையும், பொருள்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது தொடர்பில் மக்கள் விழிப்புடன்செயற்படவேண்டும்.

திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றால் அண்மையிலுள்ள பொலிஸாரிடம் உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.- என்றார். (ச)

# அரசியல்மயப்பட்ட நிலையில் சட்ட மா அதிபர் திணைக்களம்

## முன்னாள் உயர் நீதிமன்ற நீதிவான் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.5

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிவான் டபிள்யூ.எம்.பீ. வராவெள தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தலையீடுகள் இல்லாவிட்டால் இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமாக இயங்கும்.

நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய வேண்டுமாயின் 17 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானது.

உரிய தொழில்களுக்கு தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டியது முக்கியமானது .

குற்றங்கள் செய்வோர் தண்டிக்கப்படக் கூடிய வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

மக்களை பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும். நீதிமன்றத்தின் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விடக் கூடாது.- என்றார். (ச)

# சங்கிலி பறிப்பு; உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கைது

கொழும்பு, ஏப் 5

தனது சகோதரனைத் தாக்கி அவரிடமிருந்து மூன்றரைப் பவுண் எடையுள்ள தங்கச் சங்கிலியைப் பறித்தார் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் உதவி அத்தியட்சகர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

கைதான நபரின் சகோதரர் செய்த முறைப்பாட்டின் பேரிலேயே பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் அவரது சகோதரரும் கொழும்பில் இருந்து வாகனம் ஒன்றில் சிலாபத்தில் உள்ள நண்பரான மீன் வியாபாரியின் வீட்டுக்கு வைபவம் ஒன்றுக்காகச் சென்றிருந்தவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)




சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் கைவினைப் பொருள்களுக்கான கண்காட்சி கொழும்பு தேசிய கலைக்கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாட்டின் அனைத்துப் பகுதியில் இருந்தும் முதியோர்கள் தமது கைவினைப் பொருள்களை காட்சிப்படுத்தியதுடன் விற்பனையிலும் ஈடுபட்டனர்.

# லஞ்சம் பெற்ற அதிகாரி வசமாக மாட்டினார்

கொழும்பு,ஏப்.5

கொழும்பு தொழில் திணைக்களத்தில் பணிபுரியும் பிரதான தொழில் அதிகாரி ஒருவர் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனம் ஒன்றின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாதிருப்பதற்காக என குறித்த தொழில் அதிகாரி ஒரு லட்சம் ரூபா லஞ்சம் கோரியுள்ளார்.

வத்தளை பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை லஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொண்ட போது தொழில் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டவர் மறியலில்

**சந்தேகநபர் தன்னை நம்பிய அப்பாவிகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று ஹோட்டேல்களில் தங்கவைத்து தவிக்க விட்டு தலைமறைவாகியுள்ளார்.**

கொழும்பு,ஏப்.5

வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு விரும்பியவர்களை ஏமாற்றி பல லட்சக் கணக்கான ரூபாவை மோசடி செய்தார் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு விடுமுறை நீதிமன்ற நீதிபதி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபர் பல்வேறு பெயர்களைப் பயன்படுத்தி தன் வசிப்பிடத்தை அடிக்கடி மாற்றியும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடியோரை ஏமாற்றி லட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்தார் என்று கொழும்பு மோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நபர் இறுதியாக மோதரையைச் சேர்ந்த ஜே.ஜே.எஸ்.சசிகலாவுக்கு இத்தாலியில் தொழில் பெற்று தருவதாகக் கூறி மூன்று லட்சம் ரூபாவை வாங்கி ஏமாற்றியுள்ளதாக கொழும்பு மோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தன்னை நம்பிய அப்பாவிகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று ஹோட்டல்களில் தங்கவைத்து தவிக்கவிட்டுத் தலைமறைவாகி விடுவதாகவும் பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

இவரிடம் பல்வேறு பெயர்களில் அடையாள அட்டைகள் மற்றும் கடவுச் சீட்டுக்களும் இருந்தன என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் சீதுவையில் கிறீன் கோஸ்ட் கம்பனி எனும் பெயரில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனத்தை நடத்தி வந்த போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோசடிப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்த கருத்துக்களை பரிசீலித்த நீதிவான் இவரின் சொத்துக்கள் பற்றிய அறிக்கையை பெறுமாறும் அறிவுறுத்தியுள்ளார். (ச)

### நீதிமன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்ட

# கொலையாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் அமைச்சர் திஸாநாயக்க

கொழும்பு,ஏப்.5

1988 ஆம் ஆண்டில் 11 பேரை சுட்டுக் கொன்ற சம்பவத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து பேரை அந்தத் தண்டனையிலிருந்து உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க காப்பாற்றியுள்ளார்.

ஜனாதிபதிக்குள்ள விசேட அதிகாரத்தின் ஊடாக அமைச்சர் இந்தக் கைதிகளைக் காப்பாற்றியுள்ளார்.

இதற்கமைய மரண தண்டனை விதிப்பதற்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூண்டுகளிலிருந்து இவர்கள் சாதாரண கைதிகள் இருக்கும் சிறைச்சாலைகளுக்கு கடந்த திங்கட்கிழமை மாற்றப்பட்டுள்ளனர்.

வலப்பனை, ஹங்குரன்கெத்த பிரதேசத்தில் சமய நிகழ்வொன்று நடைபெற்றுக்கொண்டிருந்த விடொன்றுக்குள் புகுந்து, 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், மேலும் 12 பேர் படுகாயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களில் குறித்த ஐவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இவர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்கவின் தலையீட்டினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இவர்கள் அந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் சில மாதங்களில் விடுதலையாக வுள்ளனர் என்று போகம்பரை சிறைச்சாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக 2007ஆம் ஆண்டு இவர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனையடுத்து குற்றவாளிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற மனுவின் தீர்ப்பிலும் இவர்களது மரண தண்டனை உறுதிசெய்யப்பட்டது.

இந்த நிலையில் இவர்களை விடுவித்துக்கொள்ள அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தொடர்ந்து முயற்சித்து வருவது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அபிவிருத்தியில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனையை பெற்றுக் கொள்க

கொழும்பு,ஏப்.5

அபிவிருத்தித் திட்டங்களின்போது எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களில் எதிர்க்கட்சிகளின் யோசனைகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# பாடசாலை காசோலை மூலம் 3 லட்சம் ரூபா மோசடி

## கைதானார் ஆசிரியர்

கொழும்பு, ஏப்.5

களனிப் பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்குச் சொந்தமான காசோலையொன்றைத் திருடி அதன் மூலம் வங்கியில் இருந்து மூன்று லட்சம் ரூபா பணத்தைப் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் அதே பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவரை பேலியகொட பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

சந்தேகநபர் கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடிய காசோலையில் இவர் 3 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார். இந்தத் திருட்டு இடம்பெற்று 3 மாதங்களின் பின்பே அது அம்பலமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடியை மறைப்பதற்காக வங்கியில் இருந்து பாடசாலைக்கு வரும் மாதாந்த நிதிக் கூற்றுக்களையும் இவர் மறைத்துள்ளார்.

இந்த மோசடி குறித்து கல்வி அமைச்சு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

பேலியகொட தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிசிரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தவறிவிட்டது**

பரமேஸ்வரன் சுஜீவன் ஆகிய எனது தே.அ.அ. (871233888V), சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ஆகியன புத்தூருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்பு:- 077 9238633, 011 4990183

# தேவை

பின்வரும் தொழிற்தேவைகளுக்கு ஆள்கள் தேவை

(1) விற்பனையாளர்கள்

(2) லொறியில் சுமை ஏற்றி இறக்குபவர்

(வடமராட்சியில் வசிப்பவர் மட்டும்)

ஜமுனா ஸ்ரோர்ஸ்
39, பிரதான வீதி, நெல்லியடி
T.P : 021 2263970, 077 7422604

(16419)(6-9-8)


# உதவி புரிவதில் கனேடியருக்கு முதலிடம்

பெரும் விபத்துக்கள், இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் போது மக்களுக்கு உதவி புரிவதில் கனேடியர்கள் முதலிடம் வகிக்கின்றனர்.

இவ்வாறு 'டைட்டானிக் அசிஸ்'என்ற புத்தகத்தை எழுதிய பொல் பட்லர், ஹேலிஃபொக்ஸ் நகரத்து மக்களின் அருந் தொண்டை வியந்து போற்றியுள்ளார்.

கப்பல் விபத்து, தீ விபத்து, நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து மற்றும் புயல், வெள்ள அபாய காலங்களில் கனடா மக்கள் உதவி புரிவதற்குப் பின்நிற்பதில்லை.

1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் நாள் டைட் டானிக் என்ற சொகுசுக் கப்பல் கடலில் மூழ்கியபோது அதில் பயணம் செய்த 2200 பேரில் 1500 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களின் உடலையும், உடற்பாகங்களையும் தேடி எடுக்க கனடா மக்கள் இரவுபகலும் அலை கடலில் அரும் பாடுபட்டனர். இறந்தவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினர் என்றார் அவர். (ந)



பாடசாலை விடுமுறை நாள்களைப் பயனுள்ளதாக மாற்றிடுங்கள்

**பள்ளிச் சிறார்களுக்கான விடுமுறைகால வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

விவரங்களுக்கு :

Gateway
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk


## கிளாலி வியாகுலமாதா செபக்கூடம் 50 ஆவது ஆண்டு பெருவிழா



" எல்லாம் நிறைவேறிற்று'' என்று யேசு உயிர் விட்டார்
பெரியவெள்ளி (06.04.2012) இல் கிளாலி வியாகுலமாதா பதியில் முற்பகல் 10 மணி தொடக்கம் 1 மணிவரை சிலுவைப் பாதை தியானமும் செபவழிபாடும், அன்னதானமும் நடைபெறும் அதனைத் தொடர்ந்து

## நிறுவனரின் 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண் 19 ★ 05 ★ 1936



விண் 20 ★ 03 ★ 2007

''நானே உயிர்ப்பும் உயிரும்.....'' - யேசு

அமரர் **துரையப்பா பிரான்சீஸ் மைக்கல்**

(கலைஞர், ஞானசிருஷ்டி வைத்தியர், யேசுவின் தாயின் ஊழியன்)

குறிப்பு: யாழ்ப்பாணம் தனியார் பஸ் நிலையத்திலிருந்து கிளாலி எழுதுமட்டுவாள் பஸ் அன்று காலை 6.45 மணிக்கு புறப்படும்.

வியாகுலமாதா செபக்கூடம், கிளாலி.

அருள் நேசன் மைக்கல் (மகன்), திருமதி மரிய செபமாலை மைக்கல் (மனைவி), குடும்பத்தினர்.

## 6,000 போதை புகையிலை மீட்பு

போதையூட்டும் ஒருவகை புகையிலை அடங்கிய சுமார் 6000 பக் கெற்றுக்களை கட்டுநாயக்கவிமானநிலையத்தின் சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். சென்னையில் இருந்து நேற்று அதிகாலை நாட்டிற்கு வந்த பெண் ஒருவரே போதையூட்டும் புகையிலை பக்கெற்றுக்களுடன் வந்துள்ளதாக சுங்கப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பெண்ணிடம் இருந்து சுமார் 54 கிலோ கிராம் புகையிலை பக்கெற்றுக்கள்கைப் பற்றப்பட்டுள்ளன. மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இந்தப் புகையிலை தொகையைகொண்டு வந்த பெண்ணுக்கு, 25,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். (எ)


**கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம்** Diploma in Computer Courses

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

| Duration 3months,4months | |
|---|---|
| BatchI 06-04-2012 | Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail . |
| BatchII 07-04-2012 | |
| BatchIII 08-04-2012 | புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள். |
| BatchIV 11-04-2012 | |
| (Time:-9am or 3pm) | |

அனைத்து பாடநெறிக்குமான கட்டணம் 1000/= மட்டுமே

Computer Express
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun 11.00am)
Lecturer:Ashok


## மரண அறிவித்தல்



உயர்திரு **பாக்கியநாதன் யோகநாதன்**

சமாதான நீதிவான்

(ஓய்வு பெற்ற தபாலதிபர் - வவுனியா)

வவுனியா இரணைஇலுப்பைக்குளத்தை பிறப்பிடமாகவும், இல 9, இராஜதுரை வீதி, வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பாக்கியநாதன் யோகநாதன் (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியநாதன் உடையார் காந்திமதி தம்பதியரின் புதல்வரும், கமலாம்பிகையின் (முன்னாள் பிரதி அதிபர் - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) அன்புக்கணவரும் றஜீவ் (பொறியியலாளர்), ஜனகன் (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), ஜயந் (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாரணியின் அன்புமாமனும், சர்மி, சுருதியின் அன்புப்பேரனும் திருமதி குகதேவி தியாகராஜா, திருமதி உமாதேவி சேனாதிராஜா, குகதாசன் காலஞ்சென்ற சிவதாசன், காலஞ்சென்ற பத்மாதேவி மகேந்திரராஜா மற்றும் திருமதி சுபத்திராதேவி மங்களேஸ்வரன், திருமதி சுசிலாதேவி தெய்வேந்திரராஜா ஆகியோரின் சகோதரரும் திருமதி சரஸ்வதி வரதலிங்கம், திருமதி பாக்கியலெட்சுமி வல்லிபுரநாதன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வரதலிங்கம் (முன்னாள் அதிபர் வே/சைவப்பிரகாச வித்தியாலயம்) வல்லிபுரநாதன் (பிரபல வர்த்தகர் 96, சிறிகதிரேசன் வீதி, கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.04.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். என்பதை அறியத்தருகின்றோம்.

இல.9, இராஜதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா

தகவல்:
குடும்பத்தினர்

(7353) (7-9-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 28.10.1929

விண்ணில் 18.02.2011

திதி: 05.04.2012
பூர்வபக்ஷ சதுர்த்தி

## அமரர் முருகன் செல்லத்துரை

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி/ சூர்யா பார்மசி - கட்டட உரிமையாளர்)

"ஆண்டொன்று சென்றதுவே ஓயவில்லை
இன்னமும் எம் துயரம் நீறாகிப் போனதுவே
எம் நெஞ்சம் அப்பாவே! எம்மை அன்போடு
சிறப்பாக வாழவைத்த அப்பாவே!
உம்மைத் தரணியிலே காண்பதெப்போ...."

இன்று (05.04.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் நினைவுகளில்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பம் கேட்ட நபரை மடக்கினர் மக்கள்

**மட்டக்களப்பில் சம்பவம்**

**இருவர் தங்களை விடுதலைப்புலிகள் என்று அடையாளப் படுத்தி கப்பம் கோரியுள்ளனர்.**

மட்டக்களப்பு, ஏப்.5

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச கடை ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் துப்பாக்கி முனையில் கப்பம் கோரி மாட்டிக் கொண்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கப்பம் கோரி அச்சுறுத்திய இருவரில் ஒருவரை கடை உரிமையாளர் கத்தியால் குத்தியதை அடுத்து காயமடைந்தவரை பொது மக்கள் துப்பாக்கியுடன் மடக்கிப் பிடித்துள்ளனர். மற்றைய சந்தேகநபர் தப்பியோடி விட்டார் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித் தனர்.

வெல்லாவெளி, 39 ஆம் கொலனிப் பிரதேசத்தில் விநாயகம் என்பவரின் கடைக்கு சம்பவதினமான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.45 மணிக்கு ரி.56 ரக துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தங்களை விடுதலைப்புலிகள் என்று அடையாளப்படுத்தி கப்பம் கோரி அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கத்திக்குத்துக்கு உள்ளாகி பிடிபட்டவர் மண்டூர், ஆனைகட்டியவெளியைச் சேர்ந்த கோவிந்தன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)



பொதுமக்கள் போக்குவரத்து வீதி விதி முறைகளைக் கடைப்பிடிக்காததினால் ஏற்படும் சேதங்கள் மற்றும் உயிராபத்துக்களை தடுக்கும் நோக்குடன் மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பிரிவு தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.அரசரட்ணத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொது விழிப்புணர்வு வீதி நாடகம் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச தள வைத்தியசாலைக்கு முன்பாக நடைபெற்றது. (31)

## சொறிகல்முனையில் பெண்ணின் சடலம் மீட்பு


சம்மாந்துறை,ஏப்.5

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிக்கல்முனை கிராமத்தின் நாணல் காட்டு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்பு காணாமல் போன பெண்ணின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உண்மை நிலை படுகடன்




**கொழும்பு – திருகோணமலை**

## கடுகதி ரயில் சேவையில் சொகுசுப் பெட்டி இணைப்பு

திருகோணமலை,ஏப்.5

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு செல்லும் கடுகதி ரயிலில் பிரயாணிகளின் நலன்கருதி எக்ஸ்போ லங்கா நிறுவனம் சகல வசதிகளுடனான குளிரூட்டப்பட்ட எக்ஸ்போ சொகுசு ரயில் பெட்டியொன்றை கடந்த ஞாயிறுக்கிழமை முதல் இணைத்துள்ளது.

தினமும் வியாழக்கிழமை, சனிக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய தினங்களில் கொழும்பிலிருந்து இரவு 9 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் அதிகாலை 5.10 மணிக்கு திருகோணமலையைச் சென்றடையும்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் திருகோணமலையிலிருந்து 7.30 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் அதிகாலை 4.05 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

இந்த சொகுசு ரயில் பெட்டியில் பயணிக்கும் பிரயாணிக்கு ஒரு வழி பயணத்துக்காக 1,900 ரூபா அறவிடப்படுகின்ற நிலையில் 3 தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 1,450 ரூபா அறவிடப்படுகின்றது.

இந்தப் பிரயாணிகளுக்கு குளிரூட்டி சேவையுடன் இரவு நேர சாப்பாடு, வரையறையற்ற தேநீர் ஆகியன இலவசமாக பரிமாறப்படுகின்றன.

ஏற்கனவே கொழும்பிலிருந்து கண்டி, பதுளை மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்கான கடுகதி ரயிலில் இது போன்ற எக்ஸ்போ சொகுசு ரயில் பெட்டி இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மருதமுனையில் இன்று தபால் அலுவலகம் திறப்பு

**மருதமுனைத் தபாலகம் 1994 ஆம் ஆண்டு முதல் தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வந்தது.**

மருதமுனை,ஏப்.5

மருதமுனையின் புதிய அஞ்சல் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் இன்று வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

மருதமுனை அஞ்சல் அலுவலகத்தின் தபாலதிபர் பீ.எம். அஸ்ஹர்டீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, நீதிஅமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.ஹரீஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நீண்டகாலமாக உப அஞ்சல் அலுவலகமாக இருந்துவந்த மருதமுனைத் தபாலகம் 1994 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டு அஞ்சல் அலுவலகமாகியது முதல் தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வந்தது. அமைச்சர் ரவூப் ஹக்கீம் தபால் அமைச்சராக இருந்தபோது அடிக்கல் நடப்பட்ட தபாலகமே தற்போது மருதமுனை மக்கள் மண்டப வளாகத்தில் பல்வேறு வசதிகளுடனும் திறந்துவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாடசாலைக்கு மைதானம்

மட்டக்களப்பு,ஏப்.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில், களுவன்கேணியில் அமைந்துள்ள சிங்காரச்சோலை சரஸ்வதி வித்தியாலயத்தில் மைதான தேவையை பூர்த்தி செய்வதற்கு பீடோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.புஸ்பகுமார் நடவடிக்கை எடுத்துள்ளார்.

களுவன்கேணி சிங்காரச்சோலை சரஸ்வதி வித்தியாலயத்தில் மைதானம் அமைப்பதற்கான அடிக்கல்லை கடந்த வெள்ளிக்கிழமை பீடோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நட்டுவைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

CERTIFIED
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணில் HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா

## கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் வாடிக்கையாளர்களுக்கு

மலருகின்ற புத்தாண்டிலே நம் அன்புக்குரியவர்களுக்கான புத்தாடைகள், நம் இல்லத்திற்கான தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றை அதி கூடிய விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள, HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா இது.

எல்லாக்காலங்களிலும் யாழ் மக்களின் தோளோடு தோள் நின்ற HNB, இப்புத்தாண்டு காலத்தில் கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் மூலம் புத்தாண்டு பொருட்களை விலைக்கழிவில் கொள்வனவு செய்ய, யாழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது.



### கீழ் காணும் காட்சி அறைகளிலுள்ள பொருட்களுக்கான விலைக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1. மங்களா காட்சி அறை | |
| பிளாஸ்டிக் தளபாடங்கள், மெத்தைகள் மற்றும் பேபி கொட்ஸ் | 3% – 7% |
| மரத்தளபாடங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள் | 5% – 20% |
| உலோக தளபாடங்கள் | 5% – 10% |
| சோபா செட்கள் | 5% – 15% |
| 2. கனடா ஜெயஸாஜி சுப்பர் சென்ரர் | 10% – 50% |
| 3. கமலேஸ்வரி டெக்ஸ் | 10% |
| 4. சீமாட்டி (பிரைவட்) லிமிட்டட் | 10% – 15% |
| 5. ஸ்டைல் பார்க் | 10% |
| 6. மீடியா எலக்ரோ மார்ட் | 5% |
| 7. பெனின்சுலா சுப்பர் மோல் | 5% |
| 8. டி எஸ் ஐ | 7.5% |
| 9. த வேர்ல்ட் ஒவ் ஹெய்லீஸ் | 10% – 15% |
| 10. ரொபாஸ் | 15% |
| 11. மிலேனியம் பெஷன் | 15% |

நிபந்தனைக்குட்பட்டது

மார்ச் 31 முதல் ஏப்ரல் 13 வரை மட்டுமே




HNB
உங்கள் முன்னேற்றத்தில் பங்காளி

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி / Hatton National Bank PLC - PQ 82

பிட்ச் ரேட்டிங் : AA-(lka)
HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, ரி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
மேலதிக விபரங்கட்கு: HNB கார்ட் சென்ரர், தொ.பேசி 4523523


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மேகக் கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும்.

# இலங்கை-இந்திய நல்லுறவை குழப்பச் சில சக்திகள் முயற்சி

## அமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

இந்தியா- இலங்கை ஆகிய இரு நாடுகளிடையே நீடிக்கும் நல்லுறவைத் தடுக்க, குழப்ப சிலசக்திகள் முயற்சித்து வருகின்றன. இவற்றைக் கடந்து தமிழக மீனவர் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண நட வடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

நடுக்கடலில் தமிழக மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச் சினை களைத் தீர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து டில்லியில் அவர் செய்தியா ளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழக மீனவர் கள் எதிர்கொள்ளும் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு முயற்சி எடுத்து வரு கிறது.

இது தொடர்பாக இந்திய, இலங்கை அரசுகள் மட்டத்தில் மட்டுமின்றி இரு நாட்டு மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் அளவிலும் பேச்சு நடத் தப்பட்டு வரு கிறது.

இரு தரப்பு மீனவர்களும் பிரச் சினையின்றிக் கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட வகை செய்யும் வரைவு அறிக்கை தயாரிக் கப்பட் டுள்ளது. அது குறித்தும் விவாதிக் கப்பட்டு வருகிறது.

மீனவர்கள் பிரச்சினை சுமுகமாகத் தீர நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. ஆனால், இரு நாடுகளிடையே நீடிக்கும் நல்லுறவைத் தடுக்க-குழப்ப சிலர் முயல்கின்றனர். இவற்றைக் கடந்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண நடவடிக்கை எடுக் கப்படும். இரு தரப்பு நாடுகளின் தக வல் பரிமாற்றத்திலும் எந்தப் பின்ன டைவும் இல்லை- என்றார் அவர். (வ)

# இது இன்றைய உலகின் நிலை....

சிலுவைப் பாதையில் இயேசுக்கள் பலர்..

“இப்பொழுது அழுவோரே நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள்” [லூக் 6:21]

“அது ஒரு பெரிய திறந்த சிலுவைப் பாதை. ஒருவர் மாறி ஒருவராக அந்தப் பெரிய சிலுவையைச் சுமக்கப் பெரும் போட்டி ; முண்டியடித்துக் கொண்டு வந்த மூன்று நண்பர்களில் ஒருவன் முந்திக் கொள்கின்றான்.

நண்பரில் ஒருவன்– “நம்ம இரண்டு பேரும் போட்ட திட்டம் சரியா கவேலை செய்யுது. இதுக்காகத்தானே முண்டியடித்து சிலுவையைப் பறிப்பவர் கள் போல ஓடி வந்தோம். அவனுடைய பாவம் சுடப்போல அதுதான் சுமக்கிறான்.

ஓர் அம்மா – “ஆண்டவரே நீர் பாடுபட்டு இறந்து 2000 ஆம் ஆண்டுக்கு மேலாகிறது. ஆனாலும் நான் இன்னமும் சிலுவை சுமக்கிறன். இரக்கமில்லாத பிள்ளைகள், அரக்க குணமுள்ள சகோதரர்கள், நன்மையெல்லாம் பெற்றுக்கொண்டு என்னை ஏறி மிதிக்கும் உறவினர்கள், இதற்கெல்லாம் மேலாக ஆண்ட வர் இறந்திட்டார். அதற்காகக் குடிக் கின்றேன்” என்று சொல்லிக் கவலையில் குடி குடியென குடித்து என் கண்ணீர் முடியும்வரை அடித்துத் துவைக்கும் கணவன்”.



ஒரு தகப்பன்–“இயேசுவே எனக்கு இண்டைக்கு சம்பளநாள். வீட்டுக்குத் தேவையான பொருள்களின் துண்டோடு மனைவி, தண்ணீர், மின்சாரம், தொலைபேசி, கடன்காரர், அடகு வைத்த பொருள், பிள் ளையின்ர நகைக்கு சேர்க்கிற பணம், ரியூசன் காசு, உடுப்பு, விறகு, கோயில் நிதி, ...ம்.....ம்.....ம் எனக்கு வேலைக்குப் போட உடுப்பு அடுத்த சம்பளத்தில தான்.”

ஒரு தொழிலாளி – “ஆண்டவரே இந்த எண்ணெய் விலையில அடுப் பெரிக்கவே கஷ்டமாக இருக்குது. ஒருக்கா கடலுக்குப் போய் வர 100 லீற்றர் எரிபொருள் வேணும். இண்டைக்காவது கொஞ்சம் கருணை காட்டய்யா, எல்லாப் பிரச்சினையும் முடிக்க வேணும். இல்லாவிட்டால் என்ர தொழில் படுத்திடும்”

அன்பானவர்களே! இனி உங்கள் சிலுவைப்பாதை எப்படி? இன்னும் கிழிந்த போர்வையில், ஒருவேளை உணவோடு உங்கள் மத்தியில் பல இயேசு மக்கள்.

அருட். திரு.ஜோசப் செல்வன், செ.தா.

# சர்வதேசத் தலைவர்களுக்கு நன்றி கூறி கனடியத் தமிழர்கள் கடிதங்கள் கையளிப்பு

‘ஜெனிவாவில்’ இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய நாடுகளுக்கு கனடா வாழ் தமிழர்கள் கனடா தலைநகர் ரொரண்டோவில் ஒன்று நன்றியறிதல் கடிதங்களைக் கையளித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒன்று திரண்ட கனடியத் த மிழர் கள் ரொரண்டோவில் அமைந்து வெளிநாட்டுத் தூரதரகங்களுக்குச் சென்று தமது நன்றியைத் தெரிவித்தனர்..

முன்கூட்டியே தொடர்பு கொண்டு சந்திப்புக் கான நேரங்களைப் பெற்றுக் கொண்ட கனடியத் தமிழர் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் அண்மையில் ஜெனிவாவில் இலங் கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த 24 நாடு களில் 15 நாடுகளின் தூது வர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் நாடுகளின் அரச தலைவருக்குஎழுதப்பட்ட கனடியத்தமிழர்களின் நன்றியறிதல் கடிதங் களை நேரடியாகக் கையளித் தனர்.

அந்தக் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட தூதுவர்கள் அது குறித்து பெரு மகிழ்ச்சி தெரிவித்ததுடன் அதனை தமது அரச தலைவருக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது இலங் கையில் மனித உரிமைகள் பொறுப்புக் கூறுதல் நல்லிணக்கம் காணுதல் ஆகிய விட யங்களில் தொடர்ந்தும் காத்திரமாகவும் பொறுப்புணர்வு டனும் நடந்து தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்குமாறு கனடியத் தமிழர்கள் அவர்களை மேலும் கேட்டுள்ளனர். (ந)

# பன்னாலை கனகசபை வித்தியின் ஆண்டு நிறைவு



வலி வடக்கு ஏப்.5 தெல்லிப்பழை பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் 157 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ம ண் ட ப ங் க ள் திறப்பு விழாவும் பரிசளிப் பும் கனகதாரா நூல்வெளியீட்டு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் சி.சிவராஜன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சேவாலங்கா நிறுவன யாழ். மாவட்ட திட்ட இணைப்பாளர் கண்ணன், வலி.வடக்குப் பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் உட்பட விருந்தினர்கள் ஊர்வல மாக அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வில் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரச அதிபர் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து பாடசாலைக் கொடியை அதிபர் ஏற்றி வைத்தார்.

கதிர்காமத்தம்பி மண்டபத்தை சேவாலங்கா நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் கண்ணன் நாடாவெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து கணினி அறையை வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் திறந்து வைக்க மைதான பார்வையாளர் மண்டபத்தை பாடசாலையின் பழைய மாணவனும் கீரி மலை நகுலேஸ்வர ஆலய தர்ம கர்த்தாவு மான ராஜராஜஸ்ரீ நகு லேஸ்வரக்குருக்கள்நாடாவெட்டி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் அமைக் கப்பட்ட கலையரங்கத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடாவெட்டித்திறந்து வைத்தார். (ம-ஸ)



யாழ்ப்பாணம் - மண்கும்பான் - வெள்ளைப்புற்றடி

திருவருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

நந்தன வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012

| கொடியேற்றம் | இரதோற்சவம் | தீர்த்தோற்சவம் |
| --- | --- | --- |
| 05.04.2012 | 13.04.2012 | 14.04.2012 |
| மு.ப.11.00 மணி | மு.ப.10.00 மணி | மு.ப.10.00 மணி |

விழாக்கால நிகழ்வுகள்

05.04.2012 வியாழக்கிழமை :
காலை 7 மணிக்கு காலைப் பூஜை, அபிஷேகம் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நவசக்தி ஆவாஹனம்.
06.04.2012 வெள்ளிக்கிழமை : 2 ஆம் திருவிழா
07.04.2012 சனிக்கிழமை : 3 ஆம் திருவிழா
08.04.2012 ஞாயிற்றுக்கிழமை : 4 ஆம் திருவிழா
09.04.2012 திங்கட்கிழமை : 5 ஆம் திருவிழா - பக்தி முத்தி பாவனோற்சவம்
10.04.2012 செவ்வாய்க்கிழமை :
6 ஆம் திருவிழா - பகல் எழுந்தருளிப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகம் - பஞ்சமுகார்சனை.
11.04.2012 புதன்கிழமை : 7 ஆம் திருவிழா
12.04.2012 வியாழக்கிழமை :
8 ஆம் திருவிழா மாலை 3 மணிக்கு வேட்டைத்திருவிழா, இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழா.
13.04.2012 வெள்ளிக்கிழமை :
9 ஆம் திருவிழா தேர்த்திருவிழா - காலை 6 மணிக்கு காலை பூசையைத் தொடர்ந்து அபிஷேகம் 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை. முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா. மதியம் 1 மணி இரத அவரோகணம்.
14.04.2012 சனிக்கிழமை :
10 ஆம் திருவிழா முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் தொடந்து மஹாயாககும்ப அபிஷேகம். மாலை 5 மணிக்கு சாயரட்சைப் பூசை. வசந்தமண்டபப் பூசை. திருவூஞ்சல், கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம், சிவாச்சாரிய உற்சவம்.
15.04.2012 ஞாயிற்றுக்கிழமை :
முற்பகல் 10 மணியளவில் பிராயச்சித்த அபிஷேகம் - மாலை 4 மணிக்கு வைரவர் பொங்கல் நடைபெற்று திருவிழா நிறைவுபெறும்.

★ உற்சவகாலங்களில் தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்

ஆலய குருமணி
பிரம்மஸ்ரீ பகீரத சர்மா
(தாவடி)

மஹோற்சவ சிவாச்சாரியார்
சிவாகம சாகரர், சிவநெறிச் செம்மல்
சிவஸ்ரீ ப.மு.பாலகுமாரசாமி சிவாச்சார்யார்
(வடகோவை)
(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில்)

குறிப்பு:- அடியார்கள் அபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், பழவகைகள், பூக்கள், பூமாலைகள் என்பவற்றைக் கொடுத்து உதவுவதுடன் திருவிழாக்காலங்களில் சைவப்பண்பு நிகழ் சீலர்களாக வருகை தந்து [illegible]

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

- ஆலய பரிபாலன சபையினரும், விழா உபயகாரர்களும்.

(இ/349) (2-9-6)

மல்லாகம் தெல்லிப்பழை
லயன்ஸ் கழகம்
தையல் பயிற்சி வகுப்புக்கள்

மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பில் பயில விரும்பும் மாணவிகள் எதிர்வரும் 30.04.2012 திங்கட்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தெல்லிப்பழையில் உள்ள எமது லயன்ஸ் கழக அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்கவும்.

துர்க்காபுரம்
தெல்லிப்பழை

(16421))(6-9-8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். HSBC வங்கி முகாமையாளராகக் கடமையாற்றும்

திரு.
அ.சி.அரவிந்தன்
அவர்கள் இன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் M.B.A பட்டம் பெறுவதையிட்டு மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இனி வருங்காலங்களில் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

100, செம்பியபாதம் வீதி,
நல்லூர்.

வாழ்த்துவோர்:
மாமா, மாமி,
மைத்துனர்கள் குடும்பம்.

(16424) (2-9-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபான்ஸ் வருடப் பிறப்பு

நிறையக் கொடுக்கல் - நிறைய வாங்கல்

40 % வரை தள்ளுபடி

41% வரை மின்சாரச் சேமிப்பு

# வாங்கினால் விசேஷம் கையிலே காசு மிச்சம்.



67,900/- ரூபாவிலிருந்து

LG Life's Good

## குளிர்சாதனப் பெட்டிகள்

உங்கள் பணத்தை மிச்சப்படுத்தி இந்தப் புதுவருடத்தில் உங்களை உற்சாகத்தில் ஆழ்த்திடும்

- மிகக் குறைந்த மின் பாவனை
- 40% வரையான தள்ளுபடி

டொலரின் பெறுமதி அதிகரிப்பதனால் பண்டிகைக் காலத்தின் பின்னர் விலை அதிகரிக்கப்படலாம். இந்தப் பண்டிகைக் காலத்தில் மேலதிக சலுகைகளை வழங்கும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு அபான்ஸ் காட்சியறைகளுக்கு இன்றே விரையுங்கள்.

அபான்ஸிலிருந்து பொருளொன்றை கொள்வனவு செய்வதன் மூலம் பணமும் நேரமும் மீதமாகும்.

# நமது காலத்திற்கேற்ற எமது சேமிப்பு நாயகன்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இதில் காட்டப்பட்டுள்ள படம் விளம்பரத்துக்காக மட்டுமே.

REDLIME

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எம்மிடம் உட்புற/வெளிப்புற படப்பிடிப்புக்கான (Video, Photo) சாதனங்கள் உள்ளன. படப்பிடிப்புகளுக்கான ஓடர்களை எடுத்து படப்பிடிப்பு செய்வதற்கு மற்றும் Video, Photo எடுக்க Edit செய்யத்தெரிந்தவர்கள் தேவை. தகுதியுள்ளவர்கள், நம்பிக்கையானவர்கள் தொடர்பு கொள்ளவும். ( ஓடர் எடுத்து படப்பிடிப்பு செய்து Edit செய்வதற்கு கவர்ச்சிகரமான பங்கு வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு :
Rajah Video and Photo, ஏழாலை மத்தி,
T.P : 077 2832504 - ஏழாலை மத்தி
T.P : 075 2782993 - கொக்குவில் மேற்கு,
பருத்தித்துறை, நெல்லியடி

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடலானது எதிர்வரும் 08.04.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணியளவில் கழக மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். அத்துடன் கழக ஸ்தாபகர் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்வதனால் அனைத்து பழைய மாணவர்களையும் கழகத்துடன் தொடர்புடையவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்/ செயலாளர்,**
**வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.**
**வதிரி, கரவெட்டி.**

(16426)(2-7-9)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இராஜேஸ்வரி சுதானந்தராஜா
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் நாகலிங்கம் மாசிலாமணி**
(ஓய்வுபெற்ற இலிகிதர், மண்டைதீவு கிராம சபை)
அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி
**ஆசிரியர் நலன்புரி கழகம்**
*யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.*

(16464)(2-7-6)

## மரண அறிவித்தல்



திருமதி **பாலன் சயிலா**

வராகியம்மன் கோயில்வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இல.1/7, CDI.Apartment, மெனிங் பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலன் சயிலா 01.04.2012 அன்று சுகவீனம் காரணமாகக் காலமானார்.

அன்னார் சிவஞானமலர் - பரராஜசிங்கம் தம்பதியரின் அன்பு மகளும், அருட்பிரகாசன் - கமலா தம்பதியரின் மருமகளும், பாலனின் (பாஸ்கரன்) அன்பு மனைவியும், டர்சிகாவின் அன்புத்தாயும், சிவராஜசிங்கம் (லண்டன்), ஜீவா (ஜேர்மனி), காலஞ்சென்ற தர்மினி மற்றும் விஜயதாரணி, ராஜ்மோகன் (ஜேர்மனி) லாலாநிரஞ்சன் (ஜேர்மனி), சஜித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசோதாஸ் (ஜேர்மனி), சுகந்தி, உதயகுமார் (கனடா), ஜெயகரன் (லண்டன்) மற்றும் ரஞ்சன் (லண்டன்), ஜெயா (பிரான்ஸ்), அமுதா (ஜேர்மனி), லல்லி (ஜேர்மனி), பொபி (ஜேர்மனி), பபி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 05.04.2012 வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: **பாலன் பாஸ்கரன்**
CDI. தொடர்மாடி,வெள்ளவத்தை (கணவர்)

## யாழ்.கலட்டி விநாயகர் ஆலயத்தில் கலச சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்.வண்ணார் பண்ணை கிழக்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பங்குனி உத்தர நன்நாளான இன்று, வியாழக்கிழமை காலை வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு மண்டலாபிஷேக பூர்த்தி விழா இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு விழா ஆரம்பித்து பஞ்சமுக விநாயகரின் மணவாளக் கோல உற்சவமும் தொடர்ந்து சுவாமி வீதி உலாவும் இடம்பெறும் என்று சங்காபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ வ.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்தார். மதியம் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (ஓ)

## தவறிவிட்டது

N.P.WB. 5293 மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஐங்கரன் ஸ்ரோர்ஸ் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்

## வான் விற்பனைக்கு

செல்மொடல் ஹயஸ் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு : 075 0420653

## நாய் விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் மஞ்சள் நிற பெண் நாயும், ஆண், பெண் ஜேர்மன் செப்பேட் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : இல. 57,K.K.S வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

## வாடகைக்குண்டு

சோமசுந்தரம் வீதி, கச்சேரிக்கு அருகில் சகல வசதிகளுடன் ஒரு அறை வாடகைக்குண்டு. படிக்கும், வேலைசெய்யும் ஆண்கள் விரும்பத்தக்கது. (மூன்று பேர் தங்கக் கூடியது) தொடர்பு: 077 5612954

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சனி1.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை நடைபெறுகின்றன
*. S.L.A.S பரீட்சை
*. திட்டமிடல் சேவை
*. வங்கி சார் பரீட்சை
*. கணக்காளர் பரீட்சை
தொடர்பு:075 4164564
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 100/=
★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ R.M.B பாம், பருத்தித்துறை
T.P. NO : 077 6090926

## கணக்காளர் சேவை போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் நடைபெறுகின்றன

சனி, ஞாயிறு : 1.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை
★ இவ்வாரம் சனிக்கிழமை மட்டும்
வளவாளர்கள்
* திரு நாகராசா (ஓய்வு பெற்ற கணக்காளர்)
* தற்போதைய கணக்காளர்
* திரு முகுந்தன் (கணக்கீடு ஆசிரியர்)
* திரு தவசேகர் (உளச்சார்பு)
* திரு தமிழிந்திரன் (கிரகித்தல்)
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரே)

## தவறிவிட்டது

செபமாலை மரியஜெயசீலன் என்பவரது தேசிய அடையாளஅட்டை (650432614V) ஒரு தொகைப்பணம் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் குருநகர் பீச்றோட், சவக்காலைச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு : 021 2221232
077 6106833

## ஒத்து மாறுதல்

தீவக வலயத்தில் கடமை புரியும் நடன ஆசிரியர் யாழ். வலயத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்புகளுக்கு : 077 6622101
077 7291550, 0213215583

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வேம்படி மகளிர் கல்லூரியில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிமூலம் தோற்றி 8 A, B தரச் சித்தி பெற்ற
**செல்வி கீர்த்தனா குமரேஸ்வரன்**
அவர்களை கல்வியில் மேன்மேலும் சித்திபெற்று உயர வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
க.அழகராசா குடும்பம்
(பெரியப்பா)
மறவன்புலோ. (14622) (2-9-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**கபிரியேல்பிள்ளை வளர்மதி**
(B.Ed. Primary)
யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய ஆசிரியை 03.03.2012 செவ்வாய்க்கிழமை தேசிய கல்வி நிறுவகத்தால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கல்வி மாணிப் பட்டமளிப்பு விழாவில் B.Ed. Primary பட்டம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
திருமதி ஜெ.திரவியரத்தினம்,
செல்வி தி.திசோறீற்றா.
தேவவாசா, துன்னாலை மேற்கு, துன்னாலை. (12730) (2-9-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



*பேரம்பலம் மணிவண்ணன் (மணி)*

வாடியடி, பூநகரியை சொந்த இடமாகக் கொண்ட பேரம்பலம் மணிவண்ணன் நேற்று (04.04.2012) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் பூரணம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் நித்தியலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் தேன்மொழியின் (ரதி) அன்புக் கணவரும் யதுசன், கிரிஷன், மதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற யசோத மற்றும் கலீஸ்வரி (ஆசிரியர், பூநகரி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ரவீந்திரன், சிறீமுருகன், சிறிகாந்தன் (நியூ லக்சுமி நகைமாடம், திருநெல்வேலி), அருள்மொழி, கயல்விழி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2012) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. தகனக்கிரியைக்காக பூதவுடல் மட்டுவில் நாடு மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்
மதுஷன் நகை மாடம், பூநகரி.

(16432)(6-7-8)

## வாகனங்கள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - வவுனியா, வவுனியா - யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் 54 இலக்கங்கள் கொண்ட அசோக் லேலண்ட் 7 பஸ்கள், இசுசு லொறி (கன்டர்), உழவு இயந்திரம் (டிரக்டர்), ஓட்டோ, டிப்பர், மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு இருநாள்களும் நேரில் பார்வையிடலாம்.
உரிமையாளர்:- S.ராஜன்,
3 ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.
T.P : 0770781516

(16426)(2-9-7)

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை பஞ்சலிங்கம்**



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பஞ்சலிங்கம் நேற்று (04.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுகுந்தரத்தின் அன்புக் கணவரும், பகீரதன், பகீரதி, பாஸ்கரன், பாமினி, பட்மினி, பராபரன், பன்னீர்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனித்தா, வைகுந்தவாசன், சுபாசினி, நேசராசா, மகேந்திரம், நகுலேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2012) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
ஆலடி லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப் 5

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**முழங்காவில் மகாவித்தியாலயம்**

கு.கதீஸ் 8ஏ,1பி, ந.மிதுஷா 6ஏ,2பி, யோ.தர்சனன் 4ஏ, 3பி,எஸ், ர.விதுஜன் 2ஏ,4பி, 2சி,எஸ், ஆ.சிவகுமார் 2ஏ, 4சி,2எஸ், ஜெ.தர்மிகா 2ஏ,பி, சி,2எஸ், சி.நிதுசன் ஏ,2பி, 2சி, 3எஸ், சு.சுஜிதன் ஏ,பி, 5சி, 2எஸ், இ.ராகுலன் ஏ,பி, 4சி, 2எஸ், உ.சுஜீபன் ஏ,4பி, 2சி, ஜெ.தர்சிகன் ஏ,பி,2சி, 3எஸ், பா.கேதீஸ்வரி ஏ, 2பி, 2சி, 3எஸ், ச.வினோஜா ஏ,பி, 3சி, 2எஸ், ஜெ.விதுஷா ஏ,பி, 2சி, 5எஸ், ஜெ.தனுசிகா ஏ,பி, 2சி, 3எஸ், மணிக்கவாசகர் ஏ,2சி,4எஸ்.

**கிளி/அக்கராயன் ம.வி.**

ச.மேதினா 7ஏ,2பி,சி.டிறிஜன் 7ஏ,பி, மோ.அனுசாழினி 5ஏ,3பி,சி, ச.உஷாந்தன் 3ஏ, 3பி,2சி, சி.ஜினோஜன் 3ஏ, 2பி,3சி,எஸ், ம.போசிகா 3ஏ, 4பி,சி, பா.சர்மிலா 3ஏ,2பி, 3சி, எஸ், அ.அதிஸ்ரா 3ஏ,4பி, சி, எஸ், தி.அகிலன் 2ஏ, 5பி, சி, க.யுவன் 2ஏ,4பி,சி, க.திருசன் 2ஏ,2பி,3சி,எஸ், ச.சந்திரயவிதா 2ஏ,3பி,2சி,எஸ், பு.வினுஜா 2ஏ,பி,2சி,3எஸ், ரா.சுகன்யா 2ஏ,2பி,சி,3எஸ், ப.சுகர்ணா 2ஏ, சி,4எஸ், ஜெ.ரேகா 2ஏ,பி,சி, 4எஸ், ந.குகதீஸ் ஏ,5பி,சி, எஸ், ர.ரஜிந்தன் ஏ, 3பி,3சி,எஸ், த.விஜோ ஏ,சி, 5எஸ், செ.யோகிலன் ஏ,3பி, 3சி,எஸ், த.சஸ்மி ஏ,2பி, சி, 4எஸ், ஜெ.டிலக்சனா ஏ,3பி, 3சி,2எஸ், வி.கமலரஞ்சனி ஏ, 4சி,4எஸ், வி.வினுகா 2ஏ, பி, 2சி,3எஸ், செ.ரஜீனா ஏ, பி,3சி,3எஸ்.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

வி.சர்மினா 9ஏ, சி.தர்மிகா 7ஏ,பி,சி, செ.நீலாம்பரி 5ஏ, 2பி,2சி, கு.தயந்தி 5ஏ,2பி, 2சி, த.லக்சிரியா 5ஏ,2பி,2சி, ப.விதுஷா 5ஏ,3பி,எஸ், யோ.கிருஷாயினி 4ஏ,4பி,சி, க.சங்குலக்ஷ்மி 4ஏ,3சி, 2எஸ்.

**கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி**

இ.அபர்ணன் 8ஏ,சி, ஈ.தர்சினி 7ஏ,பி,சி, சி.ராக வேந்தன் 6ஏ,2பி,சி, சி.சக்தி 6ஏ,2பி, சி, த.கஜீபன் 6ஏ,2சி, எஸ், கு.அஜந்தா 5ஏ,2பி,சி, எஸ், கு.மதுஷன் 5ஏ,2பி, சி,எஸ், ந.வினோகாந்தன் 4ஏ,4பி,எஸ்.

**இமையாணன் அ.த.க.வித்தியாலயம்**

செ.கீர்த்தனா 9ஏ, சி.கார்த்திகாயன் 7ஏ,பி,சி, தெ.மிகிந்தா 4ஏ,4பி,சி, சி.லஜிதா 3ஏ, 5சி, எஸ், செ.லோசி 2ஏ, 3பி, சி,3எஸ், க.தனுசியா 2ஏ, 2பி,5எஸ், ஜெ.சகானா ஏ, 3பி,சி,4எஸ், சி.ரகுமாறன் ஏ,பி,4சி,2எஸ், க.சாகித்யன் ஏ,பி,2சி,5எஸ், ப.பிருந்தன் ஏ,5சி,3எஸ், கோ.இந்திரராசா ஏ,4சி,3எஸ், செ.வக்சனா ஏ, 4சி,3எஸ், கு.தனுசியா ஏ,3சி, 4எஸ், கு.பாசுகி ஏ, 2சி,4எஸ், த.இந்துஜா ஏ, 2சி,3எஸ், க.வசீகரன் பி,3சி, 3எஸ், றோ.பில்பிறிக்சன் பி, 3சி,3எஸ்.

**வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்**

த.தேனுஜா 6 ஏ 2பி சி, து.லோஜினி 5ஏ 2பி 2 எஸ், து.சுஜிதா 3ஏ 3பி சி 2எஸ், அ.கஜீபன் 3ஏ 2பி 2சி எஸ், உ.கௌரிகா 2ஏ பி 2சி 3எஸ், நா.பிறின்சிகா ஏபி 5சி 2எஸ், ஜெ.விவுஷா ஏ 2பி 4சி 2எஸ், த.வைஷ்ணவி ஏ 2பி 4சி எஸ், இ.சிந்துஜன் ஏ 3சி 3எஸ், யோ.சுதாமன் ஏ பி 2சி 4எஸ், ம.பிரியந்தி ஏ 2சி 4 எஸ் தே.பிரியங்கி ஏ 3சி 4 எஸ், இ.சுஞ்சிகா ஏ பி 2சி 3எஸ், ந.அபினயா ஏ 2சி 2எஸ், மு.வேணுஜா ஏ 2சி 2எஸ், கு.பிரதீபா -ஏபி 4எஸ்.

**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

வே.கிருஸ்ணவி 4ஏ பி 3 சி எஸ், தே.டொன்சியா 2ஏ 2பி 4 சி எஸ், தே.தேவறம்மியா 2ஏ பி 2சி 4எஸ், வி.றெகான்சியா ஏ 3சி 5 எஸ், பூ.லக்சியா ஏ 2பி 2சி 2எஸ், தி.கிருத்தியா 2ஏ 2பி 2சி 2எஸ், ற.தாட்சாயினி ஏ 2சி 5எஸ்,அ. நிலுசா ஏ 3சி 4எஸ்,ச.பிரியசாந்தி ஏ 2பி 5எஸ், நா.றெனிகா ஏ பி 2சி 3எஸ், ப.குகமயூரி ஏ பி 2சி 5எஸ்.

(வ-405-253)

# செயற்றிட்ட நிகழ்வு

சாவகச்சேரி,ஏப்.5

சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி பொது நூலக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொது நூலகங்களின் தரம் சார் நிலைமையை மேலும் அபிவிருத்தி செய்து வாசிப்பு மற்றும் தகவல் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்களை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையால் கொள்வனவு செய்யப்பட்ட கணினித் தொகுதி நூலகத்திற்கு கையளிக்கப்படவுள்ளது. தொடர்ந்து முப்பரிமாண நூலக செயற்பாடுகள் ஆரம்பித்தல், அறிவியல் உலகம் என்னும் தொகுப்பு வெளியீடு செய்தல், முன்பள்ளி மாணவர்களுக்கான கதை வேளை நிகழ்வு ஆரம்பித்தல், முன்பள்ளி மாணவர்களுக்கான சிறுவர் தொடர்பான படக்காட்சி காண்பித்தல், முன்பள்ளி மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையான செயற்பாடுகள் நடத்துதல், இறுதியாக முன்பள்ளி மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன. (வ-131)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப் 5

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 13 திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ-14)

* * *

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை வேட் டைத்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும் இடம்பெறும். (வ-14)

* * *

சுன்னாகம், கந்தரோடை ஆலடிப்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பகால கிரியைகள் நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறன. இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும். மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (வ-14)

* * *

யாழ்.அத்தியடி பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன. எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-14)

* * *

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகி திருவிழா இடம் பெற்று வருகின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். (வ-14 )

* * *

நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தின் தீர்த்தத்திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் பெருந் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (வ-14)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

பங்குனி 24 வெள்ளிக்கிழமை 06.04.2012
திதி: பூரணை பி.இ 01.45 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ 01.36 வரை
சுபநேரம்: 06.08- 07.38 வரை
ராகு காலம்: 10.38-12.08 வரை

**மேடம்:** இன்று சிறு சிறு தடங்கல்களுக்கு பின் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். சில வருமானங்கள் உறுதியானாலும், கைக்கு வருவதற்குள் மனதில் அதிகப்படியான போராட்டங்கள் நிலவும். உடன்பிறப்பின் விவகாரங்களுக்காக பயணம் மேற்கொள்வீர்கள். மாலையில் மன அமைதிக்காக, தெய்வ வழிபாடுகளை செய்வீர்கள்.

**இடபம்:** இன்று நார்மலான பணிகள் என்றாலும், பெரிய மலைப்பாக இருக்கும். வீட்டுக் காரியம் ஒன்றை செய்ய மறுத்து, அதனால் இல்லறத் துணையின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில் ரீதியாக நெருக்கடிகளை சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். அலுவலகத்தில், சக ஊழியர்களிடம் பொறுமையாகப் பேசுவது நல்லது, வாகன வகையில் மாற்றங்களை செய்வீர்கள்.

**மிதுனம்:** இன்று தங்கள் மனதில் நம்பிக்கை கூடும். ஏற்ற பணிகளை உரிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். சில காரியங்களுக்காக பண ஏற்பாடு செய்வதில் தீவிரம் காட்டுவீர்கள். அலுவலகப் பணியில் சில கோப்புகளை உடனடியாக முடிக்க வேண்டிய நிலை ஏற்படும். தொழில் வகையில் புதிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்வீர்கள்.

**கடகம்:** இன்று தங்களின், தேவையற்ற சிந்தனை மற்றும் எண்ணங்களால் வீண் செலவுகள் ஏற்படும். வீட்டில் தாங்கள் காரணமற்ற கோபம் கொண்டாலும், சில நிமிடங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவீர்கள். தொழிலில் கவனம் இருக்கட்டும். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடாதீர்கள். வரவுகள் தாமதப்படும்.

**சிங்கம்:** இன்று எதிர்பார்த்த பணவரவு ஒன்று தாமதமாகும். குழந்தைகளின் விவகாரங்களுக்காக அலைச்சல் இருக்கும். தொழிலில், அவசரமாக ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியில் தெரிந்தே தவறுகளைச் செய்வீர்கள். கவனம். மாலையில் நண்பரின் சந்திப்பு மன மகிழ்ச்சியை தரும்.

**கன்னி:** இன்று சில பணிகளை முடிப்பதில் தீவிரம் காட்டினாலும், தடை, தாமதங்கள் குறுக்கிடலாம். ராசிக்கு சூரியனின் பார்வை இருப்பதால், எந்த ஒரு செயலும் முன்னுக்கு பின் முரண் இருக்கும். அடிக்கடி எரிச்சல் ஏற்படும். மனதை ஒரு நிலைப்படுத்தி செயற்படுங்கள்.

**துலாம்:** தங்களின் எண்ணங்கள் மற்றும் அணுகுமுறையால், மற்றவர்களின் பாராட்டு பெறுவீர்கள். குடும்ப சம்பந்தப்பட்ட காரியம் ஒன்றை சாமர்த்தியமாகச் செய்வீர்கள். அலுவலகப் பணியாளர்கள் பணியில் விழிப்போடு செயற்படுதல் அவசியம். வியாபாரிகள் புதிய வியூகத்தால் லாபம் கூடுதல் காண்பர்.

**விருச்சிகம்:** இன்று துணிச்சலான மன நிறைவோடு காரியங்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். முக்கிய நபரின் சந்திப்பு சில காரியங்களை எளிதாக முடிக்க ஏதுவாகும். அலுவலகப் பணிகளில் தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வீட்டுச் செலவுக்கு வைத்த பணம் வேறு வழியில் செலவாகும்.

**தனுசு:** தாமதமாக செயற்பட்ட காரியங்கள் நன்மைக்கே என்று எண்ணும்படியாக இருக்கும். செலவுகளுக்கு தகுந்த வரவு வரும். மனைவியின் ஆலோசனைகளால் பயன் இருக்கும். அலுவலகப் பணிகளில் சலுகைகளுக்கான அறிகுறியும், தொழிலில் வளர்ச்சியும் காணப்படும்.

**மகரம்:** சரியான திட்டத்தோடு, ஒவ்வொரு காரியங்களில் செயற்பட்டாலும் தடை, தாமதங்கள் தவிர்க்க முடியாது. குடும்பத்தில், எந்த விடயத்தையும் அமைதியாகக் கையாளுங்கள். தொழில் வகையில், சற்று அலைச்சலும் எதிர்பார்த்த லாபமும் வரும். உறவினர், ஒருவருக்கு உதவி செய்வதாக வாக்கு கொடுப்பீர்கள். உடல் நிலையில் சற்று கவனம் தேவை.

**கும்பம்:** இன்றைய பணிகளில் சற்று போராட்டமான சூழ்நிலை இருந்தாலும், தொடர்ந்த முயற்சியால் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் அவசரத்திற்காக வாக்குக் கொடுப்பதை தவிருங்கள். உரிய நேரத்தில் உணவு எடுங்கள். அலுவலகப் பணியாளர்களிடம் வேடிக்கையான பேச்சுக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்

**மீனம்:** மாற்று யோசனைகளால் காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வீட்டிலும், வெளியிடங்களிலும் உடனே மறுத்துப் பேசுவதைத் தவிருங்கள். உடல் நிலையில் சோர்வுகள் ஏற்பட்டு விலகும். கணிசமான வருமானம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | 2 | | 3 |
| | | 9 | | | 4 | | | |
| 6 | 3 | | | 7 | | | 8 | |
| 1 | | | | | 9 | 3 | 2 | 4 |
| 8 | 4 | 5 | 7 | | 3 | 9 | 6 | 1 |
| 3 | 9 | 2 | 6 | | | | | 5 |
| | 2 | | | 6 | | | 1 | 8 |
| | | | 3 | | | 7 | | |
| 9 | | 7 | | | 2 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 9 | 5 | 8 | 2 | 6 | 1 | 7 |
| 7 | 6 | 1 | 3 | 4 | 9 | 5 | 8 | 2 |
| 2 | 8 | 5 | 1 | 7 | 6 | 3 | 4 | 9 |
| 4 | 2 | 7 | 8 | 6 | 3 | 1 | 9 | 5 |
| 5 | 9 | 6 | 4 | 1 | 7 | 8 | 2 | 3 |
| 1 | 3 | 8 | 2 | 9 | 5 | 4 | 7 | 6 |
| 8 | 5 | 3 | 7 | 2 | 4 | 9 | 6 | 1 |
| 6 | 1 | 2 | 9 | 5 | 8 | 7 | 3 | 4 |
| 9 | 7 | 4 | 6 | 3 | 1 | 2 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சைவ சமய அறிவுப் பரீட்சை

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தால் நடத்தப்படும் சைவசமய அறிவுப் பரீட்சை, செயல் முறைப்பரீட்சை என்பன ஜூலை மாதம் நடைபெறும் என்று பரீட்சை செயலாளர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL, CHANKANAI**

**பெற்றோர் கவனத்துக்கு,**

BUTTERFLY INTERNATIONAL SCHOOL லில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின் விபத்து காரணமாக பாடசாலை நடவடிக்கைகளில் எவ்விதமான மாற்றமும் ஏற்படமாட்டாது. குறித்த திகதியில் பாடசாலை ஆரம்பமாகும். செயற்பாடுகள் அனைத்தும் வழமைபோல் நடைபெறும்.

**B.I.S. நிர்வாகம்.**

(16427)(2-7-4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**நாகராசா மகேந்திரராசா**
Slps III B.Ed (Sci)
அதிபர் யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை



03.04.2012 இல் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டம் பெற்ற எங்கள் அதிபர் நா.மகேந்திரராசா அவர்களை வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, நீர்வேலி.

**அறிவித்தல்**
**இலங்கை வங்கி**
**அதிமேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்**

BOC

அரச வங்கியாகிய இலங்கை வங்கி எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி அவர்களுக்காக பாதுகாப்பு பெட்டகங்களை (Safety Lockers) வழங்கி வருகின்றது. உங்களது பெறுமதிமிக்க ஆபரணங்களையோ, ஆவணங்களையோ வங்கியிலே பாதுகாப்பாக வைத்து தேவையான போது எடுக்கவும், திரும்ப வைத்துக் கொள்ளவும் இப்பாதுகாப்புபெட்டகங்களைப் பாவித்துக்கொள்ளமுடியும்.

இன்றே உங்களுக்கென்று ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தைப் பெற்று அரச வங்கியாகிய இலங்கை வங்கி மூலம் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு
முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்

பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி
அதி மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது நண்பன்
மயூரன் (S.Lon. Sales Rep.) அவர்களின் பாசமிகு
பேர்த்தி
திருமதி
இராணி
இராமச்சந்திரன்
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைவதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

No. 23/1, 4th Lane,
Brown road,
Jaffna.

S.Lon Lanka (Pvt) Ltd.
Kevilton Elactrical Product (Pvt) Ltd.
PE+ (Pvt) Ltd.

## அங்கஜனின் செயலர் கைதானார் நேற்று

யாழ்ப்பாணம், ஏப் 05

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேகச் செயலாளராகப் பணியாற்றிய ஒருவர் நேற்றைய தினம் பண மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த ஆத்மராஜா சாயிசீசன் (வயது-27) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த சந்தேகநபர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, பல இளைஞர், யுவதிகளிடம் பெருமளவு பணத்தினைப் பெற்று மோசடி செய்தார் என்று பாதிக்கப்பட்ட சிலர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து அரியாலையில் பொலிஸார் நேற்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சாயிசீசன் கைது செய்யப்பட்டார்.

பலருக்கு பல்வேறு பதவிகளையும், நியமனங்களையும் பெற்றுத்தருவதாக ஆசைவார்த்தை காட்டிய குறித்த சந்தேகநபர் பலரிடம் பணத்தைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

இதனால் பாதிக்கப்பட்ட பலர் தாம் மோசடியால் ஏமாற்றப்பட்டது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் சந்தேகநபர் பொலிஸாரிடம் சிக்கவேயில்லை.

இவர் கொழும்பு போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக தலைமறைவாகி வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் அவர் அரியாலையில் உள்ள வீட்டில் பதுங்கியிருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் தற்போது யாழ்.'பொலிஸாரின் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ங-15-3)

## விளையாட்டு விழா

மயிலணி ஜனசக்தி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மயிலணி அன்னமகேஸ்வரர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் இரா. ஜெயக்குமார் மற்றும் திருமதி ஜெயக்குமார் இந்திராதேவி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ங-15)

**அகரம்**
கல்வி நிலையம்
மல்லாகம்
யாழ்குடாநாட்டின் முன்னணி
ஆசிரியர்களின் ஒருங்கிணைப்புடனான
கற்பித்தற் சேவை
அன்பான மாணவர்களே!
அகரம்
உங்கள் சாதனைப்பயணத்தின் ஆரம்பம்
இணைவோம் வெல்வோம்

இரண்டாம் தவணைக்கான வகுப்புக்கள்
வழமையான நேர அட்டவணைக்கு அமைவாக
இன்று முதல் ஆரம்பமாகின்றன

**தையல் வேலைக்கு ஆள்கள் தேவை**

"வைஷ்ணவி ரெயிலர்ஸ்"
219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
**0777297526, 0775438610**
(ஆண்கள் மட்டும்)

**Personal Class**

தரம் 3- A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar ( No age limit) கற்க விரும்புவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதி மட்டுப் படுத்தப்பட்டவை)
தொடர்பு : பலாலி Road, கந்தர்மடம்
T.P : 077 8361521 (பிரபல ஆசிரியர்)

**நாஹா மருத்துவ நிலையம்**

கடுமையாக எலும்புகள் பாதிப் புற்றவாதம், அல்சர், மூட்டு, தீராத புண்கள், குழந்தையில்லா கர்ப்பப்பை நோய்க்கான சாதனை புரியும் மருந்தியல் ... ம் : 8.30 - 2 Pm
T.P : 077 3212140
சந்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெயபாநிவேடு), மானிப்பாய்

## நாவலர் வீதிக்கு 'காப்பெற்' அளவீட்டுப் பணி ஆரம்பம்

கொழும்புத்துறை,ஏப்.5

நாவலர் வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றி அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட மிக நீண்ட வீதி இதுவாகும். சுமார் 5 கிலோ மீற்றர் தூரமுடைய இந்த வீதியை 'காப்பெற்' கொண்டு அமைப்பதற்குரிய ஆரம்ப அளவீட்டுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் 'காப்பெற்' வீதியை அறிமுகம் செய்யும் ஆரம்ப நிகழ்வு கடந்த வருடம் கைலாச பிள்ளையார் கோயிலடியில் இடம் பெற்றபோதும் இப்போது தான் முழுவீதியையும் புனரமைக்கும் பணிகள் ஆரம் பிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-135)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் தம்பிராசா



(வேம்படி, காரைநகர்)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், காரைநகர் வேம்படியில் வசித்தவரும், பசறை பிரபல வர்த்தகருமான ஆறுமுகம் தம்பிராசா நேற்று (04.04.2012) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-காமாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், திருவாதிரை, இராமநாதன், சோமசுந்தரம், கணேசன், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார், உதயகுமாரி, வசந்தகுமாரி, காலஞ்சென்ற கிருஸ்ணகுமாரி, சாந்தகுமாரி, சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

98, Upper Humber Drive,
EtoBicko 1,
Ontario, Canada.

தகவல்:
த.உதயகுமார் (மகன்).

### திருமதி பாக்கியலட்சுமி கோபாலபிள்ளை

(நயினாதீவு)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி கோபாலபிள்ளை நேற்று முன்தினம் (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசம்பு தம்பதியரின் மகளும், நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராசா, பரமசாமி, பத்மநாதன், குணரட்ணம் மற்றும் பழனிவேலு, சோதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாமதாசன் (ஓய்வுநிலை, இலங்கை மின்சாரசபை), வல்லிபுரம் (பிரான்ஸ்), உருத்திராம்பாள், அம்பிகைபாலன் (யா/நயினாதீவு கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்), சிவகடாட்சம் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்), திரிபுராம்பாள் (தில்லா) (யா/நாவந்துறை றோ.க. வித்தியாலயம்), ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும், நாகலெட்சுமி, சிதம்பரேஸ்வரி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), நிர்மலாதேவி (யா/பெரியபுலம் மகா வித்தியாலம்), பத்மமலர் (யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), காலஞ்சென்ற ருத்திரலிங்கம் மற்றும் இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவாகளான சபாரெத்தினம், இராசையா, சிவக்கொழுந்து, இராசம்மா மற்றும் கணபதிப்பிள்ளை (கனடா), காராளபிள்ளை, கனகம்மா (கனடா), லீலாவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி, ஜெயலட்சுமி, சிவனேசரத்தினம் மற்றும் காலஞ்சென்ற மாசிலாமணி ஆகியோரின் மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
ஆ.சி.பழனிவேல் (சகோதரன்),
கோ.வாமதாசன் (மகன்).

### சிவசுப்பிரமணிய ஐயர் சிவராசா



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், இருபாலையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட (உரிமையாளர்-சித்திரகலா ஸ்ரூடியோ, சுன்னாகம்) சிவசுப்பிரமணிய ஐயர் சிவராசா நேற்று முன்தினம் (03.04.2012) செவ்வாய்க்கிழமை சிவபேறு எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணிய ஐயர் மற்றும் நாகம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், கமலாம்பாளின் அன்புக் கணவரும், பிரணவன் (கொழும்பு), துர்க்காயினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிஸ்வரனின் அன்பு மாமனும், மதுரபாசினியின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம்-சிவயோகநாயகி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2012) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் இருபாலையிலுள்ள ஆனந்தகிரி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தகிரி
கர்ப்பகப்பிள்ளையார் கோயிலடி,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனா - ஸ்கந்தா துடுப்பாட்ட அணிகள் மோதும்

# வீரர்களின் போர் நாளை



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலமாக)


க.கபிலன் (உதவி பயிற்றுநர்), இ.சிறிதரன் ( பயிற்றுநர்), சு.அஜித்( அணித்தலைவர்), கு.வேல்சிவானந்தன்(அதிபர்), ர.மதுசன் (உதவிஅணித்தலைவர்), க.மயில்வாகனம்(விளையாட்டுதுறை முதல்வர்)

முதல்வரிசையில் நிற்போர் (இடமிருந்துவலமாக)

த.நிமல்ராஜ் கி.திலக்சன் த.கஜேந்திரன் ஜெ.பிரணவன் அ.பிரசாந் ச.ரமேஸ்குமார் த.சாரங்கன்

2ஆம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)

ஜெ.பிரதீபன் சி.டிலக்ஷ்சன்-ஜெ.ஜனந்தன் ம.துவாரகன் க.பிரராஜ் த.சுபதீபன் த.டிலோசன்



அமர்ந்திருப்போர் விவரம்:(இடமிருந்து வலமாக)

தி.கோவ்சிகன் (பயிற்றுநர்), திருமதி சா.நாகராசா (உபஅதிபர்), த.சிவகுமார் (விளையாட்டுத்துறைமுதல்வர்), சி.சஞ்சயன் (அணித்தலைவர்), கலாநிதி ஆறு திருமுருகன் (அதிபர்), தே.சிந்துஜன் (உபஅணித்தலைவர்), த.தவராஜா (பிரதிஅதிபர்), க.கஜேந்திரன் (அணிப் பொறுப்பாசிரியர்)

நிற்போர் (இடமிருந்துவலமாக):

க.கதியோன், ப.சுஜிதரன், ல.குமுதன், கே.றொபேட்றிசாந், கே.சஜந்தன், கே.பிரசாத், சி.கோபிநாத், த.நிறோஜன், க.துவிசன், ச.செந்தூரன், க.துவாரகன், க.நிலக்சன், கெ.பிரதீப்சங்கர்

வலி.வடக்கு ஏப்.5

'வீரர்களின்போர்' என வர்ணிக்கப்படும், தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரிக் கும் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக கல்லூரிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி பாடசாலைகளின் விடுமுறையைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. நாளை யும் நாளை மறுதினமும் என இரு நாள்களைக் கொண்ட தாக இந்தப் போட்டி சுன் னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற பதினொரு போட்டிகளில் மகாஜனக் கல்லூரி இரண்டு போட்டிகளிலும், ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மூன்று போட்டிகளிலும் வெற்றி யீட்டியுள்ளன.

இந்த நிலையில் வீரர்க ளின் போரின் 12ஆவது போட்டி மிகவும் அமைதி யான முறையில் நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஏற்க னவே இடம் பெற்ற 'பெரும் துடுப்பாட்டப் போட்டிகளில்' குறித்த ஒரு சில பாடசாலை மாணவர்களின் நடவடிக்கை களினால் பொது மக்களும் ஏனைய பாடசாலைகளும் பெரும் சீற்றம் கொண்டுள்ள தாலேயே வீரர்களின் 12ஆவது போரை மிக எளிமையாக நடத்த இரு கல்லூரி அதிபர் களும் முடிவு செய்துள்ளனர். எனவே வீரர்களின் போர் நடைபெறும் காலத்தில் மாணவர்கள் வீதிக்கு வீதி நின்று கூச்சல் குழப்பங்கள் ஆட்டம் பாட்டம் என்று அநாவசியமான நடவடிக் கையில் ஈடுபடாமல் மைதா னத்தில் மட்டுமே தமது அணிகளை உற்சாகக் குரல் எழுப்பி ஊக்கப்படுத்த உள் ளனர்.

12ஆவது வீரர்களின் போரில் மோதிக் கொள்ளப் போகும் ஸ்கந்தா, மகாஜனா அணிகளைப் பொறுத்த வரையில் இரு அணிகளும் சம நிலையில் காணப்படு கின்றன. இதனை கடந்த காலங்களில் நடைபெற்ற போட்டிகளின் மூலம் உண ரக் கூடியதாக உள்ளது. எனவே இரு அணிகளும் 12ஆவது போட்டியில் வெற்றி யைப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் இறுதி வரை போராடக் கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அதற் கேற்றால் போல் இரு அணி களும் கடுமையான பயிற்சி களை மேற்கொண்டு வரு கின்றன. அத்துடன் பயிற்சி ஆட்டங்களிலும் ஈடுபட்டு தமது திறமையை வளர்க்க முனைகின்றனர்.

இந்த முறை மகாஜனக் கல்லூரி ச.அஜித் தலை மையில் களமிறங்குகின்றது. இவர் ஒரு சகலதுறை வீரர். இடதுக்கைத் துடுப்பாட்ட வீரரான இவர் எதிரணியின் இலக்குகளைச் சாய்க்கும் சிறந்த சுழல் பந்து வீச்சாள ராகவும் விளங்குகிறார்.

மகாஜனா அணி சிறந்த பந்து வீச்சாளர்கள் ஆறு பேரைக்கொண்டுள்ளது. இதேவேளை மூன்று இடது கைத்துடுப்பாட்ட வீரர்கள் மூவர் அந்த அணியில் இருப் பது ஒரு சிறப்பம்சம். இத னால் எதிரணியினர் களத் தடுப்பு வியூகங்களை அடிக் கடி மாற்றியமைக்க வேண் டிய நிலை ஏற்படும். இதன் மூலம் ஓட்டங்களை குவிக் கும் வாய்ப்பு மகாஜனா அணிக்கு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் கடந்த போட்டி களில் 50 க்கு மேற்பட்ட ஓட்டங்களைக் கடந்த வீரர் களையும், சதம் அடித்துக் கலக்கிய வீரர்களையும் மகா ஜனா கொண்டுள்ளது.

மகாஜனாவுக்கு எந்த விதத்திலும் நாங்கள் சளைத் தவர்கள் அல்ல என்று மார் தட்டிக்கொள்ளும் நிலையில் [illegible] ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் உள்ளது.

ஸ்கந்தா அணி இந்த முறை எஸ்.சஞ்சஜன் தலை மையில் வீரர்களின் போரில் விளையாடவுள்ளது. இவரும் ஒரு சகலதுறை ஆட்டக் காரர். துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் மகாஜனா வுக்கு நிகரான வல்லமை கொண்ட வீரர்கள் ஸ்கந்தா விலும் இருக்கிறார்கள்.

இந்த அணியில் வேகப் பந்து வீச்சாளர்கள், சுழல் பந்து வீச்சாளர்கள் மற்றும் இடது கைத் துடுப்பாட்ட வீரர்கள் என்போர் ஸ்கந்தா அணியிலும் உண்டு.

எனவே சம பலமிக்க அணிகள் மோதும் போட்டி என்பதால் முடிவு என்ன என் பதை அனுமானிப்பது கடின மாகவே இருக்கும். ஆட்டத் தின் கடைசி நிமிடமே வெற்றி யாளரைத் தீர்மானிக்கும் எனக் கருதப்படுகிறது. அத் துடன் வீரர்களின் போரின்

இரு அணிகளினதும் துடுப்பாட்டம் இறுதி வரை விறுவிறுப்பாக அமையும் என்று துடுப்பாட்ட ரசிகர்கள் குறித்த போட்டிக்காக இப் போது காத்திருக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வரையில் இரு அணிகளும் களத்தில் ஆக்ரோஷமாக மோதி இறுதி வரை பார்வை [illegible] திகட்டாத விருந்து அளிக்குமா என்பது நாளை மறுதினமே தெரிய வரும். (ங-86)

## ஊர்காவற்றுறை கோட்ட மெய்வன்மை முடிவுகள்

19 வயது ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் ஏ.எமில்சன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2ஆம் இடம் ஜே.வினோத் குமார் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்

3ஆம் இடம் பி.கனிஸ் ரன் - கரம்பொன் சண்முகா னந்த வித்தி

200 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் ஏ.எமில்சன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2ஆம் இடம் ஜே.வினோத் குமார் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்

400 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் ஏ.எமில்சன் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2ஆம் இடம் ஜே.ஜெசிந் தன் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்

800 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் கே.குண ராஜ் - ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.

2ஆம் இடம் எஸ்.பிரதீ பன் - அனலைதீவு சதாசிவ வித்தி

3ஆம் இடம் ஏ.அனிஸ் ரன் - நாரந்தனை றோ.க. த.க.

1500 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் கே.குண ராஜ் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2ஆம் இடம் ஆர்.சுதர்சன் - கரம்பொன் சண்முகானந்த வித்தி.

3ஆம் இடம் ஏ.அனிஸ் ரன் - நாரந்தனை றோ.க. த.க.

5000 மீற்றர் ஓட்டம்

1ஆம் இடம் கே.குண ராஜ் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

ஈட்டி எறிதல்

1 ஆம் இடம்- அனோல்ட் சரண்சன் - ஊர்காவற்றுறை சென்.அன் ரனீஸ்.

2 ஆம் இடம்- கே.விஜிந் தரன் - ஊர்காவற்றுறை சென்.அன் ரனீஸ்.

4x 100 அஞ்சலோட்டம்

1 ஆம் இடம்- ஊர்காவற் றுறை சென்.அன்ரனீஸ்.

2 ஆம் இடம் - நாரந் தனை றோ.க.த.க.

4x 400 அஞ்சலோட்டம்

1 ஆம் இடம்- ஊர்காவற் றுறை சென்.அன்ரனீஸ்.

2 ஆம் இடம் - நாரந் தனை றே.க.த.க.

முப்பாய்ச்சல்

1 ஆம் இடம்- எஸ்.றெமில் டன் - ஊர்காவற்றுறை சென்.அன் ரனீஸ்.

2 ஆம் இடம்- கே.விஜிந் தரன் - ஊர்காவற்றுறை சென்.அன் ரனீஸ்.

உயரம் பாய்தல்

1ஆம் இடம் எஸ்.றெமில் டன் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2ஆம் இடம் ஜெ.சுபை சன் - நாரந்தனை றோ.க.த.க.

3ஆம் இடம் அனோல்ட் சரண்சன் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

நீளம் பாய்தல்

1ஆம் இடம் எஸ்.றெமில் டன் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2ஆம் இடம் அன்ரனி நிரோஜன் - ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

3ஆம் இடம் எஸ்.பிரதீ பன் - அனலை தீவு சதாசிவ வித்தி.

(தொடரும்)

## வெல்லுங்கள் ரூ. 5,000/=

### உங்களுக்கான கேள்வி இதுதான்...

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12ஆவது "வீரர்களின் போரில்" வெற்றிபெறும் அணி எது?

- சரியான விடையை கீழே பிரசுரமாகும் கூப்பனில் எழுதி மகாஜனாக் கல்லூரி மைதானம், ஸ்கந்தாக் கல்லூரி, உதயன் அலுவலகம் ஆகிய இடங்களில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுங்கள்.
- விடைகளை ஏப்ரல் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் பெட்டிகளில் இடவேண்டும். அதற்குப் பின்னர் வரும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- சரியான விடை அளிப்பவர்களில் இருந்து வெற்றியாளர் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு ரூபா.5,000/= பணப்பரிசு வழங்கப்படும்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பனில் எழுதப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

உதயன்

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12 ஆவது "வீரர்களின் போரில்" வெற்றி பெறும் அணி எது?

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புமா இலங்கை?



முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி ஸ்ரோரஸ், குக் இருவரதும் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலமாக நேற்றைய நாள் முடிவில் மிகச் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. இலங்கை அணி நேற்றைய நாளில் 37 ஓட்டங்களை மாத்திரம் மேலதிகமாகப் பெற்ற நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து அணி விளையாடி வருகின்றது. காலியில் இடம் பெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேர நிறைவில் 6 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்தது. களத்தில் மத்தியூஸ் 41, ரந்தீவ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து இருவரும் இங்கிலாந்தின் பந்து வீச்சுக்கு மட்டை போட்டனர். மிக நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தது இந்த ஜோடி. மத்தியூஸ் 142 பந்துகளில் தனது 8 ஆவது அரைச் சதத்தைக் கடந்தார். அணி 258 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரந்தீவின் இலக்குச் சரிக்கப்பட இலங்கையின் ஆட்டம் முடிவுக் கட்டத்தை எட்டத் தொடங்கியது.

ரந்தீவை தொடர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த மத்தியூஸூம் ஆட்டமிழக்க இலங்கையின் பின் வரிசை வீரர்கள் களத்தினுள் புகுவதும் வெளியேறுவதாகவும் இருக்க இலங்கையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 275 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் ஸ்ரோரஸ், குக் ஜோடி மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கியது. இலங்கையின் பந்து வீச்சை சமாளித்து இலகுவாக ஓட்டங்களைக் குவித்தது இந்த ஜோடி. ஸ்ரோரஸ் 105 பந்துகளில் 27 ஆவது அரைச் சதத்தையும், குக் 164 பந்துகளில் 28 ஆவது அரைச் சதத்தையும் கடந்தனர். மிகச் சிறப்பாக முதலாவது இலக்குக்காக 100 ஓட்டங்களைக் கடந்த நிலையிலேயே இலங்கையின் பகுதி நேரப் பந்து வீச்சாளரான டில்ஷானினால் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது.

இறுதி வரையில் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் கலக்கிய ஹேரத் எந்தவொரு இலக்கினையும் கைப்பற்றவில்லை. ஆட்டநேர நிறைவில் இங்கிலாந்து அணி 66 பந்து பரிமாற்றங்களில் 154 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை இழந்துள்ளது. களத்தில் குக் 77, ரொரட் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். இன்று ஆட்டத்தின் மூன்றாவது நாளாகும். (5)



இலங்கை எதிர் இங்கிலாந்து

இலங்கை 275/10 இங்கிலாந்து 154/1

கொழும்பு
மைதானம்

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | lbw b அண்டர்சன் | 8 | 26 | 1 | 0 |
| டில்ஷான் | c பிரையர் b அண்டர்சன் | 14 | 16 | 3 | 0 |
| சங்ககார | c ஸ்ட்ரோஸ் b அண்டர்சன் | 0 | 1 | 0 | 0 |
| மஹேல | lbw b சுவான் | 105 | 216 | 11 | 1 |
| சமரவீர | lbw b பிரஸ்னன் | 54 | 129 | 5 | 0 |
| மத்தியூஸ் | c ஸ்ட்ரோஸ் b சுவான் | 57 | 157 | 6 | 0 |
| பிரசன்ன ஜெயவர்த்தன | c பிரையர் b பின் | 7 | 19 | 1 | 0 |
| ரந்தீவ் | c பீற்றர்சன் b சுவான் | 12 | 52 | 1 | 0 |
| தம்மிக பிரசாத் | (ஆட்டமிழக்காமல்) | 12 | 30 | 2 | 0 |
| ஹேரத் | c பிரையர் b பிரஸ்னன் | 2 | 19 | 0 | 0 |
| லக்மால் | b சுவான் | 0 | 2 | 0 | 0 |

இலக்கு இழப்பு: 1-21, 2-21, 3-30, 4-154, 5-216, 6-227, 7-258, 8-261, 9-270, 10-275

உதிரிகள் 4

மொத்த ஓட்டங்கள் 275

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அண்டர்சன் | 22 | 5 | 62 | 3 |
| பின் | 22 | 4 | 51 | 1 |
| பிரஸ்னன் | 21 | 3 | 47 | 2 |
| பட்டேல் | 16 | 3 | 32 | 0 |
| சுவான் | 28.1 | 4 | 75 | 4 |
| பீற்றர்ஸன் | 2 | 0 | 4 | 0 |

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ட்ரோஸ் | c பிர.ஜெயவர்த்தன b டில்ஷான் | 61 | 126 | 4 | 0 |
| குக் | (ஆட்டமிழக்காமல்) | 71 | 227 | 7 | 0 |
| ரொட் | (ஆட்டமிழக்காமல்) | 15 | 44 | 1 | 0 |

இலக்கு இழப்பு: 1-122.

உதிரிகள் 1

மொத்த ஓட்டங்கள் 154

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| லக்மால் | 13 | 3 | 34 | 0 |
| தம்மிகபிரசாத் | 9 | 4 | 24 | 0 |
| ஹேரத் | 19 | 2 | 46 | 0 |
| டில்ஷான் | 8 | 1 | 16 | 1 |
| ரந்தீவ் | 17 | 4 | 34 | 0 |

# ஹர்பஜன் சிறந்த வீரர்

ஹர்பஜன் போராட்ட குணம் கொண்ட மிகச் சிறந்த வீரர். அணித்தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு தகுதியான நபர். நான் இதை சொல்வதால் சச்சின் தகுதி குறைந்த நபர் என்று தவறாக புரிந்துக்கொள்ளக் கூடாது, என்று அணித் தலைவர் டோனி கூறினார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ரசிகர்களுக்காக புதிய வடிவிலான 'ரீ- சேட்டுக்கள்', தொப்பிகள் உள்ளிட்ட பொருள்களை சென்னையில் அறிமுகம் செய்து வைத்த அணியின் தலைவர் டோனி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த நான்கு தொடரைப் போலவே இந்த முறையும் சிறப்பாக செயல்படுவோம். எங்கள் அணியில் திறமையான வீரர்கள் உள்ளனர். அஷ்வின், அனிருத் போன்ற வீரர்கள் சிறப்பாக செயல்படுவார்கள். அனைத்து போட்டியிலும் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைப்போம். இறுதி ஆட்டம் குறித்து நாங்கள் இப்போது யோசிக்கவில்லை. மீண்டும் தலைமுடியை நீளமாக வளர்ப்பீர்களா என்று கேட்கின்றனர். சென்னையில் வெயில் அதிகமாக இருப்பதால், இப்போது முடி குறைவாக இருப்பதே சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். அடுத்த ஓரிரு மாதங்களில் மீண்டும் நீளமான முடியை வளர்ப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். என்னை கவர்ந்த மிகச்சிறந்த வீரர் சச்சின். அவருக்கு சென்னையிலும் அதிக ரசிகர்கள் இருக்கின்றனர். மும்பை அணியின் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் ஹர்பஜன் போராட்ட குணம் கொண்ட மிகச்சிறந்த வீரர். விளையாட்டை ரசிப்பவர். துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சிலும் அவர் தனது திறமைகளை வெளிப்படுத்தி உள்ளார். அணித்தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு தகுதியான நபர். நான் இதை சொல்வதால் சச்சின் தகுதி குறைந்த நபர் என்று தவறாக புரிந்துக்கொள்ளக் கூடாது - என்றார்.

# வீழ்ந்தது சென்னை


அதிரடியாக ஆடும் லெவி

சென்னை, ஏப்.5

மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லெவியின் அதிரடியில் சொந்த மைதானத்திலேயே தோற்றுப்போனது சென்னை.

5ஆவது ஐ.பி.எல். போட்டிகளில் முதல்ஆட்டம் நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸூம், மும்பை இந்தியன்ஸூம் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ஹர்பஜன் சிங் முதலில் துடுப்பெடுத்தாடும்படி பணித்தார்.

சொந்த மைதானத்தில் நம்பிக்கையோடு களம் இறங்கிய சென்னை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பிளஸிஸ் 3 ஓட்டங்களுடன் வெளியேறி அதிர்ச்சி அளித்தார். அதன் பின் சென்னையின் வீழ்ச்சி சடுதியாக நிகழ்ந்தது. சுரேஷ் ரெய்னா மாத்திரம் மும்பை அணியின் பந்து வீச்சை சமாளித்து, 36 ஓட்டங்களை எடுத்தார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களோடு வெளியேற சென்னை அணி 19.5 பந்துப்பரிமாற்றங்களில் 112 ஓட்டங்களை எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது. மும்பை அணி சார்பில் மலிங்க, ஓஜா, போலார்ட் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

113 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி சென்னையின் பந்துகளை துவம்சம் செய்தது. எனினும் சத நாயகன் சச்சின் உடல் உபாதை காரணமாக 16 ஓட்டங்களுடன் களத்தில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் களம் இறங்கிய ரோகித் சர்மா ஓட்டம் எதனையும் பெறாமல் வெளியேற சென்னை அணி மத்தியில் நம்பிக்கை துளிர்த்தது. எனினும் மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லெவி அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார். எனினும் அவர் 50 ஓட்டங்களுடன் பிராவோவின் பந்தில் வீழ்ந்தார். அதன் பின்னர் அம்பதிராயுடுவும், பிராங்கிளினும் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இதனால் மும்பை இந்தியன்ஸ் அணி 16.5 பந்துப் பரிமாற்றங்களில் 115 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது. அம்பதிராயுடு 18 ஓட்டங்களுடனும், பிராங்ளின் 25 ஓட்டங்களுடனும் களத்தில்இருந்தனர்.

அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்த மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் லெவி ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

(ங)

# தனியான அட்டவணை தாருங்கள்

ஐ.பி.எல். போட்டிக்குத் தனியாக கால அட்டவணை வழங்கப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரும், முன்னாள் தலைவருமான ரிக்கி பொன்டிங் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

2008 ஆம் ஆண்டில் ஐ.பி.எல். போட்டி ஆரம்பிக்கப்பட்டபோது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றியிருந்த ரிக்கி பொன்டிங், சர்வதேசப் போட்டியை விடுத்து ஐ.பி.எல். போட்டியை தெரிவுசெய்வதற்கான காரணங்களை தன்னால் புரிந்துகொள்ள முடிவதாகத் தெரிவித்தார்.

தங்கள் நாடுகளுக்காக விளையாடுவதைத் தவிர்த்து பணங்கொழிக்கும் ஐ.பி.எல். போட்டியைத் தெரிவு செய்யும் விடயத்தைத் தன்னால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடிவதாகத் தெரிவித்த அவர், அதனைத் தடுக்க ஐ.பி.எல். போட்டிக்குத் தனியான கால அட்டவணை சர்வதேசப் போட்டியின் நடுவே வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

தங்கள் நாடுகளுக்காக விளையாடுவதை விட 'ரி-20' தொடர்களில் வீரர்கள் அதிகமாக உழைக்க முடிவதன் காரணமாக வீரர்கள் 'ரி-20' தொடர்களைத் தெரிவுசெய்கிறார்கள் எனத் தெரிவித்த அவர், இதற்காக வீரர்களின் பக்கம் பிழையுள்ளதாகக் கருத முடியாது எனத் தெரிவித்தார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இதற்கு சிறந்த முன்னுதாரணம் எனத் தெரிவித்த ரிக்கி பொன்டிங், ஐ.பி.எல். போட்டி இடம் பெறும் காலப்பகுதியில் நியூஸிலாந்து அணி சர்வதேசப் போட்டி எவற்றிலும் பங்குபற்றுவதில்லை எனத் தெரிவித்தார்.

அவ்வாறு போட்டியை நடத்தினால் ஏராளமான வீரர்களை நியூஸிலாந்து இழக்க வேண்டி ஏற்படும் என்பதை அந்தக் கிரிக்கெட் சபை புரிந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்த பொன்டிங், நியூஸிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் கற்றுக்கொண்டுள்ள பாடங்களிலிருந்து ஏனைய கிரிக்கெட் சபைகளும் கற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணி பங்குபற்றவுள்ள நிலையில் மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் டெஸ்ட் போட்டியைத் தவிர்த்து ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றவுள்ளதாக அறிவித்துள்ளார். அத்தோடு கிறிஸ் கெயிலும் ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

கிறிஸ் கெயில் இல்லாத மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி தடுமாறும் எனத் தெரிவித்த ரிக்கி பொன்டிங், எனினும் நவீன சர்வதேசப் போட்டிகளில் இது அடிக்கடி இடம்பெறுவதாகத் தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் **O/L DAY CLASS**
இங்கு மட்டுமே
**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரிவு II **O/L DAY CLASS 8.30-2.00**
ஆரம்பம் 06.04.2012 Fri -8.30
- இவ்வருடம் 6 பிரிவு மட்டுமே
- பிரிவு I க்கு ஒரு சில அனுமதிகள்
- பிரிவு 3 மிக விரைவில்

தொடர்பு: 0776629137

---

# BEACON
கல்வி நிலையம்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
## A/L 2014
**கலை வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம் : 07.04.2014 சனி 8.00
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பகீரதன்
வணிகக் கல்வி - முரளி

---

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
**A/L - 2014**
**தமிழ்**
பிரிவு - II செவ், வியா 10-11.30 AM; சனி, ஞாயிறு 10-11.00 AM
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
**ந. சத்தியவேந்தன்**
(B.A (Hons) M.Phil,Jaffna)
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

---

Note: A/L 2013, A/L 2014 ...
பிரிவு II - Sat, Sun 5.00 - 6.00 p.m.
பிரிவு I - Sat, Sun 6.15 - 7.15 a.m.
ஆரம்பம்: 07.04.2012
**PHYSICS**
M.Sc B.Sc (Spl)
**NEC**

---

**புதிய பொருளியல் கல்லூரி**
மணிக்கூட்டு வீதி, யாழ். (பெருமாள் கோவில் அருகில்)
## A/L 2014
**கலை, வர்த்தகப் பிரிவுகள்**
ஆரம்பம்: ஏப்ரல் - 07 சனி காலை 8.00மணி

---

# NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
## A/L 2014
**கலை, வர்த்தக, கணித உயிரியல் பிரிவுகள்**
ஆரம்பம்: ஏப்ரல் - 07 சனி காலை 8.00மணி

---

**வான் விற்பனைக்கு**
டொல்பின் வான் விற்பனைக்கு
தொடர்பு:
0779238564

---

**ACADEMY of LOGIC**
பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி
## A/L 2014
| கலை | வர்த்தகம் |
|---|---|

ஆரம்பம் : 07.04.2012
சனி காலை 8.00

---

**WIN**
**A/L**
கலை
வர்த்தகம்
2014, 2013
ஆரம்பம் : 06.04.2012

---

அறிவித்தல்
பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
கணக்கீட்டு ஆசிரியரின் சனி, ஞாயிறு (07,08/04/2012) வகுப்புக்கள் வழமை போல் நடைபெறும்.
ஆசிரியர்
B. முகுந்தன்

---

## A/L 2014
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஏப்ரல் - 07
காலை 9 மணி
**D.M.I Jaffna**

---

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111

---

**ஆங்கிலத்தைப் படிக்காதீர்கள்! பழகுங்கள்!!**

இரண்டு தொடக்கம் நான்கு வயதிற்குள் தமிழ் மொழியைப் பேசப் பழகிய உங்களால், 8 வயது தொடக்கம் இன்று வரை பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலத்தை கற்றுவிட்டு ஏன் அதை பேச முடியாமல் இருக்கிறது?

தமிழ் பழகியதைப் போலன்றி ஆங்கிலத்தை வகுப்பறையில் புத்தகம், CD வாயிலாகவும், எழுதி மனனம் செய்யும் முயற்சித்தமையே காரணம் ஆகும்.

நீங்கள் தமிழ் பழகியதைப் போல அடிப்படையிலிருந்து ஆங்கில வசனம் உருவாக்கவும், ஒவ்வொரு வகுப்பிலும் 2 மணிநேர ஆங்கில உரையாடல் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே நாம் 3 மாதங்களில் ஆங்கிலத்தை சரளமாகப் பேசப் பயிற்றுவிக்கிறோம்.

புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம் - 07/04/2012

சனி, ஞாயிறு பிரிவுகள் (ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்)

| | |
|---|---|
| பிரிவு I 08 - 10 | பிரிவு III 01 - 03 |
| பிரிவு II 10 - 12 | பிரிவு IV 03 - 05 |

கட்டணம் ரூபா 3000.00

**SAAMSON ENGLISH**
279, ஆஸ்பத்திரி பின் புறம், யாழ்ப்பாணம்.
TEL : 077 621 4567

---

# Walk - in - Interview
**Permanent & Visiting Lecturers**
**(CIVIL ENGINEERING / QUANTITY SURVEYING)**

Applications are invited from suitably qualified candidates to fill the above vacancies in our Campus

**Qualifications**
1. A degree in Civil Engineering / Quantity Surveying or NDT or equivalent and membership of a Professional Institution.
2. A flair for teaching /ability to teach in English

Those who are interested please meet us on 6th April from 10.00 am to 4.00 pm with all the relevant documents.

**IIS CITY CAMPUS**
200,Sivan Pannai Road, Jaffna.
T.P :021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk ,Web :iis.edu.lk

---

**ENGLISH/FRENCH**
இலவச வகுப்பும் சான்றிதழும்

| ஆங்கிலம் | பிரெஞ்ச் |
|---|---|
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| காலை 8.00 - 9.00 | காலை 9.00 - 10.00 |
| காலை 10.00 - 11.00 | மாலை 5.00 - 6.00 |
| மாலை 4.00 - 5.00 | நெல்லியடி |
| சாவகச்சேரி | மாலை 1.00 - 2.00 |
| காலை 11.30 - 12.30 | |
| நெல்லியடி | |
| மாலை 2.00 - 3.00 | |


நாள்: 06.04.2012 வெள்ளிக்கிழமை அரச விடுமுறை
அனுமதி இலவசம்
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
நகரசபை எதிரில், சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி
**MyWay 077 33 63 456**

---

சர்வதேச தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகள்
குறுகிய காலத்துக்குள், மிகக்குறைந்த கட்டணத்துடன்......

**Rs. 6500 ONLY** COURSE & EXAMS

ICDL
International Computer Driving Licence



- Concepts of ICT
- Using the Computer and Managing Files
- Word Processing
- Spreadsheets
- Using Databases
- Presentation
- Web Browsing and Communication

**Gateway**
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

---

புதிய உதயம்....
**யூனிவேர்சல்**
கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
(பட்டப்படிப்புகள் கல்லூரியில்)
## A/L 2014
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
7.4.2012 8 am
யூனிவேர்சலின் புதுமையான ஆசிரியர்களின் சேவை.

---

# எங்களுடன் இனிய புத்தாண்டை கொண்டாடி மகிழுங்கள்



புதுவருட வாழ்த்துக்கள்

டிஜிற்றல் பெயர்ப்பலகைகளுக்கு **50%** விலைக்கழிவு
ஏப்ரல் 30ஆம் திகதி வரை

உங்கள் பெயர்ப்பலகையை இன்றே மாற்றுங்கள்

3 YEARS WARRANTY

Colour Digital Printing

**ANDRA**
DIGITAL IMAGE
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(உதயன் பணிமனைக்கு அருகாமையில்)
6D, உப்புமடம் சந்தி, K.K.S. வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.இல: 077 748 1696, 021 222 8929
யாழ்ப்பாணத்தின் ஒரே தெரிவு
மாற்றங்களில் மகிழுங்கள்



**திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்**
**30%** விலைக்கழிவு
உங்கள் திருமணத்தை விழாக்கோலமாக மாற்றுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.